உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 18 செவ்வாய்க்கிழமை (03.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 250


# வடக்கில் சிங்களக் குடியேற்றம்; தமிழரின் காணிகள் சுவீகரிப்பு!

## 10,000 ஏக்கரைக் கையகப்படுத்த உள்ளதாகக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓகஸ்ட் 03

வடபகுதியில் சிங்களக் குடியேற்றங்களுக்காகத் தமிழ் மக்களின் பத்தாயிரம் ஏக்கர் காணியை அரசு கையகப்படுத்த உள்ளது எனக் குற்றஞ்சாட்டுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு வீடுகளை அமைப்பதற்காகவே இந்தக் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன எனக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தக் காணிகளில் இராணுவத்தினரும் அவர்களது குடும்பத்தினரும் குடியேற்றப்படும் சந்தர்ப்பத்தில் வடக்கின் மக்கள் விகிதாசாரத்தில் சிங்களவர் 30 சதவீதத்தினர் ஆகிவிடுவர் என்றும் அவர் எச்சரித்தார்.

கூட்டமைப்பின் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை கொழும்பு ரேணுகா ஹோட்டலில் நடைபெற்றது. கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் இச்செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

சுமந்திரன் அங்கு கூறியவை வருமாறு:-

அரசு எம்மிடமும் இந்தியா உட்பட சர்வதேச நாடுகளிடமும் யுத்தத்தால் இடம் பெயர்ந்த மக்களை அவர்கள் வாழ்ந்த இடங்களிலேயே மீளக் குடியமர்த்துவதாக உறுதியளித்தது. ஆனால் நடப்பது வேறு விதமாக இருக்கிறது. இது அரசு மேற்கொள்ளும் விடயமா அல்லது இராணுவம் மேற்கொள்ளும் (23ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பொதுச்சபை விவாதத்தில் மஹிந்த

கொழும்பு, ஓக. 03

நியூயோர்க் நகரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை விவாதத்தில் கலந்து கொள்வதற்கான பெயர்ப் பட்டியலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெய ரும் சேர்க்கப்பட்டுள்ளது என இன்னர் சிற்றி பிரஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை தொடர்பாக ஆராய்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டதை அடுத்து, ஜனாதிபதி கலந்துகொள்ள உள்ள முதலாவது கூட்டத் தொடர் இதுவாகும்.

இதேவேளை, ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவுக்கு இலங்கை அரசு ஆட்சேபனை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## சீனா வழங்கிய நவீன வீட்டுத் தொகுதிகள் வன்னியின் அடர்ந்த காட்டுப் பகுதிகளில்

இரணைமடு, ஓக 3

சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஒரு தொகுதி நவீன வீட்டுத் தொகுதிகள் வன்னியின் அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏ-9 வீதிக்குக் கிழக்கே கொக்காவில் பகுதியில் பாரியளவிலான பாதைகளை அமைத்து காட்டின் உள்பகுதிக்குள் இந்த வீடுகள் அமைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றினைவிட இந்தப்பகுதிகளில் மரவேலைப்பாடுகளுடன் கூடிய மாடிக் கட்டடங்களும் அமைக்கப்படுவது அறிய வந்துள்ளது.

இவ்வாறு குடியிருப்புக்களை இரகசியமாக அமைக்கும் பகுதிகளில் ஆங்காங்கே பௌத்த விகாரைகளும் நிறுவப்படுவதாகக் கூறப்படுகிறது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## அனுராதபுரத்துக்கு மாற்றப்பட்ட வழக்குகள் மீண்டும் யாழ். நீதிமன்றுக்கே வந்தன

யாழ்ப்பாணம், ஓக 3

யாழ். நீதிமன்றத்தில் இருந்து அனுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றப்பட்ட 10 பேருக்கு எதிரான வழக்குகள் மீண்டும் யாழ். நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட உள்ளன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பத்துப் பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் யாழ். நீதிமன்றத்தில் முன்னர் விசாரணை செய்யப்பட்டன.

திடீரென இந்த வழக்குகளை அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றும் உத்தரவு சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ். நீதிமன்றத்துக்கு கிடைத்திருந்தது.

அதனை அடுத்து இந்த முடிவை ரத்துச் செய்யுமாறு கோரிக் கைதிகள் உண்ணாவிரதம் (24ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் எதுவும் இல்லாத நிலை விரைவில் தோற்றுவிக்கப்படும்

## அடுத்த மாதத்தில் வடமராட்சி கிழக்கில் நீக்கப்படும்



யாழ்ப்பாணம் ஓக. 3

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் எதனையும் இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று யாழ். மாவட்டக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக வடமாராட்சி கிழக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயம் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் முற்றாக அகற்றப்படும் என்றும் அவர் கூறினார்.

வடக்கு கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களை முற்றாக அகற்ற முடியாது என்று அரச தரப்பு ஊடகப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சில வாரங்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்த நிலை யில் இராணுவத் தளபதியின் இந்தக் கூற்று வெளியாகி உள்ளது.

15 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து வந்த யாழ். குருநகர் சீநோர் சந்தைப் பகுதியிலிருந்து புதிய கடற்கரையை நோக்கிச் செல்லும் வீதியை மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க நேற்றுத் திறந்து (24ஆம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினர்கள் ஒரு சிலருக்கு எதிராக மட்டுமே இப்போது சட்ட நடவடிக்கை; ஏனையோர் மீது பின்னரே

### ஓராண்டின் பின்னர் பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு ஓக. 03

போர் முடிவடைந்து ஒன்றரை வருட காலம் கடந்துவிட்ட போதும் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் ஒரு சிலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கே தாம் தயாராகி இருக்கின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

''புலி உறுப்பினர்கள் நான்கைந்து பேர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கே நாம் இப்போது தயாராக இருக்கின்றோம். ஏனையவர்கள் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. அவர்களும் குற்றம் செய்தார்கள் என்று நிரூபிக்கப்பட்டால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்'' - என்று தெரிவித்தார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயகொடி.

முன்னாள் புலி உறுப்பினர்கள் 1350 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என நேற்று இணைய ஊடகங்களில் வெளியான செய்திகளை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அடியோடு மறுத்தார்.

சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட உள்ள புலி உறுப்பினர்களில் 650 பேர் வவுனியா (24ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் டெங்கு ஒழிப்பின் போது நேற்று 3 பாடசாலைகளில் அடுத்தடுத்து வெடித்தன குண்டுகள்!

கிளிநொச்சி, ஓக. 03

கிளிநொச்சியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் பாடசாலை சமூகத்தினர் ஈடுபட்டிருந்தபோது மூன்று குண்டுகள் திடீரென வெடித்தன. எனினும் இதனால் எவருக்கும் காயங்களோ வேறு சேதங்களோ ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் அனைத்துத் தரப்பினரும் ஈடுபட வேண்டும் என அரசு அறிவித்திருந்தது. இதனை அடுத்து நேற்றைய தினம் கிளிநொச்சியில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் சுற்றாடலைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

குப்பைகளைக் கூட்டி ஓரிடத்தில் குமித்து தீ வைத்த போது மூன்று இடங்களில் திடீரென குண்டுகள் வெடித்தன.

கல்லாறு மகாவித்தியாலத்தில் காலை 8 மணியளவிலும் பளை தர்மக்கேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 10 மணியளவிலும் தர்மபுரம் அரசினர் தமிழ்க் கலவன் (24ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

*எமது அலுவலக உத்தியோகத்தர்*
**ச.கதிர்வேற்பிள்ளை**
*அவர்களின் மாமனார்*

### கந்தையா தங்கத்துரை

*அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

***காணி மாவட்டப் பதிவகம், யாழ்ப்பாணம்.*** (சி-569640) **ஊழியர் நலன்புரி சங்கம்.**

## கண்ணீர் அஞ்சலி



நல்லூரைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பிரபல தவில் வித்துவான்

### நல்லரசு முருகானந்தம்

மரணமான செய்திகேட்டு கவலையடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயர் அடையும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*நல்லூர்.* **பிச்சையப்பா ரவி - ரஜி சகோதரர்கள்.**

## மரண அறிவித்தல்

### *காராளசிங்கம் மகேஸ்வரி*



பருத்தித்துறை கந்தஉடையார் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காராளசிங்கம் மகேஸ்வரி நேற்று (02.08.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மீனாட்சி தம்பதியரின் மகளும் முருகேசு - மீனாட்சி தம்பதியரின் மருமகளும் காராளசிங்கத்தின் அன்பு மனைவியும் பகீரதி, பாரதி, பிரதீபா ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.08.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது றஞ்சன் வாசிகசாலை வீதியிலுள்ள தற்போதைய இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*றஞ்சன் வாசிகசாலை வீதி,*
*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.*

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### *திருமதி கிருபாநிதி பவசிங்கம்*

*BA (Hons), Dip.in Education, Dip.in.Hindu Civilization, M.phil.*
*(ஓய்வுபெற்ற உப அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி)*



நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருபாநிதி பவசிங்கம் கடந்த 28.07.2010 புதன்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மூத்த மகளும் ஏழாலை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு இளைய மருமகளும் காலஞ்சென்ற கந்தையா பவசிங்கத்தின் (ஓய்வுபெற்ற காசாளர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) இணைபிரியா மனைவியும் சர்மிலி (இந்தியா), கோஷலி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் யோசுவா (பிரான்ஸ்), விக்ரர் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமியும் விஜேந்திரனின் (ஆசிரியர்) பாசமிகு வளர்ப்புத் தாயும் சினேகா, நிகிற்றா ஆகியோரின் செல்ல அம்மம்மாவும் சாந்தி, திரு, தயா, அருளி ஆகியோரின் அன்பு மூத்த சகோதரியும் சாந்தாவின் உடன்பிறவாச் சகோதரியும் ராஜசிங்கம், பாலசிங்கம், பரமேஸ்வரி, தவமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான குலசிங்கம், வீரசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் சரஸ்வதியம்மாவின் பாசமிகு பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் உடுவிலில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அவரது நல்லடக்க ஆராதனை நாளை (04.08.2010) புதன்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்றுத் தொடர்ந்து உடுவில் திருச்சபை தேவாலயத்திற்கு வழிபாட்டிற்காக எடுத்துச்செல்லப்பட்டு உடுவில் திருச்சபை கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

"குமார வாசா"
டச்சு வீதி, உடுவில்.
தொ.பே: 021-3213532

(101320)

**தகவல்:**
**பிள்ளைகள்.**

## போதையுடன் வாகனம் செலுத்திய நால்வருக்கு ரூ.42 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி, ஓக.3

மது போதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 42 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாரதிய அனுமதிப்பத்திரமின்றி மது போதையில் வாகனம் செலுத்திய நபருக்கு 12 ஆயிரம் ரூபாவும் ஏனைய மூவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா மூன்று மாதம் வீதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ஒ-207)

## விளக்கமறியல் மேலும் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஓக.3

சாவகச்சேரி மாணவன் கபிலநாத் படுகொலை தொடர்பான வழக்கின் மூன்று சந்தேக நபர்களையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இவ் வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா, ஓகஸ்ட் 16ஆம் திகதி வரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-207)

## பாலர் பராமரிப்பு நிலையங்களுக்கு சமூகசேவை திணைக்களம் உதவி

தென்மராட்சி பிரதேச பாலர் பகல் பராமரிப்பு நிலையங்களுக்குரிய காலாண்டுக்கான கட்டணத் தொகை மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பூவேந்தன், கைதடி பராசக்தி, கொடிகாமம் தெற்கு, மந்துவில் கிழக்கு ஆகிய பாலர் பகல் பராமரிப்பு நிலையங்களுக்குரிய கட்டணங்கள் கிடைத்துள்ளன.

உரிய பாலர் பாடசாலைகளின் நிர்வாகத்தினர் தமக்குரிய கொடுப்பனவினை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (ஜ-207)

## தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம்

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்) தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பிரதேச திணைக்களத் தலைவர்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் உடனுக்குடன் உரிய திணைக்களங்களின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டன. (ஒ-207)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 21.08.1951 இறப்பு 04.07.2010

அமரர்

### மாரிமுத்து விக்கிரசிங்கம்

*பாசமுடன் பலகதைகள் எமக்குப்*
*பாங்காக எடுத்துரைத்த பாசமிகு அப்பாவே!*
*பாரெல்லாம் தேடுகிறோம் உம்மை*
*பாச மலர்களைப் பாராது ஒளிந்ததேனோ?*
*நலிந்து வாடுகின்றோம் நாமிங்கு*
*நாமிருக்கும் வரை தீராது உம் பிரிவு.*

Dr.நடராஜா வீதி,
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

**அன்பு மனைவி,**
**பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்கள்

### *சின்னையா சோதிலிங்கம்*



குருந்து வீதி, தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் பிராம் ஒடை, கோப்பாய் வடக்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சோதிலிங்கம் (01.08.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிலிங்கம் - நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் விமலராசா - தனுஷா, தவநேசன் - தர்ஷினி, சுதர்சன் (சுதன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2010) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிராம ஒடை,*
*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.*

தகவல் :
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**
(101411)

### *செல்வி திருஞானவதி (குண்டுமணி) கனகராசா*



சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி திருஞானவதி (குண்டுமணி) கனகராசா நேற்று (02.08.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகராசா மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் ஏக புத்திரியும், திருஞானசம்பந்தரின் அருமைச் சகோதரியும் கல்பனாவின் (மாகாண பொது நிர்வாக அலுவலகம், திருகோணமலை) மைத்துனியும் லக்ஸ்மன், மனோஜன் (இந்துக் கல்லூரி, திருகோணமலை) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.08.2010) பி.ப. 2 மணிக்கு, அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

தகவல் :
**திருஞானசம்பந்தர்**
**(தம்பி - சம்பந்தர்)**

### *கிட்டிணபிள்ளை சிவராசா*



புத்தூர் வடக்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணபிள்ளை சிவராசா நேற்றுமுன்தினம் (01.08.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்டிணபிள்ளை சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி-சின்னம்மா தம்பதியரின் மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் சுகந்தினி, கமலசேகர் ஆகியோரின் தந்தையாரும் கோணேஸ்வரனின் மாமனாரும் சதுஸ்ரா, திரேகா ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2010) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணியளவில் கிந்துசிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் வடக்கு,*
*புத்தூர்.*

(101416)

தகவல் :
கமலசேகர் *(மகன்)*
கோணேஸ்வரன் *(மருமகன்)*

DHL WORLDWIDE EXPRESS
உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
உலக நாடுகளுக்கு ஆகாய கடல் வழி மார்க்க பொதிகள் சேவை
தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிற்கான தபால்கள் பொதிகள் சேவை
DHL விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை DHL
நாட வேண்டிய முகவரி
259 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்
லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06
44. மில் றோட், வவுனியா
திருநகர் வீதி, கிளிநொச்சி
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம் பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழ் இளைஞர்கள் என்றால் எதுவும் செய்யலாம் என்பதா?

விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்குச் சர்வதேச ரீதியில் நிதி சேகரித்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வழங்கியவர் கே.பி.எனப்படும் குமரன் பத்மநாதன். அவருக்கு இலங்கை அரசு சுகபோகங்களை வழங்கி உள்ளது. அதே வேளையில் புலிகளால் கட்டாய ஆள் சேர்ப்புச் செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்கள் விசாரணை எதுவுமின்றிச் சித்திரவதையை அனுபவிக்கின்றனர். குற்றம் இழைத்தவர் சுதந்திரமாக நடமாடித் திரிகிறார். ஆனால் அப்பாவிகளோ சிறையில் அடைத்து வைக் கப்பட்டு இருக்கிறார்கள். இதுதான் இந்த நாட்டின் சட்டமும் ஒழுங்குமா? -

இவ்வாறு கேள்வி எழும்பி உள்ளார் ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பியின்) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா.

சட்டமும் நீதியும் அரசாங்கத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு வளைக்கப்படுகின்றன என்பதற்கு அவர் எடுத்துக் காட்டியுள்ள உதாரணங்கள் இவை. இந்த உதாரணங்களைத் தாம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் விவரித்துள்ளார் ரில்வின்.

கே.பி.கைது செய்யப்பட்டு எதிர்வரும் ஆறாம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது. ஆனால் அவர் விசாரணை செய்யப்பட்டாரா என்பது தெரியாது. அவர் தொடர்பான ''பி.றிப்போர்ட்'' இன்னும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. நிலைமை இவ்வாறிருக்க...

விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டு, பெரும் எண்ணிக்கையான தமிழ் இளைஞர்கள் விசாரணை எதுவுமின்றிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எங்கெங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரம் தெரியாமல் கடந்த பதினேழு மாதங்களாக அவர்களின் உறவுகள் அல்லாடுகிறார்கள் - என்ற தகவலையும் வெளியிட்டிருக்கிறார் ரில்வின்.

கே.பியை ஒரு புறம் வைத்துவிடுவோம் -

விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் என்று வெறுமனே கருதப்பட்டு அல்லது சந்தேகிக்கப்பட்டு மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர். வெலிகந்த், திருக்கோணமடு, கந்தடுவ ஆகிய இடங்களில் உள்ள தடுப்பு முகாம்களில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதாவது சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் மேனி மினுக்காகக் கூறினாலும், அவை சிறைக்கூடங்களை விட மோசமானவை. அவர்கள் மீது விசாரணை எதுவும் நடத்தாமல் புனர்வாழ்வு என்ற பெயரில் அவர்கள் பல வகைகளிலும் மறைமுகமாகச் சித்திரவதை செய்யப்படுகிறார்கள்!.

தகரக் கூடாரங்கள்தான் அவர்களின் தரிப்பிடம். அதிக வெப்பம் நிலவும் இந்த நாள்களில் அங்கு தங்கி வசிக்க வைத்திருப்பது அவர்களைக் கருக்கி வதக்கவே. தண்ணீர்ப் பிரச்சினையும் மருந்துத் தட்டுப்பாடும் அங்குள்ளவர்களைக் கசக்கிப் பிழிந்து அவையூடு நோயாளிகளாக்குவது எதிர்மறையான வன்செயல்.

இவர்களை அவர்தம் பெற்றோர், உறவினர் சென்று சந்தித்து வருவது இமயமலையில் ஏறும் முயற்சி போன்றது. கிளிநொச்சியிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் வெலிகந்தவுக்குப் பயணம் செய்வதற்குப் பாடாய்ப் படவேண்டும்.

இந்த இளைஞர்களை விசாரணையும் செய்யாமல், சட்டப்படி நீதிமன்றத்தின் முன் நிறுத்தி அவர்கள் குற்றவாளிகள் அல்லர் என்று தீர்ப்புப் பெற முயற்சியும் செய்யாமல், தடுத்து வைப்பது பெரும் மனித உரிமை மீறலாகும். அரசும், அதன் அதிகாரிகளும் இந்த இளைஞர்களைப் புனர்வாழ்வு என்ற பெயரில் வதைப்பது மனித நேயமற்றதாகும்.

தமிழ் மக்கள் என்றால், தமிழ் இளைஞர்கள் என்றால் சட்டம், நீதி என்ற எந்த எடுகோளும் அவர்களுக்குப் பொருந்தாது. வேண்டுமானால் அவற்றை நிலாக் காட்டி வாட்டி வதைக்கலாம் என்ற எழுதப்படாத விதி இந்த நாட்டில் ஆண்டாண்டு காலமாக ஒப்பேறி வருகிறது!.

இதுவும் இந்த நாட்டில் தமிழர்களின் அரசியல் உரிமைகள் அப்பட்டமாக மறுக்கப்பட்டு வருவதன் சமாந்தரமான செயற்பாடே!.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட்ட எந்தக் ''கொம்பன்'' சொன்னாலும், இலங்கை அரசின் ''நீதி'' என்பது, தமிழர்களின் உரிமைகளைப் பிடுங்கி எறிவதில் இருந்து அதனைத் தடுத்து நிறுத்த முடியாது என்றாகி விட்டது!.

# வடக்கில் சிறுவர் மேம்பாட்டுக்கு யுனிசெவ் மீண்டும் உதவி புரியும்

## 3.5 மில்லியன் அமெ.டொலர் ஒதுக்கீடு

கொழும்பு,ஓக.3

வடக்கில் சிறுவர் பாதுகாப்புப் பணிகளை மீளவும் நடைமுறைப்படுத்துவதற்கென ஐ.நா சர்வதேச சிறுவர்கள் அவசரகால நிதியம் (யுனிசெவ்) இந்த வருடத்தில் 3.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யவிருக்கின்றது. வடக் கில் இவ்வாறு உதவிகள் தேவைப்படுகின்ற 4000 சிறுவர்களை யுனிசெவ் அடை யாளம் கண்டுள்ளதா கத் தெரிய வருகின்றது. இவர்களில் பெற்றோரை இழந்து அநாதை களானவர்கள் உடல் நிலை பாதிக்கப் பட்டுள்ளவர்கள் அல்லது முன்னர் ஆயுதக் குழுக் களுடன் தொடர்பு வைத்திருந்த வர்கள் போன்றோர் காணப்படுகின்றனர்.

இந்தப் பணியில் யுனி செவ் சமூக சேவைகள் சிறுவர் அபிவிருத்தி அமைச்சுகள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவதாகத் தெரியவருகின்றது. உடல் நிலை பாதிக்கப்பட்ட சிறுவர்களின் புனர்வாழ்வுக்கும் ஆயுதக் குழுக்களுடன் முன்னர் இணைந்திருந்தவர்கள் தமது குடும்பங்களுடன் இணைந்து கொள்ளவும் யுனிசெவ் உதவி புரிவதாகத் தெரிய வருகின்றது.

# யாழ். மாவட்ட அரச திணைக்களங்களில் டெங்கு ஒழிப்பு வைபவ ரீதியாக ஆரம்பம்

யாழ்ப்பாணம் , ஓக.3

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் வைபரீதியாக நேற்று அங்குராப்பணம் செய்துவைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

வடமாகாண டெங்கு ஒழிப்பு செயலணிக் குழுவின் தலைவரும், வடமாகாண ஆளுநருமான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி , பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இந்த நிகழ்வுகளில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் சார்பாக யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலத்தில் காலை 9.30 மணிக்கும் அரச திணைக்களம் சார்பாக யாழ். மாநகர சபையிலும் முற்பகல் 11 மணிக்கும் டெங்குஒழிப்பு அங்குராப்பண நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் அதிபர் ஞானகாந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வின்போது குப்பை சேகரிக்கும் பிளாஸ்ரிக் கூடைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறியினால் யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகத்திடம் அவை கையளிக்கப்பட்டன.

யாழ். மாநகர சபையின் முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வின் போது யாழ். மாநகர சபைக்கும், யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளுக்கும் என வாகனங்கள் கையளிக்கப்பட்டன. தண்ணீர் பவுசர், டிராக்ரர்கள், கழிவகற்றும் பவுசர் என பத்து வாகனங்கள் இதன் போது கையளிக்கப்பட்டன.

வடமாகாண ஆளுநரால் கையளிக்கப்பட்ட இந்த வாகனங்களை வடமராட்சி தெற்கு, சாவகச்சேரி, வலி. தென்மேற்கு, வலி.தெற்கு, வேலணை ஆகிய பிர தேச சபைகளின் செயலாளர்கள் ,யாழ்.மாநகர முதல்வர் ஆகியோர் பொறுப்பேற்றனர்.

இந்த இரண்டு இடங்களிலும் இடம் பெற்ற டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜி.ஏ. சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் அமைச்சர் உள்ளிட்டோர் ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆர்.கேதீஸ்வரன், வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் க.அகிலன், பிரதி சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் பொ.தயானந்தன், மேலதிக கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், உள்ளூராட்சி ஆணையாளர் ஜோன்சன், உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ். பொலிஸ் தலைமை அதிகாரி எல்.சமன் சிகேரா, யாழ்.மாநகரசபை ஆணையாளர் சரவணபவ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (த-14)

# மாவைக்கந்தன் காம்யோற்சவத்தில் நாளை கார்த்திகைத் திருவிழா

## பக்தர்கள் நேரடியாக ஆலயம் செல்ல போக்குவரத்து வசதி

வலி.வடக்கு, ஓக. 3

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய 20 ஆம் திருவிழாவாகிய நாளை புதன்கிழமை பகல் கார்த்திகைத் திருவிழா பக்திபூர் வமாக நடைபெறவுள்ளது.

ஆலயத்தில் கடந்த பல வருடங்களாக திருத்தப்பணிகள் இடம்பெறுவதினால் கொடியேற்றம் இடம்பெறாத போதிலும் உற்சவகாலத்தை ஒட்டி 28 நாள்களும் காம்யோற்சவம் இடம்பெற்று வரு்கின்றது. இந்த ஒழுங்கில் நாளை காலை திருக்கார்த்திகை விழாவும் ஷண்முக அர்ச்சனையும் நடைபெறவுள்ளன.

இன்று காலை 07.30 மணிக்கு ஸ்னபனாபிஷேகத்துடன் ஆரம்பமாகும் உற்சவத்தில் 8.30 மணிக்கு கிருத்திகா பூசை ஆராதனைகளும், 9.30 மணிக்கு இன்னிசைக் கச்சேரிகளும், 10.45 மணிக்கு உருத்திர வீணை இசை ஆராதனையும் நண்பகல் 12.30 மணிக்கு ஷண்முக அர்ச்சனையும் பி.ப. 2 மணிக்கு கார்த்திகைக் குமரன் வீதி வலம் வரும் திருக்காட்சியும் பி.ப. 3 மணி தொடக்கம் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். ஆலயத்திற்கு அடியவர்கள் தமது சைக்கிள் உட்பட அனைத்து வாகனங்களிலும் சென்றுவரக்கூடிய வசதிகளைப் படைத்தரப்பினர் மேற்கொண்டுள்ளார்கள்.

வாகனங்களின் பாதுகாப்பிற்கென வலி.வடக்கு பிரதேச சபையினால் வாகனப் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டு கட்டணம் அறவிடப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து ஆலயத்துக்கு போக்குவரத்துச் சபையின் பஸ்கள் நேரடியாகச் சேவையில் ஈடுபடுகின்றன. (ஐ-க-86)

# கண்ணாடி இழைப்படகு தயாரிக்கும் தொழிற்சாலை காரைநகரில் ஆரம்பம்



காரைநகர் ,ஓக.3

காரைநகர் தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் கண்ணாடி இழைப் படகு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் தோப்புக்காடு பிரதேசத்தில் கடந்த வருட இறுதியிலேயே மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர். இதனையடுத்து இப்பகுதியில் மக்கள் குடியேறினர். மக்களின் மீள்குடியமர்வை அடுத்து கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மீள்புனரமைப்பு செய்யப்பட்டது தோப்புக்காடு கிராம அபிவிருத்திச்சங்கம்.

இந்த அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளின் தீவிர முயற்சியால் இப்பிரதேசத்தில் கண்ணாடி நார் இழைப்படகு தயாரிக்கும் தொழிற்சாலை உருவாக்கப்பட்டு பலருக்கு வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் மீன்பிடித் தொழிலுக்கு தேவையான படகுகளையும் உற்பத்தி செய்து வருகின்றனர்.

இந்த தொழிற்சாலையை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் சென்றுபார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (த-250)

# கிளி. மத்திய கல்லூரி மாணவர் கவனத்துக்கு

கிளிநொச்சி,ஓக.17

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கும் நிகழ்வு நேற்று நண்பகல் 12 மணிக்கு கல்லூரி அதிபர் வி.சி.இரத்தினகுமார் தலைமையில் இடம்பெற்றது.

அனுமதி அட்டைகளைப் பெறாத மாணவர்கள் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கல்லூரிக்கு வந்து அனுமதி அட்டைகளைப் பெறுமாறு அதிபர் அறிவித்துள்ளார். எதிர்வரும் 9 ஆம் திகதி பரீட்சைகள் ஆரம்பமாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (த-ஐ-6-405)

## நாளை

ஆடி 19 04.08.2010
புதன்கிழமை
திதி: : நவமி
மாலை 06.45 வரை
நட்சத்திரம் : கார்த்திகை
[illegible] வரை
சுபநேரம் : 04.34-06.04 வரை
ராகுகாலம் : 12.04-01.34 வரை

# 'சிவ் மகா கங்கா' இலக்கியப் போட்டியில் உதயகுமாருக்கு மூன்று தேசிய விருதுகள்



யாழ்ப்பாணம் , ஓக.3

உயர்கல்வி அமைச்சு, தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் என்பவற்றின் அனுசரணையுடன் 'இளைஞர் களுக்கான நாளை' அமைப்பு நாடளா விய ரீதியில் 'சிவ் மகா கங்கா' இலக் கியப் போட்டியில் பசுபதி உதயகுமார் மூன்று தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

சிறுகதை, கட்டுரை, தொலைக் காட்சி நாடகப் பிரதியாக்கம் என்பவற்றுக்கே இவர் தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார். அளவெட்டியைச் சேர்ந்த இவர் ஜனாதிபதி விருதை இரு தடவைகளும் தேசிய விருதை நான்கு தடவைகளும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் உதயனின் அளவெட்டிச் செய்தியாளராகப் பல வருடங்கள் பணியாற்றியவர். (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

இரத்தினவடிவேலு கண்மணியம்மா
644, முருகன் கோயில் வீதி, அன்புவழிபுரம் வீதி,
திருகோணமலை.

வழக்காளி

வழ. இல. நானாவிதம்/24/10

எதிர்

1. மாவை எஸ். சேனாதிராஜா
பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழரசுக்கட்சி,
16(30), மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

2. இராசவரோதயம் சம்பந்தன்
தலைவர், இலங்கைத் தமிழரசுக்கட்சி,
16(30), மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

எதிராளிகள்

இவ் வழக்கின் மேற்குறித்த வழக்காளி இலங்கைத் தமிழரசுக் கட்சியினதும் அதன் உறுப்பினர்களினதும் சார்பாக மேற்குறித்த எதிராளிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளாரென்றும் குடியியல் நடைமுறைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலை பத்திரிகையில் பிரசுரிக்கக் கட்டளையிடப்பட்டுள்ளபடியால் இவ் வழக்கு 06.08.2010 திகதியன்று இம் மன்றில் காலை 9 மணிக்குக் கூப்பிடப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டு 08 மாதம் 02 ஆம் திகதி

வரைவு
வழக்காளி சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்

(101366)

# அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

சண்முகராசா கௌரிமுகுந்தன்
143, கடற்காட்சி வீதி,
திருகோணமலை.

வழக்காளி

வழ. இல. நானாவிதம்/23/10

எதிர்

1. மாவை எஸ். சேனாதிராஜா
பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழரசுக்கட்சி,
16(30), மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

2. இராசவரோதயம் சம்பந்தன்
தலைவர், இலங்கைத் தமிழரசுக்கட்சி,
16(30), மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

எதிராளிகள்

இவ் வழக்கின் மேற்குறித்த வழக்காளி இலங்கைத் தமிழரசுக் கட்சியினதும் அதன் உறுப்பினர்களினதும் சார்பாக மேற்குறித்த எதிராளிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளாரென்றும் குடியியல் நடைமுறைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலை பத்திரிகையில் பிரசுரிக்கக் கட்டளையிடப்பட்டுள்ளபடியால் இவ் வழக்கு 06.08.2010 திகதியன்று இம் மன்றில் காலை 9 மணிக்குக் கூப்பிடப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டு 08 மாதம் 02 ஆம் திகதி

வரைவு
வழக்காளி சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்

(101365)

# முக்கிய அறிவித்தல்

கிளிநொச்சி நகரத்தில் கடைகளுக்கு முன்பாக பொருள்கள் (குறிப்பாக அஸ்பெஸ்ரஸ் சீற், கம்பி போன்றவை) வீதியோரங்களில் வைக்கப்பட்டுள்ளன. இவை பாதசாரிகளுக்கு மிகவும் அசௌகரியமாக இருப்பதுடன் விபத்துகளும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. அத்துடன் அயற்கடை உரிமையாளர்களுக்கும் அசௌகரியங்கள் எற்படுத்துவதாக எமக்கு முறையீடுகள் செய்யப்படுகின்றன. எனவே சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்கள் எதிர்வரும் 10.08.2010 இற்குள் பொருள்களை அகற்ற வேண்டுமென தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பொன். நித்தியானந்தன்,
சிறப்பு ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(சி-569638)

# குருநகரில் இன்று நீர்விநியோகத் தடை

யாழ்ப்பாணம்,ஓக3

யாழ்.மாநகர சபை குருநகர் நீர்த் தாங்கியில் திருத்த வேலைகள் மேற்கோள்ளப்படவேண்டியுள்ளதால் இன்று செவ்வாய்க்கிழமை குருநகர் பகுதிக்கான நீர் விநியோகம் தடைப்படும் என்று நீர் வேலைப் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

# 'உறவு' திரைப்படம்

யாழ்ப்பாணம்,ஓக3

கனடாவில் இருந்து 'சகா' திரைப்பட இயக்குநர் கலைஞர் திவ்வியராஜனின் உருவாக்கத்தில் தயாரிக்கப்பட்ட 'உறவு' முழு நீளத் திரைப்படம் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் மாணவர்களுக் காக நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கும் ஏனையோருக்கு எதிர்வரும் ஞாயிறு காலை 9.30 மணிக்கும் திரையிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

# மோ.சைக்கிள் மரத்தில் மோதி இளைஞன் மரணம்

கோப்பாய்,ஓக3

புத்தூர் வாதரவத்தை வீதியில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஓட்டிச்சென்ற மாணவன் உயிரிழந்தார்.

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் ஜி.சீ.ஈ. (சாதாரண) தரத்தில் கல்வி பயின்று விலகிய இராசேந்திரன் சிந்துஜன் (வயது - 17) என்பவரே உயிரிழந்தவராவார்.

தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணமானார்.

அவருடன் மோட்டார் சைக்கிளில் சென்றவரும் காயமடைந்தார். (ஓ-ஐ)

# புதிய பல்கலை மாணவருக்கு ஆசி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக3

யாழ்.மாவட்டத்தில் இருந்து 2010 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களை கௌரவித்து ஆசி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வை ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக தேசத்தின் அபிமான அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

தெரிவான மாணவர்கள் அனைவரும் யாழ். முனீஸ்வரர் ஆலயத்துக்கு முன்னால் அன்றையதினம் காலை 8.30 மணிக்கு வருகைதருமாறு தேசத்தின் அபிமானம் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (ஓ-323)

**Female Admin Assistant/Receptionist**

(Vacancies:02)

KU

Age limit: 25 yrs or bellow
English Knowledge, Computer Literacy, Smart looking & Hardworking Abilities are the pre request.

இன்றிலிருந்து கிழமை நாட்களில் 1.pm-2.30 pm வரை நேர்முகத்தேர்வு நடைபெறும்

KNOWLEDGE UNIVERSE®
Malaysian College of Business and ICT

No 75,Temple Road,Jaffna | 0777-302882
www.kugroup.info | enq@kugroup.info

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி விதானையார் வீதியில் வைரவர் கோயிலுக்கு அண்மையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவை இல்லை)

T.P.- 0718561208 (101410)

**விற்பனைக்கு**

NP-H இலக்கமுடைய ISUSU ரக டிப்பர் வாகனம் (1 கியூப்) விற்பனைக்குண்டு.

T.P.-0777432665 / 0770650730 (101404)

**தவறிவிட்டன**

சுப்பிரமணியம் சிவயோகநாதன் என்பவரது தே.அ.அட்டை (542062770V), மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் என்பன திருநெல்வேலிக்கும் கொக்குவில் மேற்குக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே.: 0214590048

**தவறிவிட்டது**

அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு என்னும் முகவரியுடைய உத்தமசீலன் விஜயகுமார் என்பவருடைய DL No: AO 17554064 எனும் இலக்கமுடைய சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் மோட்டார் வாகன காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன திரு[illegible] கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு [illegible]

அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு
தொ.பே.: 0778445190

# அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

தங்கவேலாயுதம் காந்தரூபன்
2 ஆம் வட்டாரம், சல்லி, சாம்பல்தீவு,
திருகோணமலை.

வழக்காளி

வழ. இல. நானாவிதம்/25/10

எதிர்

1. மாவை எஸ். சேனாதிராஜா
பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழரசுக்கட்சி,
16(30), மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

2. இராசவரோதயம் சம்பந்தன்
தலைவர், இலங்கைத் தமிழரசுக்கட்சி,
16(30), மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

எதிராளிகள்

இவ் வழக்கின் மேற்குறித்த வழக்காளி இலங்கைத் தமிழரசுக் கட்சியினதும் அதன் உறுப்பினர்களினதும் சார்பாக மேற்குறித்த எதிராளிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளாரென்றும் குடியியல் நடைமுறைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலை பத்திரிகையில் பிரசுரிக்கக் கட்டளையிடப்பட்டுள்ளபடியால் இவ் வழக்கு 06.08.2010 திகதியின்று இம் மன்றில் காலை 9 மணிக்குக் கூப்பிடப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.


2010 ஆம் ஆண்டு 08 மாதம் 02 ஆம் திகதி

வரைவு
வழக்காளி சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்

(101364)

# கண்ணீர் அஞ்சலி



வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி, நிவாரண மற்றும் புனர்வாழ்வு, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி, கைத்தொழில், சமூக சேவைகள், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி அவர்களின் அன்புக் கணவர்

**கனேசலிங்கம் ரமேஸ்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர் அலுவலகம்,
857, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

கூ.அ.உதவி ஆணையாளரும்
கூட்டுறவு திணைக்கள
உத்தியோகத்தர்களும்.

(சி/569636)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
04 * 08 * 1933



விண்ணில்
03 * 08 * 2009

**திருமதி தம்பிமுத்து கனகம்மா (கனகம்)**
(சரசாலை தெற்கு)

அன்பாக எமையெல்லாம்
அரவணைத்துக் காத்த எம் - அம்மாவே!
அகிலத்தில் எமைவிட்டுப் பிரிந்து
ஆண்டொன்று ஆனதுவோ!!
அழியாது பல ஆண்டு கழிந்தாலும் உம் நினைவு.

அரசடி,
மானிப்பாய் வீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
T.P. 0772627785

த.நித்தியானந்தம்
(மகன் - ஆசிரியர்)
மற்றும் மகள்மார்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(101407)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த புதிய கடற்கரை வீதி நேற்று மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் வீதியின் பெயர் பலகையை திரைநீக்கம் செய்து வைப்பதை முதலாவது படத்திலும், யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க மீளக்குடியமர்ந்த ஒருவருக்கு சூட்டடுப்பு வழங்குவதை இரண்டாவது படத்திலும், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோர் உரையாற்றுவதை மூன்றாவது நான்காவது படங்களிலும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: டிலீப், தமிழினியன்)*

# நெடுந்தீவுச் சங்கத்துக்கு வழங்கப்பட்ட புதிய படகு மூன்று மாதத்துக்குள் உடைந்து நீரில் மூழ்கியது!

## பழைய படகே புதிதாக மெருகூட்டப்பட்டதாக மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக.3

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பயன்பாட்டுக்கென நீர்கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட படகான 'உதயதாரகை' பாவனைக்கு உதவாத பழைய படகே என்று நெடுந்தீவு மக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தின் அனுமதிக் கடிதம் மூலம் நீர்கொழும்பு வி.ஜே.யாட்டில் இருந்து இந்தப் படகு நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத்துக்குக் கிடைத்தது.

பயணிகள் சேவைக்காக இந்தப் படகு பெறப்பட்டபோதும் அந்தச் சேவைக்கு உகந்ததாக அது இருக்கவில்லை. பொருள்களை ஏற்றி இறக்கவும் அது பொருத்தமாக இல்லை. இந்நிலையில் பொருள்களை ஏற்றி இறக்கும் சேவையில் அது ஈடுபடுத்தப்பட்டது.

கடந்த மாதம் 13 ஆம் திகதி சிமெந்துப் பைகளை ஏற்றியபடி துறைமுகத்தில் தரித்து நின்ற படகின் அடித்தளம் உடைந்து நீரில் மூழ்கியது. இதனால் 237 சிமெந்துப் பைகள் நீரில் நனைந்து பாவனைக்கு உதவாதவையாகின.

78 லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இந்தப் படகு புதிய படகல்லவென்றும், இப்படகு வி.ஜே. யாட்டில் நீண்டகாலமாக மீன்பிடிப் படகாக சேவையாற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பழைய படகு புதிய இயந்திரம் பொருத்தப்பட்டு, மெருகூட்டப்பட்டு வழங்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. படகு பெறப்பட்டு மூன்று மாதங்களே ஆன நிலையில் அடித்தளத்தில் 'கலாட்டி'கள் பிடித்திருப்பதாகவும் புதிய படகுகளில் இது காணப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நீரில் மூழ்கி சேதமடைந்த இந்தப் படகினை தற்போது வி.ஜே.நிறுவனப் பிரதிநிதிகளும் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

(த-6-111)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஓக 3

காரைநகர் கலாநிதி அ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் நடராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மலேசியப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ஆறுமுகம் சிவசோதி பிரதமவிருந்தினராகவும் அமெரிக்க பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த ஆர்.சுந்தரதாசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-6)




## சுதந்திரக் கட்சியின் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.3

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கடந்த 31ஆம் திகதி நடைபெறவிருந்து பிற்போடப்பட்ட நிர்வாகக்குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை கலாநிதி வேல்முருகு தங்க ராஜா தலைமையில் நடைபெறும் என கட்சியின் பொதுச் செயலாளர் ரவிக்குமார் அறிவித்துள்ளார்.

(த-201)

## 541 குடும்பங்களுக்கு ஐ.நா.உதவிப் பொருள்

தென்மராட்சி, ஓக 3

நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறி தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த 541 குடும்பங்களுக்கு அண்மையில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினரால் பொருள்கள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் வைத்து பொருள்கள் வழங்கப்பட்டன. (த-207)

# மருத்துவமாது தர்சிகாவின் குடும்பத்துக்கு விரைவில் நட்டஈடு வழங்க வேண்டும்

## அரச சுகாதார உத்தியோகத்தர் சங்கம் மகஜர்

நவாலி, ஓக 3

கடமையின் போது மரணமடைந்த வேலணை அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த செல்வி சரவணை தர்சிகாவுக்கு நட்டஈடு வழங்குமாறுகோரி அரசாங்க குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்கம் வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இந்த மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த மாதம் 10 ஆம் திகதி கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஊழியர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு பின்னர் தூக்கிலிடப்பட்டுள்ளதாகச் சந்தேகங்கள் வலுவடைந்துள்ளன.

இறந்துபோன உத்தியோகத்தரின் ஊதியத்திலேயே அவரின் குடும்பத்தினர் வாழ்வியல் தேவைகளைப் பூர்த்திசெய்து வந்துள்ளனர். தற்போது இவருடைய இழப்பினால் அவரது குடும்பம் உள உபாதைகளுக்கு உள்ளாகியுள்ளதுடன் அவர்களின் வாழ்வாதாரமும் முற்றாக முடங்கியுள்ளது.

ஆதலால் பொது நிர்வாக சுற்றறிக்கை இல 21/88, 59/89, 22/93, 3/2003 ஆகிய சுற்றறிக்கைகளுக்கமைய நட்ட ஈட்டுக் கொடுப்பனவு, வேதனம், ஓய்வூதியம் என்பவற்றை விரைந்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றுள்ளது.

இதன் பிரதிகள் வடமாகாண ஆளுநர், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி, கொழும்பு அரச குடும்பநல உத்தியோகத்தர் சங்கத் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (த-100)

# சிறுகதை, குறுநாடக ஆக்கத்துக்கு தேவமதிக்கு தேசிய விருதுகள்

யாழ்ப்பாணம்,ஓக 3



உயர்கல்வி அமைச்சு, தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் என்பவற்றின் அனுசரணையுடன் இளைஞர்க்கான நாளை அமைப்பு நாடளாவிய ரீதியில் நடத்திய 'சிவ் மகா கங்கா' இலக்கியப் போட்டியில் தேவமதி யோசேப் இரண்டு தேசிய விசேட விருதுகளைப் பெற்றுள்ளார்.

சிறுகதை, குறுநாடகப் பிரதியாக்கம் என்பவற்றுக்கே இவர் தேசிய விருதுகள் இரண்டைப் பெற்றுள்ளார்.

இவருக்கான விருதுகளும் சான்றிதழ்களும் ஜூன் மாதம் 27 ஆம் திகதி மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்ற விழாவில் வைத்து வழங்கப்பட்டன.

வளர்ந்து வரும் இளம் எழுத்தாளரான இவர் பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் விருதுகளையும் பரிசுகளையும் பெற்றுள்ள இவர், கவிதை, கட்டுரை, பாடலாக்கம் என்பவற்றிலும் தமது திறமைகளை வெளிப்படுத்தி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-6)

# போதனா வைத்தியசாலை சிற்றூழியர் சிலரின் நடவடிக்கையால் பார்வையாளர் அசௌகரியம்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்... கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக 3

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சிற்றூழியர்கள் சிலரின் நடவடிக்கைகளால் நோயாளர்களைப் பார்வையிட வரும் மக்கள் அசௌகரியமடைவதாகத் தெரிவிப்பட்டுள்ளது.

நோயாளர் விடுதிகளில் கடமை புரியும் இந்த ஊழியர்கள் கடமை நேரத்தில் அங்கு இருப்பதில்லை எனவும் இதனால் 'எக்ஸ்ரே' எடுப்பதற்காகவும் வேறு தேவைகளுக்காகவும் நோயாளர்கள் தாமே செல்ல வேண்டியுள்ளது. அது தவிர நோயாளர்களை உறவினர்களே வண்டிலில் வைத்துத் தள்ளிச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

பார்வையாளர்களாக வரும் நோயாளர்களின் உறவினர்களிடம் சிற்றூழியர்கள் இலஞ்சம் கேட்பதாகவும் பணம் தந்தாலே தாம் வேலை செய்வோம் என்று அவர்கள் கூறுவதாகவும் நோயாளர்களைப் பார்வையிடச் செல்வோர் தெரிவிக்கின்றனர்.

எனவே இது விடயத்தில் வைத்தியசாலை நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (த-6-288)

# கொழும்புத்துறை - பூநகரி இடையிலான கடல் பயணத்துக்கு மேலுமொரு படகு

யாழ்ப்பாணம்,ஓக.3

கொழும்புத்துறை மணியந் தோட்டத்துக்கும் பூநகரிக்கும் இடையிலான பயணிகள் படகுச் சேவைக்கு மேலும் ஒரு புதிய படகு கொண்டு வரப்பட்டுள்ளது.

சுமார் எழுபது பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய இந்த புதிய படகு தற்போது மணியந்தோட்டக் கடற்பகுதிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தப் புதிய படகின் சேவையை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி உத்தியோகபூர்வமாக விரைவில் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

ஏற்கனவே இரண்டு படகுகள் இந்தப் பயணிகள் சேவையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-224)

# எழிலூர் வேளாங்கண்ணி ஆலயத்தில் காணாமற்போயுள்ள திருச்சொரூபம்

கொழும்புத்துறை எழிலூர் வேளாங்கண்ணி மாதா ஆலயத்தில் இருந்த திருச்சொரூபம் மற்றும் ஆலயத்தின் கூரைப் பகுதிகள் காணாமல் போயுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆலயம் அமைந்துள்ள பகுதி மீளக்குடியமர அனுமதிக்கப்படாத இடமாகும். கடந்த கால யுத்தத்தினால் இந்த ஆலயம் சேதமடைந்த போதிலும் திருச்சொரூபம் மற்றும் கூரைப் பகுதிகள் பல வருடங்களாக இருந்து வந்தன.

சில வாரங்களுக்கு முன்னர் அங்கு சென்று பார்த்தபோது திருச்சொரூபமும் கூரைப் பகுதியும் காணாமல் போயுள்ளதால் தாம் அதிர்ச்சி அடைந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த திருச்சொரூபம் 30 வருடங்களுக்கு முன்னர் ஆலயம் ஆரம்பிக்கப்பட்டபோது வைத்து வணங்கி வரப்பட்ட மாதா சொரூபம் என்று ஆலயப் பரிபாலகர் தெரிவித்தார். (த-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### Faculty of Medicine
**Academic Programme**

The Academic Programme for the New Batch of Medical Students (33rd - 2010) will commence on 09th August 2010. A meeting of the Staff and Students will be held on 09th August 2010 at 9.00 am in the Lecture Hall, Faculty of Medicine. It is appreciated if a Parent / Guardian for each student attends this meeting.

Registrar
02.08.2010

(வி/369637)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக.3

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் பதினோராவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கத்தலைவர் திருநாவுக்கரசு உதயசூரியன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துகொள்வார்.

(ஒ-14-207)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையின் பழைய மாணவனும் தினக்குரல் பத்திரிகையாளருமான **பாலசுப்பிரமணியம் கிருபாகரன்** சிறந்த விவரணக் கட்டுரையாளருக்கான சிறப்பு விருது பெற்றமைக்காக பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவிகள்
(யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி)
இ.ரம்ஜா, இ.மனுஜா, சி.நிஷானி, அ.விஜிந்தா.

(101494)

## தற்காலிக/அமைய ஒப்பந்த அடிப்படையில் உருளைச் சாரதி (Road Roller)
## பதவி வெற்றிடம்
### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையில் தற்காலிக/அமைய அடிப்படையில் உருளைச்சாரதி வெற்றிடத்தை நிரப்புவதற்கு இப்பிரதேச எல்லைக்குட்பட்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமை: க.பொ.த. சாதாரண தரத்தில் 02 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்திபெற்றிருந்தல் வேண்டும்.

பொதுத்தகைமைகள்:

* 18 வயதிற்குக் குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
* மோட்டார் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கனரக வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம்.
* வாகனத்தினை ஓட்டுவதில் குறைந்தது மூன்று வருட அனுபவ அத்தாட்சிப் பத்திரம்.
* விண்ணப்பதாரி 5 அடி உயரத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
* உடல் ஆரோக்கியம் உள்ளவராகவும், கண்பார்வை இரவிலும் பகலிலும் கடமை செய்வதற்கு ஏற்றவராகவும் இருத்தல்.
* வீதிச்சாலை விதிகள் மற்றும் வீதிச் சமிக்ஞை பற்றிய தெளிவான அறிவினைப் பெற்றிருத்தல்.
* மேலதிக தகைமையாக ஆங்கிலம், சிங்களம் பேசுவதில் தேர்ச்சியுள்ளவராக இருத்தல்.

தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் தலைமையலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 2010.08.16 ஆம் திகதிக்கு முன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கோள்கின்றேன்.

செயலாளர்,
வலி.தென்மேற்குப் பிரதேச சபை,
மானிப்பாய்.

(வி/369631)

## சவரணை சின்னமடு மாதா யாத்திரைத் தல விழா

கொழும்புத்துறை,ஒக3

சரவணை சின்னமடு மாதா யாத்திரைத் தல பெருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை கொண்டாடப்படவுள்ளது.

நற்கருணை விழா வழிபாடுகள் நாளை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி நற்கருணை ஆராதனை, நற்கருணைப் பவனி என்பன இடம்பெறும்.

மறுநாள் காலை 6.30 மணிக்கு முதல் திருப்பலியும், காலை 8 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலி யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையிலும் நடைபெறும். தொடர்ந்து திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

யாழ்.நகரில் இருந்து இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்கள் விசேட போக்குவரத்துச் சேவையில் ஈடுபட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பங்குத்தந்தை அருட்திரு. யே.அ.அருள்தாசன் அடிகள் தெரிவித்துள்ளார்.

(ஒ-135-317)

## பொது அறிவித்தல்

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரிக்குரிய ஆதனங்களை எவரும் உரிமை மாற்றம் செய்யவோ அதனுள் கட்டடங்கள் அமைப்பதற்கோ, பாடசாலை நிர்வாகம் தவிர்ந்த வேறு எவருக்கும் உரிமை வழங்கப்படவில்லை என இத்தால் அறிவிக்கின்றோம். குறிப்பாக மாநகரசபை எல்லைக்குட்பட்ட மின்சார நிலைய வீதியிலுள்ள 73ம் இலக்கம் முதல் 81ம் இலக்கம் வரையும், கஸ்தூரியார் வீதியில் 45ம் இலக்கம் முதல் 65ம் இலக்கம் வரையும், காங்கேசன்துறை வீதியில் 352ம், 354ம் இலக்கங்களும், புகையிரத நிலைய வீதியில் 26ம், 26/2ம் இலக்கங்களும், மற்றைய பாடசாலைக்குரிய காணிகளும் அடங்கலாக.

**பாடசாலை தர்மகர்த்தா சபை**

## மரண அறிவித்தல்
### முத்தையா தணிகாசலம் J.P.

(ஓய்வுபெற்ற ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர், வவுனியா வடக்கு கல்வி வலயம், பகுதிநேர விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை நிரந்தர வதிவிடமாகவும் வவுனியாவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட முத்தையா தணிகாசலம் நேற்று (02.08.2010) திங்கட்கிழமை திருநெல்வேலியில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான முத்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - விசாலாட்சி சவுந்தரம் ஆகியோரின் அன்பு மருமகனும் பவளராணியின் அன்புக் கணவரும் பாமினி, பாபுஜி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காந்தரூபனின் (U.K.) அன்பு மாமனாரும் சுப்பிரமணியம், தவமணி, கணேசம்மா, செல்லநாயகி, நவமணி தெய்வேந்திரராசா (U.K.), ஆனந்தராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரி காலஞ்சென்றவர்களான இராமநாதன், பாலேந்திரா மற்றும் கோபாலகிருஸ்ணன், டில்லிராணி, யோகேந்திரன், காலஞ்சென்ற தங்கமலர் மற்றும் நல்லம்மா, செல்வவதி, சிவகுருநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, அரசரட்ணம் மற்றும் கந்தையா ஆகியோரின் சகலனும் நிவேதன், சர்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2010) புதன் கிழமை அன்று பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மு.சுப்பிரமணியம் (சகோதரன்),
அ.அருட்செல்வன் (U.K.),
சி.காந்தரூபன் (மருமகன்-U.K.),
த.பாபுஜி (மகன்),
அ.அஜந்தன் (இத்தா).

பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
0774737127

(101409)

## டெங்கு ஒழிப்பு புகையூட்டல் பணி

தென்மராட்சி,ஒக3

சாவகச்சேரியில் உள்ள படை முகாம்கள், பொலிஸ் நிலையம், நகர்ப் பகுதி வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றில் டெங்கு ஒழிப்பு புகையூட்டல் பணிகள் சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மற்றும் பொலிஸார், படையினர் ஆகியோர் புகையூட்டலுக்கான எரிபொருள்களை வழங்கியதை அடுத்து சுகாதாரப் பகுதியினர் அப்பகுதிகளில் புகையூட்டல் பணிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-207)

## முக்கிய அறிவித்தல்

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கிளிநொச்சி பொதுச் சந்தையில் உள்ள அனைத்து விதமான வியாபார நிலையங்களும் 15.08.2010 ஆம் திகதிக்குள் திறக்கப்படல் வேண்டும். இக்கால எல்லைக்குள் திறக்கப்படாதிருக்கும் அனைத்து வியாபார நிலையங்களையும் கரைச்சி பிரதேச சபை பொறுப்பேற்று வேறு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு வழங்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

பொன்.நித்தியானந்தன்,
சிறப்பு ஆணையாளர், கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.

(வி/369607)

## தேவை




புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள எமது நெல்லியடிக் கிளைக் காரியாலயத்துக்கு Administrative Assistant, Computer Instructor பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியுடையவர்கள் தங்களது சுயவிபரக் கோவையினை ஏழு நாள்களுக்குள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

TP No: 021 567 5555
Email : gatewayjfn@sltnet.lk

Gateway,
347, Kasthuriyar Road, Jaffna.

## மோட்டார் சைக்கிள் விற்பனை

நல்ல நிலையிலுள்ள LML Scooter வகை மோட்டார் சைக்கிள் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: 316A, தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் T.P:0779813542

## வாடகைக்கு

யாழ்.நகர மத்தியில் களஞ்சியமாக பாவிப்பதற்கு உகந்த விசாலமான அறைகள் வாடகைக்குண்டு.

உடன் தொடர்புகளுக்கு:
**077 2105288, 0716932383**

## கணனி விடுமுறைகால வகுப்புகள் ஆரம்பம்
### Course Details

| | | | | |
|---|---|---|---|---|
| Ms Office | - | 1 month | - | 2000/= |
| DTP | - | 1 month | - | 3000/= |
| Hardware | - | 1 month | - | 2000/= |
| Web Design | - | 1 month | - | 3000/= |
| Graphic Design | - | 1 month | - | 3000/= |
| Internet & E-mail | - | 2 Weeks | - | 2000/= |

162, Main Street, Jaffna.
TP:0212221417
Sky Computers(pvt)Ltd.

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி நட்சத்திரம் விமலா
(வர்த்தகத் திணைக்கள உத்தியோகத்தர்)



தோற்றம்
27.05.1959

மறைவு
01.08.2002

திதி: 03.08.2010
(அட்டமி)

உருவம் மறைந்தாலும் துயரங்கள் நீங்கவில்லை
காலங்கள் மறைந்தாலும் கண்ணீர் நிற்கவில்லை– அம்மா!
நாம் வாழும் காலங்களில் உங்கள் நினைவுகள்– என்றும்
எம்மை விட்டு அகலாது என்றும் வாழ்வீர்கள் எம் இதயத்தில்.

என்றும் உங்கள்:
கணவர், பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(101495)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தினால்
# 12 ஆயிரம் 'கேபிள்' தொலைபேசி இணைப்புகள் இதுவரை யாழ்.மாவட்டத்தில் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ். மாவட்டத்தில் இதுவரை 12 ஆயிரம் வரையான 'கேபிள்' தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்.அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தீவுப் பகுதி தவிர்ந்த வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் இந்தக் 'கேபிள்' தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் 'கேபிள்' தொலைபேசி இணைப்பு வழங்கப்படாத மேலும் பல பகுதிகளுக்கும் இந்த வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்திலே 50 ஆயிரம் 'கேபிள்' தொலைபேசி இணைப்புகளை வழங்கும் திட்டத்தில் தற்போது 12 ஆயிரம் வரையான இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி போன்ற பகுதிகளில் இந்தக் 'கேபிள்' தொலைபேசி இணைப்புகளை மேலும் விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை:-

யாழ்.மாவட்டத்தில் தீவுப்பகுதி நீங்கலாக இதுவரை 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சி.டி.எம்.ஏ தொலைபேசிகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன. (த-224)

## மாவட்ட ரீதியில் முதலிடம்



யாழ்ப்பாணம்,ஓக.3

ஆண்டு தோறும் யாழ். மறைக்கல்வி நடு நிலையத்தால் நடத்தப்படும் மறைக்கல்வித் தேர்வில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான மறைக் கல்விப் பரீட்சையில் பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த அமலோற்ப அரியநாயகம் அதுஜன் அதி கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

கடந்தமாதம் 2ஆம் திகதி யாழ்.மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற ஆயர்தின திருவிழாத் திருப்பலியில் இவர் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (த)

# நெடுந்தீவில் தடைப்படும் மின்சாரம்

நெடுந்தீவு,ஓக.3

நெடுந்தீவில் அடிக்கடி மின் விநியோகம் தடைப்படுவதாகப் பொதுமக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

நெடுந்தீவில் சமீப நாள்களாக அடிக்கடி மின்விநியோகம் தடைப்படுவதாகப் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடே இதற்குக் காரணம் எனவும் கூறப்படுகின்றது.

பகல் வேளைகளில் ஒரு குறிக்கப்பட்ட நேரம்வரை மட்டுமே மின்விநியோகம் இடம்பெறுவதால் அரசாங்கக் காரியாலயங்களிலும் பாடசாலைகளிலும் உரிய செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக அங்கு பணிபுரிவோர் தெரிவிக்கின்றனர். (க)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை.3

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் தொகை மதிப்புப் படிவங்களைப் பூர்த்திசெய்தல் தொடர்பான செயலமர்வு நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

50 மாணவர்களுக்குக் குறைவான பாடசாலைகளிலிருந்து அதிபரும், ஏனைய பாடசாலைகளிலிருந்து அதிபரும், தொகை மதிப்புப் படிவங்களைப் பூர்த்தி செய்தலுக்குப் பொறுப்பான ஆசிரியரும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (த-207)

# பொது அமைப்புக்களின் உதவியுடன் சாவகச்சேரியில் இலவச மருத்துவ முகாம்

## லயன்ஸ் கழகம் நடத்துகிறது

யாழ்ப்பாணம்,ஓக.3

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புகளின் அனுசரணையுடன் அந்தந்த இடங்களில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம்களை நடத்தவுள்ளனர்.

பரிசோதனை முகாமில் கண், நீரிழிவு, இரத்த அழுத்தம், தொழுநோய், வாய்ப்புற்று, பெண் நோயியல் போன்றவற்றுக்கான பரிசோதனைகளை நடத்தவுள்ளனர்.

கண் பரிசோதனையில் விழிவெண்படலத்தில் பூப்படர்வு ஏற்பட்டுள்ளவர்களுக்கு இலவசமாகக் கண் சத்திர சிகிச்சை செய்யவும், பார்வையில் குறைபாடு உள்ளவர்களுக்கு அங்கேயே மூக்குக் கண்ணாடிகளையும் வழங்கத் திட்டமிட்டுள்ளனர்.

லயன்ஸ் கழகம் மூலம் இலவச பரிசோதனை முகாம்களை நடத்த விரும்பும் பொது அமைப்புகள் சாவகச்சேரி நவீன சந்தையில் உள்ள 'விமலாஸ்' வர்த்தக நிலையத்துடன் தொடர்புகொண்டு முகாம் நடத்துவதற்கான திகதியினைப் பெற்றுக் கொள்ளுமாறு கழகத் தலைவர் லயன் தி.முருகதாஸ் அறிவித்துள்ளார்.

வேம்பிராய் பாரதி படிப்பகத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் 150க்கும் மேற்பட்டோர் பரிசோதனைகளில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-207)

# சுதேச வைத்தியத்துறை அமைச்சர் கைதடி ஆஸ்பத்திரிக்கு விஜயம்

கைதடி,ஓக.3

கைதடியில் இருக்கின்ற சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்த சுதேச வைத்திய அமைச்சர் உள்ளிட்ட குழு வைத்தியசாலையின் அபிவிருத்தி சம்பந்தமாகக் கலந்துரையாடியுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் கடந்த 30ஆம் திகதி இடம்பெற்றது.

கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி திருமதி பிறேமா சிவசண்முகராசா தலைமையில் நடைபெற்ற இந்த அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடலில் சுதேச வைத்திய அமைச்சர் பியசேன கமகே, பிரதி சுதேச வைத்திய அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க, சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் பந்துல தகநாயக்கா, ஆயுள்வேத ஆணையாளர் ரமணி குணவர்த்தன மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மேலதிக செயலாளர், பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் முடிவில் வைத்தியசாலை வளாகத்தைப் பார்வையிட்ட அமைச்சர், வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கையை தான் உடன் செய்வதாகவும் உறுதியளித்துள்ளார். (த-288)




# எதிர்பார்ப்பு நிறைவேறுமா?



யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்.பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியிலும் அதன் முன்னால் உள்ள கழிவுநீர் வடிகாலில் தேங்கியுள்ள கழிவுகளால் அந்தப் பகுதியில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் கவனமெடுத்து இதனைத் துப்புரவு செய்து நோய்த் தாக்கம் ஏற்படும் அபாயத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். (த-6-23)

# ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதம அதிகாரி யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம்,ஓக.3

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கிறேறயங் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்தார்.

முதல் தடவையாக யாழ்ப்பாணம் வருகை தந்த இவருடன் ரெலிக்கொம் நிறுவனத்தின் தலைமை அலுவலக உயரதிகாரிகளும் வருகை தந்தனர்.

ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்திற்கு விஜயம் செய்த இந்தக் குழுவினர் நிறுவனத்தின் செயற்பாடுகளைப் பார்வையிட்டதுடன் கலந்துரையாடலையும் நடத்தினார்கள்.

இந்தக் குழுவினர் மானிப்பாய், கோப்பாய், பருத்தித்துறை, சித்தங்கேணி, தென்மராட்சிப் பகுதிகளில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் 'கேபிள்' தொலைபேசி இணைப்புக்களை வழங்கும் பணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இக்குழுவினர் யாழ்ப்பாணம் வரும் வழியில் கிளிநொச்சிக்கும், மன்னாருக்கும் சென்று அங்கு நடைபெற்றுவரும் தொலைபேசி இணைப்புப் பணிகளையும் பார்வையிட்டனர். (த-224)

# உலக வங்கியின் நிதியுதவியுடன் பாடசாலைகளில் அபிவிருத்திப் பணி

தென்மராட்சி,ஓக.3

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆறு பாடசாலைகளிலும் வலயக் கல்வி அலுவலகத்திலும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள உலக வங்கியின் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, கொடிகாமம் அ.த.க.வித்தியாலயம், கைதடி கலைவாணி வித்தியாலயம், மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் ஆகியவற்றில் கட்டடத் திருத்தம் மேற்கொள்ளவும் மந்துவில் றோ.க.த.க.வித்தியாலயம், மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் ஆகியவற்றில் மலசலகூட திருத்தம் மேற்கொள்ளவும் மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயத்தில் வகுப்பறையினை கணனி அறையாக மாற்றவும் வலயக் கல்வி அலுவலகம் அமையவுள்ள காணியில் சுற்றுமதில் அமைக்கவும் கிணறு அமைக்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-207)



வைத்திய கலாநிதி செ.பரமசிவம்பிள்ளை எழுதிய வாதரோகம் பாகம்1 நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையின் கைதடி வளாகத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் சித்த மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி சிவஞானமணி பஞ்சராசா, பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி, நூலாசிரியர் வைத்திய கலாநிதி எஸ்.பரமசிவம்பிள்ளை ஆகியோர் உரைநிகழ்த்துவதை முதல் மூன்று படங்களிலும்-

நூலின் முதற்பிரதியை வடகிழக்கு மாகாண சுதேச மருத்துவ முன்னாள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பூ.உரோ மகேஸ்வரன், பருத்தித்துறை மாவட்ட ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளையிடம் இருந்து பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு தொகுதியினரையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன், தயாளன்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் தொடங்கியிருக்கும் கூரையற்ற பள்ளிக்கூடம்

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசத்தில் உள்ள பூநகரி மகா வித்தியாலயம் கூரையற்ற பாடசாலையாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கிறது. யுத்தம் பல்வேறு வகையில் தாக்கியிருக்கும் பூநகரிப் பிரதேசத்தில் உள்ள பாதிக்கப்பட்ட பல பாடசாலைகளில் ஒன்றான கிளி/ பூநகரி மகா வித்தியாலயம் இன்று ஆதரவுக்கரங்களை நாடி நிற்கிறது என்று குறிப்பிடும் குளோபல் தமிழ் செய்திகளின்




கட்டுரையாளர் நவராஜ் பார்த்தீபன் அந்தப் பாடசாலை சமூகத்துடன் உரையாடியமை குறித்து மேலும் விபரிக்கிறார்.

பூநகரி மகா வித்தியாலயம் பூநகரிப் பிரதேசத்தில் ஒரு முதன்மையான பாடசாலையாக இயங்கி வந்தமைக்கு சான்றாக அழிந்து போன சிதைவடைந்த கட்டடங்கள் சாட்சியாக நிற்கின்றன. பூநகரிப் பிரதேச மக்கள் கடந்த காலத்தில் எந்தளவு செழிப்பான வாழ்க்கையை வாழ்ந்தார்களோ அந்தளவு செழிப்பாக பாடசாலை விளங்கியிருக்கிறது. பிரமாண்டமான முறையில் அமைந்திருந்த பாடசாலையின் பிரதான மேல் மாடிக் கட்டடம் இப்பொழுது கூரையற்றுப் போயிருக்கிறது. அதிபரின் அலுவலகம் மற்றும் சில வகுப்பறைகள் அந்த கூரையில்லாத கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருந்தன.

ஆரம்பப்பிரிவு மாணவர்கள் ஒரு வகுப்பறையில் குழுமி படித்துக் கொண்டிருந்தார்கள். போதிய இடமில்லாமல் காட்சியளிக்கும் அந்த வகுப்பறை யுத்த அழிவில் இருந்து தப்பியிருக்கிறது. அந்த வகுப்பறையில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த கலீஸ்வரி இரவீந்திரன் என்ற ஆசிரியை ஆரம்ப பிரிவு மாணவர்கள் குறித்து அதிகம கவனம் செலுத்த வேண்டும் என்று குறிப் பிட்டார். தொடர்ந்து ஆரம்பப்பிரிவு மாணவர்களின் வகுப்பறை நிலவரங்கள் தொடர்பாக பேசினார். "வகுப்பறை என்பது இப்பொழுது மரம்தான். அதற்கு கீழே



இருந்துதான் மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆரம்பப் பிரிவில் பத்துப் பிரிவுகள் இருக்கின்றன. அப்படிப் பார்த்தால் வகுப்பறைகளே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் அறுபது பிள்ளைகள்வீதம் மொத்தமாக 300 மாணவர்கள் படிக்கிறார்கள். பின்னேர வெயிலுக்குள்ளும் இருக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். காலையில் பத்து மணிவரையும தான் கல்வி கற்க முடிகிறது. ஆசிரியர்கள் தூர இடங்களில் இருந்து பேருந்துகளில் வருவதால் காலை பத்து மணிக்கு மேல்தான் வரமுடியும். அதன் பின்னா வந்து கல்வி கற்பிக்கும் சூழலும் இல்லாமல் போகின்றது"

இப்படி கலீஸ்வரி குறிப்பிடும் இந்த விடயம் தொடர்பாக இன்றைய தினம் பூநகரி பரந்தன் போக்குவரத்து பேருந்தில் உள்ள நெருக்கடி நிலவரத்தை பார்த்தேன். ஒழுங்கான பேருந்துகள் இல்லை. உக்கிப் பழுதடைந்து போயிருந்தன. பேருந்தில் நிற்க முடியாதளவு நெருக்கடி. இவற்றில் பயணம் செய்து பெரும் சிரமங்களை அவர்கள் எதிர் கொள்வதைப் பார்த்தேன். யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் ஆசிரியர்கள் தங்களுக்கு விடுதி வசதிகள் செய்து தந்தால் தங்கியிருந்து கல்வி கற்பிக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். தொடர்ந்தும் கலீஸ்வரி மாணவர்களது நிலவரங்கள் பற்றி என்னிடம் குறிப்பிட்டார்.

"மாணவர்கள் பல்வேறு துயரங்களுக்குள்ளாகி பல்வேறு இடங்களுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். முன்பு வகுப்பறையில் இருந்ததைப்போல இப்பொழுது இல்லை. படிப்பில் கவனம் இல்லாமலும் போய் விட்டது. பரீட்சைக்குக்கூட நிறைய மாணவர்கள் வரவில்லை. பேற்றோர்களிடமும் மாணவர்களது கல்வி பற்றிப் பேச முடியாத நிலைதான் உள்ளது. ஆவர்கள் இருக்கும் நிலையில் இந்தப் பிள்ளைகளின் கல்வி பற்றி எப்படி பேச முடியும்? அவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியை இழப்புக்களின் அழுத்தத்தால் கவனிக்கவில்லை. நாங்கள் கலந்துரையாடல்களுக்கு அழைத்தாலும் அவர்கள் வருவதில்லை. பிள்ளைகளின் பெறுபேறுகளை கொடுப்பதற்கு அழைத்தாலும் வருவதில்லை"

பாதிக்கப்பட்ட இப்பகுதியில் உள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு என்ன தேவை? எப்படி கற்பிக்க வேண்டும்? அதற்கு விசேட திட்டங்கள் எதாவது உள்ளனவா? என்பதை முக்கியமான விடயங்களாக தெரிகின்றன. பூநகரிப் பிரதேச மாணவர்கள் குறிப்பாக சிறார்கள்மீது இந்த விடயத்தில் அவதானம் செலுத்த வேண்டும் போல உணருகின்றேன். இது குறித்து கலீஸ்வரி இப்படி குறிப்பிடுகிறார்.

"ஆம். போரினால் தாய் தந்தையரை இழந்த பல குழந்தைகளை இனங்கண்டு விசேடமாக கவனித்து வருகிறோம். ஒவ்வொரு பிள்ளைகளுடனும் பேசி அவர்களின் மனநிலைகளை அறிந்து வருகிறோம். போரால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஒரு பாடசாலையில் இது அவசியம் செய்ய வேணடிய பணியாக உள்ளது. முன்பு நிறைய விளையாட்டுப் பொருள்கள் கற்பித்தல் உபகரணங்கள் என்பன இருந்தன.இப்பொழுது ஒன்றுமில்லை. கதிரையும் மேசையும் மட்டும் இருக்கின்றன"

கூரை கதவுகள் ஜன்னல்கள் இல்லாமல் இருக்கும் வகுப்பறைகளை விட மரமே வகுப்பறையாகிப் போய் பல வகுப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கூரைகளை இழந்து சிதைந்து உருக்குலைந்து காயங்களுடன் பழமையான கட்டடங்கள் தெரிகின்றன. ஆரம்பப்பிரிவு மாணவர்கள் பலர் மரத்தின் கீழாகத்தான் இருக்கின்றனர். புழுதியும் அவர்களைக் குளிப்பாட்டிக் கொண்டிருக்கிறது. செல்வரத்தினம் கீர்த்திகா என்ற மாணவி இந்தவருடம் சாதாரணதரப் பரீட்சையை எழுத இருக்கிறார். பழைய நிலையை எட்டவேண்டும் என்ற ஆர்வம் அந்த மாணவர்களிடம் இருப்பதற்கு இவர் சிறந்த உதாரணம் என நினைக்கிறேன்.

"நான் கடந்தவருடம் சாதாரணதரப் பரீட்சையை எழுத வேண்டியிருந்தது. ஆனால் ஒரு வருடம் பிந்திய நிலையில் தற்பொழுது பரீட்சையை எழுத இருக்கிறேன். அப்பா முன்பு கமத் தொழிலில்தான் ஈடுபட்டார். தற்பொழுது அந்தத் தொழிலை செய்யும் சூழல் எங்களுக்கு இல்லை. ஆனால் பழைய நிலையை அடைவதற்காக நாங்கள் கடுமையாக முயற்சித்து வருகிறோம்"

தன் தந்தை பற்றி அதிகம் என்னோடு பேசிய இந்த மாணவி யுத்தத்தில் தன் தந்தையை இழந்திருக்கிறார். இந்தப்பாடசாலையில் யுத்தம் காரணமாக பல மாணவர்கள் தங்கள் உறவுகளை இழந்திருக்கிறார்கள்.

"இந்தப் போர் எனது அப்பாவை பலியெடுத்து விட்டது. அதுவே எங்களது குடும்பத்தில் பெரும் கஷ்டத்தை கொண்டு வந்தது. நான் இப்பொழுது மாமா வீட்டில்தான் இருந்து படிக்கிறேன். அப்பாதான் என்னை பாடசாலைக்கு சைக்கிளில் ஏற்றிக்கொண்டு வருவார். எங்களை மிகவும் அன்போடு பார்த்து வந்தவர். அப்பா எங்களுக்காக வயல்களுக்குள்தான் எந்த நேரமும் நிற்பார்"

சிதைவடைந்த சிறிய சிற்றுண்டிச்சாலையில் சிதைவடைந்த ஜன்னலால் மாணவர்கள் சிற்றுண்டி பெற்றுக் கொண்டிருந்தார்கள. பாடசாலையின் அரங்கம், தண்ணீர் தாங்கிகள் என்று எல்லாமே பாதிக்கப்பட்டிருக்கின்றன. நிவாரணத் திட்டத்தில் கொடுக்கப்பட்ட மஞ்சள் கதிரைகளும் புத்தகப் பைகளும்தான் இவை வகுப்பறை என்பதை காட்டுகின்றன. தொடர்ந்து கூரையற்ற கட்டிடத்தின் கீழாக அலுவலகத்தில் வேலைகளுடன் இருக்கும் அதிபர் இராமலிங்கம் பாலச்சந்திரனுடன் பேசினேன்.



"2006ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து போன எமது பாடசாலை 2009.04.01 அன்று மீண்டும் மீள்குடியேறி இயங்கிக் கொண்டிருக்கிறது. யுத்தம் காரணமாக இந்தப் பாடசாலையின் அனைத்து வளங்களையும் நாங்கள் இழந்திருக்கிறோம். கட்டிடங்கள் எல்லாம் கூரைகளற்ற நிலையிலும் இடிந்த நிலையிலும் காணப்படுகின்றன. பாடசாலையில் எந்த வசதிகளும் இல்லை. வேலி இல்லை. குடிதண்ணீர் இல்லை. ஆசிரியர் தங்குவதற்கான வசதிகள் இல்லை. மாணவர்களுக்கு வகுப்பறைகள் இல்லை. ஆனாலும் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். மிகவும் நெருக்கடியான நிலையில்தான் இந்தப் பாடசாலையை நாங்கள் நடாத்திக்கொண்டிருக்கிறோம்"

2006இல் யுத்தம் மூண்ட பொழுது இந்தப்பாடசாலை ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் தற்காலிக கொட்டகைகளில் இயங்கிக் கொண்டிருந்த பொழுது இந்தப் பாடசாலைக்குச் சென்றிருந்தேன். யுனிசெப் நிறுவனத்தின் தரப்பால்களாலான அந்த வகுப்பறைகள் மணலாலான தரை மேலே பாலை மரங்கள் என்பன எனக்கு ஞாபகத்திற்கு வந்தன. 2006 இற்கு முன்பாகவும் இந்தப் பாடசாலை கடுமையான யுத்த சவால்களை, இடப்பெயர்வுகளை அவலங்களை எதிர்கொண்டு வந்திருக்கிறது. செழிமையாக இருந்த இந்தப் பிரதேச மக்களின் வீழ்ச்சியும் இந்தப் பாடசாலையை பாதித்தாக தொடர்ந்து அதிபர் பாலச்சந்திரன் குறிப்பிட்டார்.

"யுத்தம் கடுமையாக வதைத்த எங்கள் மாணவர்கள் மீண்டும் கல்வியில் சிறந்த நிலைக்கு சென்று கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஆசிரியர்களும் அயராது உழைத்து வருகிறார்கள். தற்போதைய பெரு விளையாட்டில் மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தைப் பெற்று மகாணமட்டப் போட்டிகளுக்கு செல்லும் நிலையில் உள்ளது. எல்லா சொத்துக்களையும் இழந்து மிகவும் வறிய நிலையில் உள்ள மக்கள் வளங்களை இழந்து வீடற்று பெற்றோர்களை இழந்து உறவினர்களை இழந்து இந்த இக்கட்டான நிலையில் ஏதோ ஒரு துன்பத்துடன் மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள்

பாடசாலை என்று இங்கு வந்து கல்வி கற்பதற்கான எந்தச் சூழ்நிலையும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். யுத்தத்தின் வடுக்களுக்குள் அகப்பட்டு இருக்கிற இன்றைய நிலையில் இந்தப் பாடசாலையை எப்படியாவது நகர்த்திச் செல்ல வேண்டும் என்று நினைக்கிறோம். இந்தப்பாடசாலையை நகர்த்திச் செல்ல அனைத்து தரப்பினரும் உதவிகளை நல்க வேண்டும். குறிப்பாக புலம்பெயர்ந்து வாழுகின்றன இந்தப் பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் ஆதரவை நாங்கள் எதிர்பார்க்கிறோம்"

வகுப்பறைகள் இல்லாமல் கரும்பலகைகள் இல்லாமல் சுவர்களில் எழுதிப் படிக்கும் வகுப்புக்களையும் பார்க்க நேரிட்டது. இப்பொழுது பாடசாலையை பழைய நிலமைக்கு கொண்டு செல்ல அவசியமான உதவிகள் அபிவிருத்திகள் தேவைப்படுகின்றன. இந்தப் பாடசாலை குறித்து பழைய மாணவர்கள் அதிக அக்கறை காட்ட வேண்டும் என்று அதிபர் பாலச்சந்திரன் கேட்டுக் கொண்டார்.

"புலம்பெயர்ந்த பழைய மாணவர்கள் நலன் - விரும்பிகளிடம் நான் சில உதவிகளை எதிர் பார்க்கிறேன். இந்தப் பாடசாலைக்கு அவசியமாக நீர் வழங்கல் சேவை ஒன்றை வடிவமைக்க வேண்டியுள்ளது. அதற்குரிய நடவடிக்கைகளை செய்ய வேண்டியுள்ளது. இங்கு படிக்கின்ற பெற்றோர்களை இழந்த பிள்ளைகளுக்கு நிதி உதவிகளைச் செய்வதன் வாயிலாக அவர்களின் உயர் படிப்புக்களுக்கு உதவ வேண்டும். பாடசாலைக் கட்டடங்கள் சுற்று வேலிகள் என்பன புனரமைப்பு செய்ய வேண்டியுள்ளது. இவற்றை எங்கள் உறவுகள் செய்து தர வேண்டும் என்பதை வினயமாக எதிர்பார்க்கிறேன். பாரிய யுத்தம் ஒன்றினால் நிர்க்கதி நிலையில் உள்ள இந்தப பாடசாலையை மேம்படுத்தி மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை இனி தாக்க உதவிகள் அவசியமாக தேவைப் படுகின்றன.

பூநகரிப் பிரதேசத்தைப் பொறுத்தவரை நாங்கள் தான் முதன்மையான பாடசாலை. ஆனால் நகர்ப் புறத்திலிருந்து மிக அதிகமான தொலைவில் இருக்கிறது. போக்குவரத்து நெருக்கடிகள் முக்கியமாக ஆசிரியர்களின் வருகையை பாதிக்கின்றன. மாணவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று மேலதிக கல்வியைக் கற்பதற்கோ வேறு பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கோ வளங்களைப் பெறுவதற்கோ இயலாத நிலையில் உள்ளார்கள். ஆனால் பாடசாலையில் மேலதிக வகுப்புக்களை நடத்தி பரீட்சை யில் மாணவர்களை வெற்றி பெறச்செய்வதற்கு கடுமையாக முயற்சித்து வருகிறோம். ஆசிரியர்கள் தங்கி நிற்பதற்கு தங்குமிட வசதி குடிநீர் வசதி, குளிநீர் வசதி என்பன இல்லாதிருக்கின்றன. எங்களுக்கு சில வளங்கள் கிடைக்குமாக இருந்தால் நல்லமுறையிலே மீண்டும் அதே நிலைக்கு செல்ல முடியும் என்பதை உறுதியாக நாங்கள் நம்புகிறோம்"

பல மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பி செழிப்பான வாழ்க்கைக்கு அடிகோலிய இந்தப் பாடசாலை தனது பிரமாண்டத்தை இழந்து செழிப்பை இழந்து கூரையற்றுப் போயிருக்கிறது. விரிந்த வானமும் வெயிலும் காற்றும் வகுப்பறையாகிப் போயிருக்கும் இந்தப் பிள்ளைகளின் கல்வி இன்று மிக நெருக்கடியான நிலையில் இருக்கிறது. பொறுப்பான அக்கறையின் வாயிலாக யுத்தம் தாக்கிய பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்தி சிதைந்திருக்கும் எங்கள சமூகத்தை உயிரூட்ட வேண்டிய கடமை நம அனைவருக்கும இருக்கிறது. சிலவளங்கள் இருக்குமானால் பழைய நிலைமைக்கு செல்லுவோம் என்ற அதிபரின் உறுதியான வார்த்தைகள் உதவிகளை ஒத்துழைப்பை வேண்டிநிற்கின்றன.

தீபச்செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை ஈச்சிலம்பற்றுப் பிரதேசத்துக்கு வெருகல் ஆற்றிலிருந்து குடிதண்ணீர்

திருகோணமலை, ஒக.3

சுமாராக 40 கோடி ரூபா செலவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியீட்டல் மூலமாக வெருகல் ஆற்று நீரைப்பயன்படுத்தி திருமலை ஈச்சிலம்பற்று பிரதேசத்திற்கான குடிதண்ணீர் விநியோக விஸ்தரிப்பு திட்டமொன்றை மேற்கொள்ள தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

மகாவலி ஆற்றின் நீரே வெருகல் கங்கை ஆற்றில் சேருகின்றது. கல்லரிப்பு வெருகல் கங்கை நீரைபயன்படுத்தி அதனை சமரத்தடிக்கு திசைதிருப்பி சுத்திகரித்து விநியோகிக்கப்படவுள்ளது.

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வெருகல், ஈச்சிலம்பற்று, கறுக்காமுனை, இலங்கைதுறை, வெருகல் முகத்துவாரம், உப்பூறல் (சின்னவெளி), பூம ரத்தடிக்கு, பூநகர் உள்ளிட்ட 10 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு இந்நீர் விநியோகிக்கப்படவுள்ளது.

இதன் மூலம் நாளொன்றுக்கு 2700 கன மீற்றர் நீரை விநியோகம் செய்யகூடியதாக இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கென மூன்று வெவ்வேறு இடங்களில் 8 ஏக்கர் காணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

உரிய அதிகாரிகள் வெருகல் ஆற்று நீர் மாதிரிகளை பல தடவைகள் பரிசீலனைக் குட்படுத்தி உப்புத்தன்மை இல்லாதப் பொருத்தமான நீர் என தெரிவித்துள்ளார்கள்.

சமீபத்தில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை உயர் அதிகாரிகள் குழுவினரும் வெருகல் பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் என். நவநீதன், குடியேற்ற உத்தியோகத்தர் எஸ்.எல்.நெபளர் ஆகியோரும் இவ்விடங்களை பார்வையிட்டனர்.

இதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், விரைவில் திட்டம் ஆரம்பமாகுமென்றும் உயர் அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, மூதூர் கிளிவெட்டி பகுதிக்கு சிறியநீர் விநியோகத் திட்டமொன்றை மேற் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என அதிகாரியொருவர் கூறினார்.

குடிதண்ணீர் விநியோகத்திட்டம் நடை முறைப்படுத்தப்படுவதன் மூலமாக இங்குள்ள சுமார் 10 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் பெரிதும் நன்மை பெறுவார்கள்.

(ளி)




# கிழக்கில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முஸ்லிம்களின் ஒத்துழைப்பு நீடிக்கவேண்டும்

## மாகாணப் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக.3

''சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பூரண ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். இந்த ஒத்துழைப்பு நீடிக்க வேண்டும். இதுவே எமது எதிர்பார்ப் பாகும்.''

இவ்வாறு கிழக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் எடிசன் குணதிலக, சட் டம், ஒழுங்கு தொடர்பான உயர்மட்ட மாநாடொன்றில் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளன தலைமையகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற இம்மாநாட்டில் காத்தான்குடி முஸ்லிம் சிவில் சமூகத் தலைவர்கள் பங்குபற்றினார்கள்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் தொடர்ந்து பேசுகையில்,

''புலிகள் முஸ்லிம்களைக் கொன்று குவித்தபோது அவர்களைப் பாதுகாத்தவர்கள் பொலிஸாரும், முப்படையினரும், விசேட அதிடிரப்படையினரும்தான். இன்று யுத்தம் முடிவடைந்து பூரண அமைதி தோன்றியுள்ளது'' என்றார்.

''இந்தச் சூழலில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டக் கிழக்கு முஸ்லிம்கள் பூரண ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். இந்த ஒத்துழைப்பு நீடிக்க வேண்டும்'' என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எடிசன் குணதிலக வலியுறுத்தினார்.

மாவட்ட நீதிபதி வீ.இராமகமலன், மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம்.கருணாரட்னா, அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், பள்ளிவாயல் நிர்வாகிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். போதைப் பொருள் பாவனை, வீதி ஒழுங்கு கடைப்பிடிப்பு சமாதானமான வாழ்க்கை ஆகியவை குறித்தும் இங்கு விரிவாகப் பேசப்பட்டது.

(ளி)

# சிமெந்து தொழிற்சாலை தூசு பாதிப்புகளை குறைக்க ஏற்பாடு

திருகோணமலை,ஒக.3

திருகோணமலையிலுள்ள சிமெந்து தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் தூசுகளால் மக்களுக்கும் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

80 மில்லியன் ரூபா செலவில் தூசுகளை கடலுக்கடியில் படியச் செய்யும் உபகரணத் தொகுதி பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இத்தொழிற்சாலையில் நாளொன்றுக்கு 60 அயிரம் சிமெந்து மூடைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 3500 பேர் தொழில்வாய்ப்புகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் பெறுகின்றனர் என சிமெந்து தொழிற்சாலையின் நிர்வாக இயக்குநர் பீ. எம்.ஜீ. பண்டார ஆய்வு கூட்டமொன்றில் தெரிவித்தார்.

சிமெந்து தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் தூசுகளால் அயலில் உள்ளவர்களுக் கும் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக இக்கூட்டத்தில் மிக விரிவாக ஆராயப்பட்டது.

மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெவ்வை தலைமையில் கிழக்கு மாகாண முதலமைச் சரின் அலுவலக கேட்போர் கூடத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

உபகரணம் பொருத்தி முடிந்ததும், இதனால் சூழலுக்கும், அயலிலுள்ளவர்களுக்கும் எதுவித பாதிப்புகளும் ஏற்படமாட்டா வென நிர்வாக இயக்குநர் இதில் சுட்டிக்காட்டினார்.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் செல்வராசா குறிப்பிடுகையில்:-

''சிமெந்து தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் தூசுகளால் அயலிலுள்ளவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். விவசாயச் செய்கையும் பாதிக்கப்படுகிறது என பொது மக்கள் என்னிடம் முறையீட்டு மனுக்கள் கையளித்துள்ளனர்'' - என்றார்.

மாகாணசபை குழுவில் திருமதி ஆரியவதி கலபதி, செல்வராசா, மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை - ஆகியோர் அடங்குவர்.

(ளி)

# மலையகக் கட்சிகளின் ஒன்றிணைந்த செயற்பாடுகளே இலங்கை - இந்திய வம்சாவழித் தமிழர்களைக் காக்கும்

## தொழிலாளர் விடுதலை முன்னணித் தலைவர் அய்யாத்துரை தெரிவிப்பு

கொழும்பு ஓகஸ்ட்.3

''இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் அரசியல் உரிமை களை வென்றெடுக்கும் பொருட்டு மலை யக அமைப்புகள் ஒன்றிணைந்து தமது கோரிக்கைகளை தேர்தல் மறுசீரமைப்பு ஆணைக் குழுவிடம் முன்வைக்கவேண்டும். அதே வேளை மக்கள் நலன்கருதி பொதுக் கோரிக்கை ஒன்றை முன்வைத்து அதனடிப்படையில் மலையக அமைப்புகள் கலந்துரையாட வேண்டும்''

- இவ்வாறு தொழிலாளர் விடுதலை முன்னணியின் தலைவர் டி. அய்யாத்துரை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

''அரசமைப்பு சீர்திருத்தம் மூலம் நடைமுறையிலிருக்கும் விகிதாசாரத் தேர்தல் முறைமை மாற்றப்பட்டு தொகுதிவாரி முறைமை கொண்டுவரப்படவுள்ளது.

இந்தத் தொகுதிவாரித் தேர்தல் முறையில் அதிகமாக பாதிக்கப்படப்போவது மலையக இந்திய வம்சாவளித் தமிழ் மக்களே.

இவற்றை மலையக தமிழ் அமைப்புகள் கவனத்தில்கொண்டு, சமூக சிந்தனையோடு கொள்கை ரீதியாக ஒன்றுப்பட்டு செயல்படுவது அவசியமாகும்.

இன்றைய நிலையில் மலையக தமிழ்ச் சமூகத்தின் அரசியல் உரிமையையும், அரசியல் பிரதிநிதித்துவத்தையும், மக்கள் தெரிவுக்கேற்ப வென்றெடுப்பது முக்கிய பணியாகும்.

ஒரு தீர்மானம் எடுக்கப்படும்போது கருத்து முரண்பாடுகள் தவிர்க்க முடியாதவை. அதே நேரம் சமுக நலனை முன்நிறுத்தி முரண்பாடுகளை மறந்து ஒன்றுபட்டு செயல்படுவது அவசியம்.

இதை மலையக தொழிற்சங்கத் தலைமைகளும், அரசியல் தலைமைகளும், சிவில் அமைப்புகளும், புத்தி ஜீவிகளும், புரிந்து கொள்ள வேண்டும்.

தேர்தல் மறுசீரமைப்பு என்பது மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவதாகும். இன்றைய நிலையில் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் வீழ்ச்சி அடைந்து வருகிறது.

எனவே, தேர்தல் மறுசீரமைப்பு ஆணைக் குழு விடம் எல்லா அமைப்புகளும் ஒன்றுப்பட்டு ஒரே கோரிக்கையை முன்வைக்க வேண்டும். இதன்மூலம் பிரதேசசபை எல்லைகள், கிராம சேவையாளர் பிரிவு எல்லைகள், இந்திய வம்சாவளி தமிழ் மக்க ளின் செறிவுக்கேற்ப நிர்ணயிக்கப்படுவதை வலியுறுத்த வேண்டும்.

அதேநேரம் ஏனைய மாவட்டங்களில் பரந்துப்பட்டு வாழும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை பெறுவதற்கான எல்லைகள் வகுக்கப்படுவ தும் அவசியமாகும்.

1978 ஆம் ஆண்டு அரசு கொண்டு வந்த புதிய விகிதாசாரத் தேர்தல் முறைமை இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவங்களை அதிகரிக்கச் செய்தது.

அதேநேரம், நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் ஒரே அணிக்குள் கருத்துமுரண்பாடுகள் உள்ள பலர் போட்டியிட்டனர். இதனால் அவர்கள் மத்தியில் பிரதிநிதித்துவத்தை பெறுவதில் பாரிய வீழ்ச்சியேற்பட்டது.

எனவே, மலையக அமைப்புகள், தமது அரசியல் தொழிற்சங்க முரண்பாடுகளைக் களைந்து மக்கள் நலன்கருதி தேர்தல் மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடம் கொள்கை ரீதியாக கோரிக்கைகளை முன்வைத்து அவற்றை வென்றெடுக்க வேண்டும்.

இந்த இலட்சியத்தோடு அனைத்து மலையக தமிழ்த் த்லைமைகளும் கைகோத்து செயல்படவேண்டியது அவசியமாகும்'' - இப்படி அய்யாத்துரை தனது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ளி)




# மாத்தளை மாவட்டத்தில் புதியவகை கண்நோய்

மாத்தளை, ஒக.3

மாத்தளை மாவட்டத்தில் ஒருவகை கண்நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது என மாவட்ட வைத்தியசாலைகள் தகவல் வெளியிட்டுள்ளன.

தம்புள்ள, மாத்தளை, கலேவெல, நாலந்த, சீகிரிய போன்ற வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளுக்கு நாளாந்தம் சுமார் 30 - 40 கண்நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்றனர்.

கண்சிவத்தல், எரிச்சல், கண்ணீர் வழிதல், கண்ணைச் சுற்றி வீங்குதல் போன்ற அறிகுறிகளுடன் நோயாளிகள் வருகின்றனர். இக்குணங்குறிகள் சுமார் 3-7 நாட்கள் வரை-நீடிக்கின்றன.

எனவே, அறிகுறிகள் தோன்றியவுடன் கைவைத்தியம் செய்யாமல் உடனடியாக வைத்தியசாலைகளுக்கு வருமாறு பொது மக்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

நோய்க்குறிகள் தோன்றியவுடன் பகிரங்க இடங்களுக்குச் செல்லாமலும் கைக்குட்டைகளால் கண்களைத் துடைக்காமலும் இருக்கவேண்டும்.

மாணவர்களாயின் நோய் குணமாகும் வரை பாடசாலைகளுக்கு செல்வதைத் தவிர்க்கவேண்டும். இத்தகைய நடவடிக்கைகளால் ஏனையவர்களுக்கு நோய் பரவுவதைத் தடுக்கலாம் - என மாத்தளை மாவட்டபதில் சௌக்கிய சேவைப் பணிப்பாளர் லலித் திஸாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ளி)

# பிறப்புகளைப் பதிவு செய்யாத நிலையில் மத்திய மாகாணத்தில் ஐம்பதாயிரம் பேர்

புசல்லாவை, ஓக.3

மத்திய மாகாணத்தில் பிறப்பைப் பதிவு செய்யாத சுமார் ஐம்பதாயிரம் மேற்பட்டோர் இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

''மிதுருசெவன'' என்ற நிறுவனத்தின் இணைப்பதிகாரி காமினி பேரேரா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பிறப்பைப் பதியாமல் இருக்கும் இவர்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை போன்றவற்றை பெறுவதற்கு பெரும் சிரமப்படுகின்றனர்.

இதனை அடுத்து புசல்லாவை பகுதியிலுள்ள நியூபிக் தோட்டம், சங்குவாரி தோட்டம், அட்டபாகே, சோகிம தோட்ட மக்களுக்காக வூஸ்க் நிறுவனத்தின் அனுசரணையுடனும், உடபலாத்த பதிவாளர் உதவியுடனும் கடந்த மாதம் 27 ஆம் திகதி யன்று நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டன.

புசல்லாவை மெல்போட் தோட்டத்தில் போலியான தரர்கள் மூலமாக பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற்ற மூன்று பெண்கள் ஏற்கனவே புசல்லாவை பொலிஸரால் கைது செய்யப்பட்டனர். எனவே, பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாவர்கள் எமது நடமாடும் சேவை மூலம் அவற்றைப் பெற்று கொள்ளலாம் - இப்படி காமினி பெரேரா தெரிவித்தார்.

(ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைக்குப் போகும் விளைபொருள்களுக்கு கழிவு; விவசாயிகளின் வாழ்க்கையில் எப்போது விடிவு?

'' காடு விளைந்து என்ன மச்சான் நமக்குக் கையும் காலுந்தானே மிச்சம்...''

விவசாயம் செய்து அதன் பயனை அனுபவிக்க முடியாத விவசாயி ஒருவனின் ஏக்கப் பெருமூச்சு அது.

அமரர் பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரத்தின் இடதுசாரிச் சிந்தனை, சினிமா மூலம் வெளிப்பட்ட பாடல் அது.

எமது விவசாயிகளின் நிலையும் இதனை ஒத்ததாகவே இருக்கின்றது.

**தமது ஏக்கப் பெருமூச்சுக்களை வடித்த விவசாயிகளின் கண்ணீர் இங்கு பதிவு செய்யப்படுகிறது.** விவசாயப் பின்புலத்தைக் கொண்ட கிராமத்தில் குடியிருக்கும் எனக்கு அவர்களின் வேதனைகளைச் சொல்லி நியாயம் கிடைக்க உதவ வேண்டிய ஒரு கடப்பாடும் உள்ளது.

எமது பிரதேசத்தில் உள்ள விவசாயிகள் தமது உற்பத்திகளைச் சந்தைக்கு எடுத்துச் சென்று வியாபாரிகளுக்கு விற்கும்போது ஒவ்வொரு 10 கிலோ பொருள்களுக்கும் 1கிலோ வீதம் வியாபாரிகளால் கழிக்கப்படுகின்றது. அதாவது 50 கிலோ கத்தரிக்காயைக் கொண்டுசெல்லும் விவசாயிக்கு 45 கிலோ நிறைக்கே பணம் கிடைக்கும்.

மிகுதி 5 கிலோ கத்தரிகாயும் வியாபாரிக்குக் கழிவாக விடப்படும்.

அத்துடன் 50 கிலோ நிறைக்கும் மொத்த விலையால் பெருக்கி வரும் தொகைக்கு விவசாயியே சந்தைக்குக் குத்தகைச் சீட்டுக்குப் பணம் வழங்குதல் வேண்டும்.

கத்தரிக்காய் மட்டுமல்ல எல்லா மரக்கறிகளுக்கும் இதே நிலைதான்.

வாழைப்பழங்கள் விற்கும் போது தண்டுக்கு நிறைக்கேற்ப 2 கிலோ முதல் 3,4,5 கிலோ வரை விவசாயி கழிவு கொடுக்கவேண்டும். இது சற்றுப் பரவாயில்லை.

57 கிலோ மரக்கறி வகை ஒன்றை விவசாயி கொண்டு சென்றாலும் 51 கிலோ நிறைக்கே பணம் கொடுக்கப்படுகின்றது.

ஆனால் இந்த நடைமுறை எமது பிரதேசத்தில் மட்டும்தான் நிலவுகின்றது.

தம்புள்ள மரக்கறிச் சந்தையிலோ, தென்பகுதியின் எந்தவொரு சந்தையிலோ இந்த நடைமுறை பின்பற்றப்படுவதில்லை. அங்கு பொருள்களின் மொத்த நிறைக்குப் பணம் வழங்கப்படுகிறது. எம்மவர் அனுப்பும் பொருள்களுக்கும் அதே மாதிரியே பணம் வழங்கப்படுகின்றது. அங்கிருந்து இங்கு வரும் வியாபாரிகள் வெங்காயம், பீற்றூட் போன்ற பல வகை மரக்கறிகளுக்கும் மொத்த நிறைக்கே பணம் கொடுக்கின்றனர். 47 கிலோ 400 கிராம் எடை வந்தால்கூட கிராம் நிறைக்கும் அளந்து பணம் கொடுக்கின்றனர்.


தற்போது யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற கொழும்பைத் தளமாகக் கொண்ட பல்தேசியக் கம்பனியொன்று விவசாய விளைபொருள்களை ஒப்பந்தம் செய்து பெற்றுக்கொள்கின்றது. அவர்களும் இவ்வாறே நிறுத்துப் பணம் கொடுக்கின்றனர்.

ஆனால் எமது பிரதேசச் சந்தைகளில் மட்டும் 10 கிலோ என்றால் 1 கிலோ கழிவு! இங்குள்ள சில மரக்கறி வியாபாரிகள் தென்பகுதியிலிருந்து வந்து கொள்வனவில் ஈடுபடுவோரையும் குழப்பி ''கழிவு கழித்துக் காசைக் கொடுங்கள்'' என்கின்றனர். தமது நடைமுறையைப் பின்பற்றத் தூண்டுகின்றனர். தம்மையும் கெடுத்து வருகின்றவர்களையும் கெடுக்கின்றனரே என விவசாயிகள் குமுறுகின்றனர்.

எமது பிரதேசத்தில் 1990களின் ஆரம்பத்தில் சந்தைகளின் குத்தகையை நிர்வகித்தோரால் 10இற்கு 1கிலோ கழிவு வியாபாரிகளுக்கு வழங்கும் நடைமுறை திணிக்கப்பட்டதாக விவசாயிகள் கூறுகின்றனர். யாழ். குடாநாடு இலங்கையின் சகல பிரதேசங்களுடனும் சுதந்திரமாகப் பிணைக்கப்பட்டுவிட்ட நிலையிலும், சிவில் சமூகக் கட்டமைப்பை நோக்கி வேகமாகப் பயணிக்கும் நிலையிலும் விவசாயிகளுக்கு அநீதி தரும் இக்கழிவு முறையை ஒழிக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இக்கழிவு முறையின் பாதகமான பரிமாணங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

கத்தரிக்காய் கிலோ ஒன்றின் மொத்த விலை 100 ரூபா என வைத்துக் கொள்வோம். விவசாயி ஒருவர் 100 கிலோ கத்தரிக்காயைச் சந்தையில் கொண்டு போய் வியாபாரிக்குக் கொடுத்தால் அவர் 10 கிலோ கழித்து 90 கிலோவிற்குப் பணம் கொடுப்பார். பின்பு வியாபாரி தனக்குக் கழிவாகக் கிடைத்த 10 கிலோ கத்தரிக்காயையும் ரூபா 120 அல்லது 125,130 ரூபா என ஏதோவொரு விலையில் விற்பார். 120 ஆக விற்பார் என வைப்போம். அவருக்கு 1200 ரூபா பணம் கிடைத்துவிடும். அதன்பின் வியாபாரி



மிகுதி 90 கிலோ கத்தரிக்காயையும் எடுத்த விலேக்கே அதாவது கிலோ ஒன்று 100 ரூபாவுக்கே விற்கத் தொடங்குவார். இதனால் சந்தைக்கு வருவோர் இந்த வியாபாரியிடமே கத்தரிக்காயை வாங்க முற்படுவார்கள். இதனால் ஏனைய வியாபாரிகளின் கத்தரிக்காய் விலைப்பட முடியாமல் போகும்.

அவர்களிடம் பொருள் தேங்கி விடும். அடுத்தநாள் கத்தரிக்காய் கொள்வனவில் ஈடுபட முடியாமல் நிற்பார்கள். நட்டப்படுவார்கள். அதனால் முதல் கிலோ ஒன்று 100 ரூபா விற்ற கத்தரிக்காய் அடுத்த நாள் ரூபா 80 அல்லது 70ஆக மொத்த விலை இறங்கிவிடும். இதனால் அருந்தலாக விளைவிக்கும் அக்காலப்பகுதியில் விவசாயியும் பாதிக்கப்படுகின்றான். இது பெரும் பாதிப்பாகவே இருக்கின்றது. சில சமயம் கிலோ 200, 300 ரூபா விற்கும்போது பாதிப்பு அதிகம். சந்தையில் ஏனைய வியாபாரிகளும் பாதிக்கப்படுகின்றனர்.

**இந்தக் கறுப்பு வியாபாரம் எமது சந்தைகளில் நாட்டாண்மை காட்டும் சிலரால் கனகச்சிதமாக அரங்கேற்றப்படுவதாக வியாபாரிகள் கவலையுடன் கூறுகின்றனர்.**

10 இற்கு ஒரு கிலோ கழிக்கும் தற்போதைய நடைமுறையை நீக்கி விடுவோமாயின் விவசாயி/வியாபாரி இரு பகுதியினரதும் பாதிப்புக்கள் நீங்கி விடுமல்லவா?

விவசாயி பொருள் விற்பனையில் ஏமாற்றப்படும் சில நடைமுறைகளைப் பார்ப்போம். எமது சந்தைகளில் சாதாரண தராசுதான் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் நிறை அளக்கும் போது ஓரிரு கிலோ குறைவாகவே பதியப்படுவதாக விவசாயிகளால் குறை கூறப்படுகின்றது. எலக்ரோனிக் தராசு தான் கட்டாயம் பாவிக்க வேண்டுமென்ற நடைமுறையை பிரதேசசபைகள், நகர, மாநகர சபைகள் கட்டாயப்படுத்தினால் விவசாயிகளுக்குப் பாதிப்பு இருக்காது.

விவசாயி பொருள்களை விற்கச் சென்றால் சாதாரணமாக கிலோ ஒன்று 50 ரூபா விலை போகும் சந்தர்ப்பத்தில் 55 ரூபா தருவதாகக் கூறிப் பொருளை வாங்கிய வியாபாரி அவற்றைத் தனது இடத்தில் கொட்டிவிடுவான். பணத்தை உடன் கொடுக்காது நேரத்தைக் கடத்திவிட்டு மொத்த வியாபாரம் கலையும் சமயமாகப் பார்த்து பொருள் இப்போது 45 ரூபாவாகத்தான் போகிறது முடியாவிட்டால் திருப்பி கொண்டு போ எனக் கூறி வயிற்றில் அடிக்கும் நிகழ்வுகளும் நடக்கின்றன.

விடியற்காலையில் சந்தையில் ஒரு பொருள் கிலோ ஒன்று 60 ரூபா விற்குமாயின் நேரம் செல்லச் செல்ல பொருள்கள் வரத் தொடங்க வியாபாரிகள் சிலர் கூடி நின்று தமக்குள் இணக்கப்பாட்டைத் தோற்றுவித்து 50 அல்லது 40 ரூபாவாகக் குறைத்து எடுக்கும் நடைமுறைகளும் சில சமயம் நிகழ்கின்றது. இதனாலும் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

ஒரு பயிரை நடுகை செய்து வரட்சி, இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து கூலி வேலைக்கு ஆளைத் தேடிப் பிடித்து அதிக கூலி கொடுத்து பசளை, உரங்களுக்குச் செலவழித்தே விவசாயி வேளாண் பொருளை விளைவிக்கின்றான்.

மின்சாரத்தை நம்பிய நீர்ப்பாசனம் உள்ள விவசாயிகள் மின்தடைக்கு முகம் கொடுத்து, கிணற்றில் நீர்ப்பாசன முறை தப்பினால் அடுத்த முறை எனக் காத்து நிற்கின்றார்கள்.

பயிரைப் பாதுகாக்க கண் விழிக்கவும் வேண்டி வருகின்றது. கடன் தொல்லைகளும் எழுகின்றது.

இவ்வாறெல்லாம் பாடுபடும் விவசாயின் அறுவடையில் ஒரு பகுதியை கழிவு என்ற பெயரிலும், சந்தைக் குத்தகைக்குப் பணம் என்ற பெயரிலும் இழப்பது வருத்தத்திற்குரியது.

**தமது உற்பத்தியை விற்பது தொடர்பில் விவசாயிக்கும், மீனவருக்கும் பாரியதொரு வேறுபாடு இருப்பதாக அனுபவசாலிகள் கூறுகின்றனர்.**

விவசாயி தனது உற்பத்தியில் தரமானவற்றைச் சந்தையில் விற்றும், வெட்டப்பட்டவற்றை, சேதப்பட்டவற்றை தனது வீட்டுத் தேவைக்கும் எடுத்துத் தன்னைத் தியாகம் செய்கின்றான்.

ஆனால் பெரும்பாலான மீனவர்கள் கடலில் பிடிக்கும் மீன்களில் தரமானவற்றை சுவைமிக்க அபூர்வ மீனினங்களை தமது வீட்டுத் தேவைக்கு எடுக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.மீன்களை விலை கூறி விற்றுச் சந்தைப்படுத்தும் போதும் இந்த பத்துக்கு ஒன்று கழிவு இல்லை. மாறாக விலை கூறுபவருக்குக் கூலியாக சில மீன்கள் கையால் அள்ளியெடுக்கப்படுகின்றது.

இதே நடைமுறைதான் 1990 இற்கு முன்பு மரக்கறிகளுக்கும் இருந்ததாக மூத்த விவசாயிகள் கூறுகின்றனர். அதே நடைமுறையையாவது மீண்டும் கொண்டு வந்து தமது வருமான இழப்பைத் தடுங்கள் என ஆதங்கப்படுகின்றனர்.

தமிழகத்தில் முதல்வர் கருணாநிதி உழவர் சந்தை எனும் முறையை ஏற்படுத்தி உள்ளார்.

இச்சந்தையில் விவசாயியும் பொருள் வாங்குவோரும் நேரில் சந்தித்து விலைபேசி பொருளை வாங்குவார்கள். சந்தையின் குத்தகைக்காக சிறு தொகைப் பணம் கொடுக்கப்படுகின்றது.

விவசாயின் வருமானம் சுரண்டல் எதுவுமின்றி உறுதிப்படுத்தப்படு கின்றது. இந்த உழவர் சந்தை முறையை எமது பிரதேசத்திலும் கொண்டுவர வேண்டுமென்ற குரல் அவ்வப்போது பத்திரிகைகளில் முன் வைக்கப்படுகின்றது.

ஆனால் இந்த உழவர் சந்தை முறை 1983ஆம் ஆண்டுக்கு முன்பு கிளிநொச்சியில் இருந்ததாக மூத்த விவசாயிகள் கூறுகின்றனர்.

கிளிநொச்சி நகரத்தில் வடக்கின் மிகப் பெரிய மரக்கறிச் சந்தை புதன், சனிக்கிழமைகளில் முன்பு கூடுகின்ற. செவ்வாய் இரவு தொடங்கும் சந்தை புதன் காலை 10 மணி வரை சுறுசுறுப்பாக நடைபெறுமாம். அதேபோல வெள்ளியிரவு ஆரம்பித்து சனி காலை 10 மணி வரையிலும் நடைபெறும். யாழ்ப்பாணம் உட்பட்ட வடமாகாணத்தின் சகல பகுதிகளிலும் உள்ள விவசாயிகள் கிளிநொச்சிக்குத் தமது விளைபொர்ருள்களைக் கொண்டு வந்து விற்றுப் பணம் பெறுவர். மிகச் சிறிய தொகை சந்தைக் குத்தகையாக வழங்கப்படும். தென்பகுதி உட்பட நாட்டின் நாலா பாகங்களிலுமிருந்து வரும் வியாபாரிகள் கிளிநொச்சியில் மரக்கறிகளை வாங்கி இரவோடு இரவாக தமது சந்தைகளுக்கு மீள் வியாபரம் செய்ய லொறிகளில் கொண்டு போவார்கள். இதெல்லாம் முடிந்து போன கதை.

உள்நாட்டு யுத்தத்தால் இச்சந்தைக் கட்டமைப்பு முற்றாகவே அழிந்து போய் மாத்தளை மாவட்டத்திலுள்ள 'தம்புள்ள' இலங்கையின் மிகப் பெரிய மரக்கறிச் சந்தை ஆகிவிட்டது.

விவசாயம் மட்டுமே செய்து காணி வாங்கவோ, வீடு கட்டவோ கூடிய சிறிமா யுகம் எப்போதோ மறைந்து விட்டது. சொந்த நிலம் உள்ளவனும் கூலிக்குப் போகவோ பிறர் தயவில் நிற்கவோ வேண்டியுள்ளது. இன்று கைத்தொலைபேசிப் பாவனை பரவலாகிவிட்டதால் சந்தைகளின் பொருள் விலைகளிலும், பொருள் வரவிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. வியாபாரத்தின் போக்கையும் தீர்மாகிக்கின்றது.

**பணம் சம்பாதிப்பதுதான் பெரும்பாலானவர்களின் குறிக்கோளாக இன்று மாறிவிட்டது. விவசாயி நட்டப்பட்டு நொந்து போய் உணவை விளைவிக்காதுவிட்டால் சேர்த்த பணத்தைச் சாப்பிட்டுப் பசி தீர்க்க முடியுமா?**

**எமது பிரதேசத்தில் சந்தைகளை நிர்வகித்து வரும் பிரதேச, நகர, மாநகர சபைகள் சந்தையை மொத்தமாகக் குத்தகைக்குக் கொடுத்து யாரிடம் அதிக பணம் பெறமுடியுமென்பதில் மட்டும் குறியாக உள்ளன.**

உணவை விளைவித்துத் தரும் விவசாயியின் ஏக்கப் பெருமூச்சைப் பற்றி யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. ஊருக்கு ஊர் விவசாயச் சம்மேளனங்கள் உள்ளன. நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளது போன்று விற்பனை நடைமுறையைப் பின்பற்றி விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டுமென அவை நீண்ட காலமாகவே கோரிக்கை விடுத்து வருகின்றன.

**- மருதன் -**

எதற்கெடுத்தாலும் 'வடக்கின் வசந்தம்' எனக் கூறுவோர் இந்த வசந்தத்தையும் விவசாயிகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பார்களா? மாவட்ட விவசாயக் குழு, பிரதேச செயலகங்களில் விவசாய ஒருங்கிணைப்புக் குழு, விவசாயம் தொடர்பான திணைக்களங்கள் என உள்ள அமைப்புக்கள் விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை தொடர்பில் நடைமுறைச் சாத்தியமானவற்றைச் செய்ய வேண்டும்.

**சிவில் சமூகக் கட்டமைப்பை நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் விவசாயிகள் நீதித்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டு தமது நியாயத் தன்மையை வென்றெடுக்க முயலவேண்டும்.**

எமது வட மாகாணம் பெருமளவுக்கு விவசாயப் பின்புலத்தைக் கொண்டதாக இருப்பதால் விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றுதல் வேண்டும்.

''கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி விவசாயி...'' என்று உன்னதமாகக் கூறப்படும் விவசாயிகளின் எதிர்காலத்தை ஒளிர வைக்க பொறுப்புள்ளவர்கள் முன்வர வேண்டும்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன்னையறிந்தால் நீ.... உன்னையறிந்தால்

30 வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்வு இது.பல்வேறு நாடுகளில் இருந்தும் மாணவர்கள் வந்து படிக்கும் பள்ளிக்கூடம் விடுமுறை நாள் ஒன்றில் உலகப் புகழ்பெற்ற சர்க்கஸ் காட்சிக்கு மாணவர்களைக் கூட்டிப் போனார் தலைமை ஆசிரியர்.

அங்கு ஒரு பெரிய யானை ஒன்று சின்ன மரஸ்டூல் மீது தன் பெரிய உடம்பை மடக்கி உட்கார்ந்து துதிக்கையைத் தூக்கி வணக்கம் சொன்னது.

பள்ளிக்கூடம் திரும்பியதும் தலைமை ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து கேட்டார் இவ்வளவு சின்ன மேசையில் பெரிய யானை எப்படி உட்கார முடியும் காரணம் கேட்டார்.

அதற்கு இந்திய மாணவன் ஒருவன் ... சொன்னான் அதுதான் சார் விநாயகர் மகிமை என்றான். யானைதான் விநாயகர் விநாயகர் தான் யானை என்று காரணமும் கூறினான். இந்தியர்களுக்கு மதம் தாண்டி எதையும்.... சிந்திக்கத் தெரியவில்லை.

அடுத்து சோலியத் ருஷ்யா மாணவன் யானையிடம் ஒன்றும் இல்லை. அங்கே தள்ளி ஒருவர் சவுக்குடன் நிற்பது தான் காரணம் என்றான். அதிகாரம் தான் சமூகத்தின் போக்கை நிர்ணயித்தது.

அடுத்து ஜப்பானிய மாணவன் யானைக்கு உண்மையில் தன்னோட பலமே தெரியவில்லை. தன்னோட உண்மைப் பலம் தெரிந்தவர்கள் தகுதி குறைந்த இடத்தில் அடங்கிக் கிடப்பார்கள். இதுதான் உண்மை.

ஒருமுறை கழுகு ஒன்று கோழிக்குஞ்சுகள் மேய்வதைப் பார்த்து மேலிருந்து தரையிறங்கியது. கழுகைக் கண்ட குஞ்சுக் கோழிகள் இறகுகளால் வயிற்றில் அடித்தபடி கூண்டை நோக்கி ஓடத் தொடங்கியது. அதனுடன் கழுகுக் குஞ்சும் ஒன்று ஓடியது. ஒரு கழுகு முட்டை தவறி கீழே விழுந்தது. கோழி அடைகாத்து குஞ்சு பொறித்த போது கழுகுக் குஞ்சும் பொறிந்து இதோ குஞ்சுகளுடன் வளர்ந்தது.

அந்தக் கழுகுக் குஞ்சைப் பார்த்து அட அசட்டுக் குஞ்சே ஏன் என்னைப் பார்த்து ஓடுவது ஏன் நில் என்றது. பெரிய கழுகு என்னை முட்டாள் என்று நினைத்தாயா கோழியாகப் பிறந்தது என் தலையெழுத்து. நான் எப்படி உன்னைப் பார்த்து பயப்படாமல் இருக்க முடியும். இதுதான் இன்றைய பெரும் சிக்கல். தாம் யார் தமது பலம் என்ன என்று அறியாமல் இருக்கிறார்கள்.

சு.கி.சிவம்

# செயலைச் செய் பயனில் பற்று வைக்காதே!



இரண்டு விவசாயிகள் ஒருவர் கர்மயோகி, மற்றொருவர் சராசரி விவசாயி, கரும்பு பயிரிடுவதைவிடக் கஞ்சா பயிரிட்டால் காசு கூடக் கிடைக்கும் என்றால் பயன் மீது வைத்த பற்றால் , வெட்கம் இன்றிக் கஞ்சா பயிர் செய்வார். கர்மயோகி அப்படிச் செய்வாரா?மாட்டார். உழைப்பு அவரது தவம். உழவே அவரது ஜபம். வேள்வியிருந்து விலக்க முடியா அக்கினி போல விவசாய பூமியில் இருந்து விலக்க முடியாதவர் அவர். உழைக்காமல் வரும் காசு அவருக்கு அருவருப்பு தரும் கரன்சி காகிதங்களை மட்டுமே தின்னும் பணப்பசி அவருக்கு இருக்காது.

அந்தக் கர்மயோகியின் விவசாயின் சாம்ராஜ்யம் விலாசமானது. கலப்பையும் கையுமாக அவர் களத்தில் இறங்கும் போது கதிரவனே அவரைக் கைநீட்டி வரவேற்றான். அந்தக் காலைக் கதிரவன் ஒரு கர்மயோகியின் வரவுக்காக வானம் வைக்கும் வரவேற்பு வளையம், இவரது கம்பீரத்தில் கால் பங்காவது கஞ்சா பயிரிடுபவன் அனுபவித்தது உண்டா? தேசத்தின் தேவைகளை நெல்லாலும் கோதுமையாலும் நிறைவேற்றும் கடமை உணர்வுமிக்க விவசாயிகள் கர்மயோகிகள் பாரதத்தாயின் தவப் புதல்வர்கள்.

இது கருதியே செயலில் பயனில் ஆர்வம் செலுத்துவோரை விட, செயலில் ஆர்வம் காட்டுபவரைக் கீதை கொண்டாடுகிறது. செயலின் பயன் எப்படியும் வரத்தான் போகிறது! அதிலிருந்து விலகி நின்று செயலை நேசிக்க நாம் படிக்க வேண்டும்.

ஆசார்ய வினோபா பாவே எளிமையாக விளங்குகிறார்... ''குழந்தை விளையாடுகிறது,இதனால் அதற்கு உடற்பயிற்சியின் பயன்தானே கிடக்கிறது. ஆனால் அப்பயனிடத்தில் அதற்குக் கவனம் இருப்பதில்லை இதற்கு இன்பம் முழுவதும் விளையாட்டிலேதான்.

சமுதாயம் செம்மையாகச் செயல்பட காரியம் முக்கியம், காரியத்தின் விளைவுகளின் மீதுள்ள கற்பனை எதிர்பார்ப்பு, ஆசை காரியத்தையே கெடுத்து விடுகிறது. நண்பர்களே பள்ளிக்கூடத்தில் படித்த பழைய கதை.... நினைவிருக்கிறதா? கண்ணாடிப் பொருள்கள் விற்கும் வியாபாரி ஒருவன்... ஓய்வுக்காக மர நிழலில் படுத்தபடி கற்பனை செய்கிறான். கூடையில் உள்ள இந்தக் கண்ணாடிப் பொருள்களை நல்ல விலைக்கு விற்றால் நிறைய லாபம் வரும். அதையும் முதலீடு செய்து விற்றால் பல மடங்கு லாபம் வரும். பிறகு பெரிய பணக்காரன் ஆவேன். பணக்காரன் ஆனதும் பணக்காரன் வீட்டில் பெண் எடுப்பேன். அவள் பணத்திமிரால் என்னை அவமதித்தால்.... ஆஹா... அவளை இப்படித்தான் எட்டி உதைப்பேன் என்று கூடையை உதைக்க... ஐயோ.. முதலுக்கே மோசம். அவன் எதிர்காலம் சுக்குநூறானது செயலின் பயன் மீதான ஆர்வம் கொண்டவர்நிலை பெரும்பாலும் இந்தக் கண்ணாடி வணிகரின் கதைதான்.

பாடுபட்டு ஒரு செயலைச் செய்து, அதன் பலனில் இரந்து விலகி நிற்பது என்பது முடிகிற காரியமா? அப்படியானால் செயலின் பயன் மீது நமக்கு உரிமை கிடையாதா? உண்டு . உரிமை இல்லை என்று கீதை ஒரு போதும் சொல்லவில்லை. முப்பது நாளும் உழைத்துவிட்டு ஒன்றாம் திகதி சம்பளத்திற்காகவே முப்பது நாளும் குப்பை கொட்டாதே என்பது தான் அதன் ஜீவன். மனிதர்களை மூன்று வகையாகப் பிரிக்கிறது கீதை. ஒரு செயலை செய்து விட்டு பயனை மட்டுமே விட்டு விடுவதா? என்னால் முடியாது! செயலையும் விட முடியாது. பயனையும் விட வேண்டும் என்று போராடுவது ராஜாகுணம். பயனை விடுவது என்றால் செயலையும் விட்டு விடுவோம் என்று சொம்பிப்படுப்பது தமோ குணம். செயலைச் செம்மையாகச் செய்துவிட்டு பயனில் பற்று வையாது விலகி நிற்பதுசத்வ குணத்தின் இயற்கை அசாத்திய துணிவு -உண்மை உணர்வுடைய ஆன்ம ஞானிகளாலேயே இது முடிகிறது!

உலக வரலாறு படித்தவர்கள் ஓர் உண்மையை அறிவார்கள். உலகெங்கும் தங்கள் மக்கள் விடுதலைக்குப் போராடிய தலைவர்கள் விடுதலை விழாவில் முன்நிற்பர். வெற்றியின் பயனாக விடுபட்ட நாட்டின் தலைமைப் பொறுப்பு தரப்படும் அல்லது பெறப்படும். ஆனால் இந்தப் பரத நாட்டில் தான் விடுதலைப் போருக்குத் தலைமையேற்ற காந்தி மகான் பெற்ற நாட்டின் தலைமையை ஏற்க விரும்பவில்லை. கொடியேற்று விழாவில் கோலாகலங்களில் மாலைக்காகத் தோள்களைத் தயார் செய்து கொள்ளாமல் தேசத்தின் நிர்மாணப் பணிகளுக்கு மக்களைத் தயார் செய்து தம்மை அர்ப்பதித்துக் கொண்டார்.

கோ.சுவாமிநாதன்.

# பொன் மொழிகள்

* உங்கள் கண்ணும் காதும் விழித்திருந்தால் கருத்தும் இதயமும் திறந்திருந்தால் எங்கிருந்தோ கிடைக்கும் யோசனைகள் கூட எவ்வளவோ பயன்தரும்!
* பிடிவாதம் ஒரு தவறான குணம் அல்ல. எதற்காகப் பிடிவாதம் என்பது தான் முக்கியமான விடயம்.
* சாதாரணர்களில் இருந்து அசாதாரணர்கள் தோன்றுகிறார்கள்!
* சிறியவர்களுடன் பழகினால் மனது இளமையாகும்! பெரியவர்களுடன் பழகினால் அறிவு விருத்தியாகும்! சமமானவர்களுடன் பழகினால் மகிழ்ச்சி அதிகமாகும்!
* கறுப்பாக இருப்பது பாவம் அல்ல அது பாரம் பரியத்தின் பரிசளிப்பு; கடின உழைப்புக்குச் சூரியன் கொடுத்த அன்பளிப்பு
* காலத்தைக் கொண்டாடுகிறவரைக் காலம் கொண்டாடுகிறது. மற்றையோரைக் காலம் கொண்டு போகிறது!
* உங்களைப் பற்றிய உங்கள் அங்கீகாரமே உங்கள் அத்திபாரம்! பிறரது அங்கீகாரம் வெறும் அலங்காரமே!
* சவால்கள்தான் உங்களை உங்களுக்கும் உங்களை உலகுக்கும் அடையாளம் காட்டும்! ராஜ குமாரர்களின் மணி மகுடங்களைவிட தேவகுமாரனின் முள்மகுடம் உலக புகழ் பெற்றது.
* தடைகள் வெற்றியின் புதையல்! தடங்கல் வெற்றியின் தடங்கள்!
* நீங்கள் எதிர்பார்க்கும் சம்பளத்திற்கும் முதலாளிதரும் சம்பளத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் அவருக்கு நீங்கள் தரும் டியூஷன் பீஸ்!

பு.தட்சிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# வணிகக் கல்வி - 02 | பகுதி - I

01. "Entrepreneurship" என்னும் பதத்தில் வருகின்ற தடித்த எழுத்திலான P என்பது குறித்துநிற்கும் மிகப் பொருத்தமான அர்த்தம் பின்வருவனவற்றில் எதுவாக உள்ளது?
   1) Productivity - உற்பத்தித்திறன்.
   2) Profit - இலாபம்.
   3) Passion - பேரார்வம்.
   4) People - மக்கள் / ஊழியப்படை.
   5) Promotion - மேம்படுத்தல்.

02. ஒரு வணிகத்தின் இடரினைக் கருத்திற்கொண்டு அந்த வணிகத்தை ஆரம்பித்து முகாமைசெய்யும் நபரை முயற்சியாளன் என வரைவிலக்கணப்படுத்தியது,
   1) ஜோசப் சும்பீற்றர்.
   2) ஒக்ஸ்போட் ஆங்கில அகராதி.
   3) மேரியம் வெப்ஸ்ர அகராதி.
   4) வில்லியம் D.பைகிறேப். 5) ஜேம்ஸ் A.F.ஸ்ரோனர்.

03. சகன்யா கடன்திட்டத்தில் பங்குகொள்ளும் அமைப்புக்களில் மிகச் சரியான விடை எது?
   1) NDB வங்கியும் வணிக வங்கிகளும்.
   2) DFCC வங்கியும் வணிக வங்கிகளும்.
   3) மத்திய வங்கியும் வணிக வங்கிகளும்.
   4) சமுர்த்தி வங்கியும், வணிக வங்கிகளும்.
   5) இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும்.

04. அமைப்புக் கட்டமைப்பானது ஆரம்பத்தில் குறிப்பிடப்படுவது,
   1) செயற்பாடுகள் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படுவதும் கட்டுப்படுத்துவதும்.
   2) வளங்கள் ஒதுக்கப்படும் முறை.
   3) திணைக்களங்கள், அலுவலகங்களின் அமைவிடம்.
   4) கொள்கைக் கூற்றுக்கள் நிறுவனத்தினால் அபிவிருத்தி செய்யப்படுதல்.
   5) செயற்பாட்டுத் திட்டம்.

05. வேலைச் சிறப்பாக்கலின் நோக்கமாவது,
   1) தனியாக செயற்படுவோரின் எண்ணிக்கையை விரிவாக்கல்.
   2) வேலை வினைத்திறனை அதிகரித்தல்.
   3) வேலைப் பயனுறுதியை அதிகரித்தல்.
   4) வேலையில் நடுத்தர முகாமையின் திருப்தியை அதிகரித்தல்.
   5) மேற்பார்வையைக் குறைத்தல்.

06. USX கம்பனியானது சக்திவாய்ந்த கம்பனியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இம் மாற்றத்திற்குக் காரணம்,
   1) நிறைவேற்றுகை. 2) கொள்கை.
   3) தந்திரோபாயம். 4) இலட்சிய நோக்கு.
   5) பிரமாணங்கள்.

07. தந்திரோபாயத் திட்டமிடுதலில் அடங்குவது,
   1) கூட்டுத் தந்திரோபாயமும் வணிகத் தந்திரோபாயமும்.
   2) தந்திரோபாய உருவாக்கமும் தந்திரோபாயத்தை விருத்திசெய்தலும்.
   3) உள்ளீடுகளும் வெளியீடுகளும்.
   4) சூழல் பகுப்பாய்வும் உள்ளகப் பகுப்பாய்வும்.
   5) விதியும் கொள்கையும்.

08. தொடர்பாடலின் ஆரம்பமானது,
   1) தகவலை ஊடகத்திற்குச் செலுத்துதல்.
   2) எண்ண உருவாக்கம்.
   3) தகவலை ஊடகத்திலிருந்து பெற்றுக்கொள்ளல்.
   4) ஊடகத் தெரிவு. 5) துலங்கல்.

09. சிறுவணிகங்கள் தோல்வியடைவதற்கான முக்கிய காரணமாக பின்வருவனவற்றில் எதனைக் கூறலாம்?
   1) குறைவான நிதிக்கட்டுப்பாடு.
   2) குறைவான இடவசதி.
   3) முகாமைத்துவத் தவறுகள்.
   4) யுத்தம். 5) காலநிலை.

10. வலு எண்ணக்கரு புலப்படுத்துவது,
   1) அதிகாரப் பகிர்வும் பொறுப்பும்.
   2) அமைப்புத் தொடர்பான பதவிநிலை.
   3) பிறரின் நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்துவதிலுள்ள ஆற்றல்.
   4) தனியாளினால் வழங்கப்படும் விசேட அறிவு.
   5) ஒருவகை ஊக்குவிப்பு.

11. தொழிற்பாட்டு முகாமையாளர்களின் பொறுப்பாகக் கொள்ளக்கூடியது,
   1) தனிப்பரப்பின் செயற்பாடுகள்.
   2) உயர்தர முகாமை ஊழியர்.
   3) குழப்பமான அமைப்பின் உப அலகுகள்.
   4) புதிதாக அபிவிருத்தியாக்கப்பட்ட செயற்பாடுகளை உபகரணங்கள் மூலம் செய்தல்.
   5) உபாயத் தீர்மானம் செய்தல்.

12. சில சமயங்களில் கொள்கையானது இவ்வாறு வரைவிலக்கணப் படுத்தப்படுகின்றது,
   1) சுருக்கமாகச் சிந்தித்தல். 2) செயற்பாட்டுத் திட்டம்.
   3) தந்திரோபாயத்தின் பதிலீடு.
   4) முகாமைத்துவ அதிகாரத்தின் பதிலீடு.
   5) வெளியீட்டின் தரம்.

13. பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் செயற்பாடானது எதிலிருந்து ஆரம்பிக்கிறது?
   1) நிலைமையை ஆராய்வது.
   2) மாற்று வழிகளை நிறுவுதல்.
   3) கடினத் தன்மையை இனங்காணல்.
   4) முன்னேற்றுதல் 5) அதிகாரப் பிரயோகம்.

14. புதிய வணிகத்தை உருவாக்குவதற்கு பின்வருவனவற்றில் எது முக்கியமான காரணியாக உள்ளது?
   1) நிதி. 2) சந்தை.
   3) அரச ஊக்குவிப்புக்கள். 4) குடும்ப ஊக்குவிப்புக்கள்.
   5) நண்பர்கள்.

15. செயல் முகாமைத்துவத்தில் சிக்கல் தன்மை வாய்ந்த பாரிய செயற்றிட்டங்களைச் சிறப்பாகச் செய்துமுடிப்பதற்கான கால அளவை அறிந்துகொள்ளப் பயன்படும் நுட்பமுறை எது?
   1) A,B,C பகுப்பாய்வு. 2) கான்ற் வரைபு.
   3) வலைப்பின்னல் ஆய்வு (Network Analysis)
   4) பேர்ட் நுட்பமுறை (PERT)
   5) மேற்கூறப்பட்ட எல்லாம்.

16. சிறுவர்களை வேலைக்குச் சேர்ப்பதைத் தடைசெய்வதற்கான சட்டப் பிரமாணங்களும் சோதனைகளும் இடம்பெறுவது தொடர்பில் மிகச்சரியான காரணம் எது?
   1) திட்டம். 2) ஆட்சேர்ப்பு.
   3) பாதுகாப்பு. 4) வேலை.
   5) கிரயக் குறைப்பு.

17. உற்பத்தி அல்லது செயற்பாட்டு முகாமையின் முக்கிய பணி எது?
   1) வழங்கல் சங்கிலியை இனங்காணல்.
   2) கேள்வியை எதிர்வுகூறல்.
   3) அமைவிடத்தைத் திட்டமிடல்.
   4) தளக்கோளத்தைத் திட்டமிடல்.
   5) வேலைகளை ஒழுங்காக வரிசைப்படுத்துதல்.

18. பின்வருவனவற்றில் வணிகம் ஒன்றின் நீண்டகால முதலீட்டுத் தீர்மானமாகக் கருத முடியாதது எது?
   1) நவீனமயப்படுத்தல் பற்றிய தீர்மானம்.
   2) புனரமைப்புப் பற்றிய தீர்மானம்.
   3) கடன்பட்டோர் பற்றிய தீர்மானம்.
   4) மேம்படுத்தல் பற்றிய தீர்மானம்.
   5) பண்முகப்படுத்தல் பற்றிய தீர்மானம்.

19. வணிகம் ஒன்றின் அன்றாடச் செலவுகளைத் தீர்ப்பதற்கு அந்த அமைப்பிற்குள்ள ஆற்றலை அளவிட்டு அறிய உதவும் மிகப்பொருத்தமான விகிதம் எது?
   1) நடைமுறை விகிதம். 2) துரித விகிதம்.
   3) காசு விகிதம். 4) கால அளவீட்டு விகிதம்.
   5) கடன் சொத்து விகிதம்.

20. விளம்பரம் ஒன்றின் நோக்கமாகக் கருத முடியாதது,
   1) அறிவு வழங்கல். 2) தூண்டுதல்.
   3) ஞாபகமூட்டுதல். 4) வலுவூட்டல்.
   5) கணிப்பிடல்.

✱ 21-30 வரையான வினாக்களுக்கு உரிய இடைவெளியில் பொருத்தமான விடையை எழுதுக.

21. வணிகம் ஒன்றின் வெற்றிக்கு அதன் முயற்சியாளன் முதலில் .......................... உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

22. ஒரு முயற்சியாளன் முதலில் ஓர் உற்பத்தியை உருவாக்கும் எண்ணத்தை மனதில் கொண்டு அதற்கான சந்தை வாய்ப்பைத்தேடிச் செயற்படுவதை .......................... என அழைப்பது பொருத்தமாகும்.

23. உயர் முகாமையாளருடைய தலைமைத்துவத்தின் கீழ் தயாரிக்கப்படும் நீண்ட காலத்திற்குரிய திட்டமாக .......................... உள்ளது.

24. பெரும்பாலான நிறுவனங்களின் வினைத்திறன் குறைபாட்டிற்குக் காரணமாக அமைவது அங்கு சேவையாற்றும் தனியாட்களுக்கான ....................குறைவு என அறியப்பட்டுள்ளது.

25. பொறுப்பு இல்லையேல் .......................... ஏற்படமாட்டாது.

26. ஒரு முகாமையாளர் அவரின் நாளாந்தக் கருமங்களில் 78 வீதத்தை .................... சம்பந்தமாகவும், அதில் 90 வீதத்தை .................... சம்பந்தமாகவும் செலவிடுவது அறியப்பட்டுள்ளது.

27. புதிய உற்பத்திப்பொருள் தொடர்பான ஆரம்ப நடைமுறையை .......................... என அழைக்கலாம்.

28. பதவி உயர்வில் கருத்தில் கொள்ளப்படும் காரணிகளாக .......................... மற்றும் .......................... என்பன பின்பற்றப்படுகின்றன.

29. Barcode ஆரம்பத்தில் .................... ஆக பொதிகளில் பொறிக்கப்பட்டது. தற்போது அதை சில நிறுவனங்கள் .................... ஆகப் பொறிக்கின்றன.

30. சந்தைப்படுத்தல் செயற்பாடுகள் பூரணமடைவதற்கு நல்ல உற்பத்தி, கவர்ச்சிகரமான விலை .......................... ஆகிய அம்சங்கள் அவசியமாக உள்ளன.

✱ 31-40 வரையான வினாக்களுக்கு உரிய பகுதியில் சரியான விடையை எழுதுக.

31. உற்பத்திக்கிரயத்தை சிக்கனப்படுத்துவதற்கான இரு நுட்பமுறைகளைப் பெயரிடுக.
   1) ..........................................
   2) ..........................................

32. உள்நாட்டில் குழப்ப நிலைகளினால் இடம்பெயர்ந்தவர்கள் தமது தொழிலை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு வசதியாகத் தற்போது வணிக வங்கிகளால் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டங்களுக்கு மீள்நிதி வசதியைச் செய்யும் அமைப்பு எது?
   ..........................................

33.

| இயல்பு | பிரதான பலகை | டிரிசவி பலகை |
|---|---|---|
| இழிவு மூலதனம் | .................... | .................... |
| பொதுமக்களுக்குரிய இழிவுப் பங்குகள் | .................... | .................... |

34. பெரும்பாலான தொழிற்சாலைகளுக்கான இட அமைவைத் தெரிவுசெய்வதில் முக்கிய காரணியாக எது கருதப்படுகின்றது?
   ..........................................

35. ஓர் உற்பத்திச் செயற்பாட்டில் மேம்படுத்தல் தொடர்பாகச் செய்யவேண்டிய இரு ஆராய்ச்சிகள் எவை?
   1) ..........................................
   2) ..........................................

(13 ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்: B.S.பசில், DMI, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. குறிப்பிட்ட பொருள் அல்லது சேவை தொடர்பில் நுகர்வோருக்குள் தோன்றுகின்ற விருப்பத்தின் அடிப்படையான கேள்வி காணப்படும் சந்தையை எவ்வாறு அழைக்கலாம்?

......................................................................

37. அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| இயல்பு | பரந்த விநியோகம் | விசேட விநியோகம் |
|---|---|---|
| பொருள் | .................... | .................... |
| நடுவர்கள் | .................... | .................... |


38. ஒரு கூட்டு உடன்படிக்கை எப்பொழுது சட்டம்போல் கருதப்படும்?

......................................................................

39. நுண்பாக சந்தைப்படுத்தல் முறையில் இலக்கு சந்தைகளுக்கான மட்டங்கள் எவை?

1) ......................................................................
2) ......................................................................
3) ......................................................................
4) ......................................................................

40. படத்தைப் பார்த்து விடை தருக.



1) இது எவ்வகை ஒழுங்கமைப்பு?

......................................................................

2) இதன் விசால அளவு எவ்வகைப்பட்டது?

......................................................................

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## வணிகக் கல்வி - 02 | பகுதி - II

அறிவுறுத்தல்:
* முதலாம், 2ஆம் வினாக்கள் உட்பட நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

01. 1) அ. முயற்சியாண்மைக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையே நெருங்கிய தொடர்புகளைத் தருக.
ஆ. முயற்சியாளனின் பண்புகளில் ''அர்ப்பணிப்பு'' (Dedication) என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
2) ''முகாமையாளனிடம் காணப்படவேண்டிய திறன்களில் தொழில்நுட்பத் திறன், மானிடத் திறன், எண்ணக்கருத் திறன் என்பவற்றை விட வேறு திறன்களும் அவசியமாக உள்ளன.'' எனக் கூறுவர். அவற்றில் மூன்று வேறுபட்ட திறன்களைக் கூறி விளக்குக.
3) அ. செயல் முகாமைத்துவத்தில் தன்னியக்கப் பொறிமுறை என்பதனால் நீர் கருதுவது யாது?
ஆ. சில நிறுவனங்கள் இயந்திர மனிதர்களை செயல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்றன. இதன் மூலம் அவை அடைந்துகொள்ள எதிர்பார்க்கும் நன்மைகள் எவை?
4) மீள்கொள்வனவுச் சந்தை (REPO) மற்றும் மாற்று மீள்கொள்வனவுச் சந்தையில் (Reverse REPO) இருந்து வேபடுத்திக் காட்டுக.
5) அ. தொழில்சார் முகாமைத்துவ சாயலில் இருந்து தொழிலாளர்சார் முகாமைத்துவ சாயல் வேறுபடும் வழிகளைத் தருக.
ஆ. செயல் முகாமைத்துவ நடவடிக்கைகளின் ஒவ்வொரு கட்டத்திலும் பயன்படுத்தக்கூடிய கட்டுப்பாடுகளைக் குறிப்பிடுக.
6) சுருக்கமாக விளக்குக.
அ. விசால அளவு. ஆ. நெடு ஒழுங்கமைப்பு.
இ. மையப்படுத்தல்.

02. 1) அ. மனிதவள முகாமைத்துவம் எனப்படுவது யாது?
ஆ. மனிதவள முகாமை நோக்கங்கள் எவை?
2) அ. சிறப்பு குறுஞ்சந்தை (Niche Market) எனப்படுவது யாது?
ஆ. மேம்படுத்தல் கலவையில் பயன்படும் விளம்பரப்படுத்தல், விற்பனை மேம்படுத்தல், தனிப்பட்ட விற்பனை, மக்கள் தொடர்பு, நேர் சந்தைப்படுத்தல் என்பவற்றுக்கு மேலாக வேறு எத்தொடர்பாடல் திட்டங்கள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன?
3) உற்பத்தி வாழ்க்கை வட்டத்தின் வளர்ச்சிக்கட்டம், முதிர்ச்சிக் கட்டம், வீழ்ச்சிக் கட்டம் என்பவற்றில் பின்பற்றப்படும். உற்பத்தித் தந்திரோபாயங்களையும், விலைத் தந்திரோபாயங்களையும் தனித்தனியே குறிப்பிடுக.
4) அ. சிறுவணிகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன் முயற்சியாளன் எக் காரணிகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும்?
ஆ. சிறுவணிக முயற்சியாளர்கள் சிறிய வணிகச் சந்தைச் சந்தர்ப்பங்களிலும் நுழைவதற்கான காரணங்கள் யாவை?
5) அ. கொழும்புப் பங்குச்சந்தையில் தயாரிக்கப்படும் வெவ்வேறு விலைச் சுட்டிகள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் நன்மைகள் எவை?
ஆ. கொழும்புப் பங்குச்சந்தையில் நடைபெறும் எல்லா கொடுக்கல்வாங்கல்களும் பொதுவாக எவ்விரு முறைகளில் இயங்குகின்றன?
6) சுருக்கமாக விளக்குக.
அ. வணிகத் திட்டம். ஆ. திறைசேரி முறி.
இ. தொழில் நியமம்.

03. 1) சாதாரணமாக தொழிற்சங்கங்கள் கையாளும் கைத்தொழில் நடைமுறைகளைக் கூறி விளக்குக.
2) சந்தைப்படுத்தல் எண்ணக்கருவை முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கருவில் இருந்து வேறுபடுத்திக் காட்டுக.
3) அ. நிறுவனங்கள் திட்டமிட்டு வேலைகளைச் செய்வதனால் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் எவை?
ஆ. விசால அளவை நிர்ணயிப்பதில் செல்வாக்குச்செலுத்தும் முக்கிய காரணிகளைத் தருக.
4) சுருக்கமாக விளக்குக.
அ. திணைக்களப்படுத்தல்.
ஆ. தடைவிதியா தலைமைத்துவம். இ. வேலை ஆய்வு.

04. 1) அ. பாய்ச்சல் உற்பத்தி முறையில் காணக்கூடிய அனுகூலங்கள் எவை?
ஆ. உரிய நேரத் தந்திரோபாய முறையில் (JIT) சில பிரதிகூலங்களும் சுட்டிக் காட்டப்படுகின்றன. அவற்றைக் குறிப்பிடுக.
2) அ. ஒழுங்கு முறையில் அமைந்த தொடர்பாடல் கட்டமைப்பின் வகைகள் எவை?
ஆ. சரியான வணிகத் திட்டத்தைப் பின்பற்றாத நி[illegible] பிரச்சினைகளைக் கூறுக.
3) சந்தைப்படுத்தலின் மைய எண்ணக்கரு எச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது?
4) சுருக்கமாக விளக்குக.
அ. வியாபாரக் குறி. ஆ. கடைதல் விலை.
இ. அக முயற்சியாண்மை.

05. 1) உற்பத்தி ஒன்றிற்கான விலையைத் தீர்மானிப்பதில் உள்ள படிமுறைகளை ஒழுங்கான முறையில் எழுதிக்காட்டுக.
2) வணிக நிறுவனம் ஒன்றில் குறித்த நிதியாண்டின் முடிவின்போது இருப்புக்கள் ரூபா 50,000. கடன்பட்டோர் ரூபா 12,000. கடன்கொடுத்தோர் ரூபா 30,000. காசு ரூபா 5,000. வங்கிமீதி ரூபா 11,000. முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 2,000.
அ. மொத்த தொழிற்படு மூலதனம் எவ்வளவு?
ஆ. தேறிய தொழிற்படு மூலதனம் எவ்வளவு?
இ. நடப்பு விகிதம் எவ்வளவு?
ஈ. விரைவு விகிதம் எவ்வளவு?
3) அ. பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிகள் எவை?
ஆ. அலகுப் பொறுப்பாட்சி ஸ்தாபனத்தில் காணப்படும் மூன்று கட்சியினர்களைத் தருக.
4) சுருக்கமாக விளக்குக.
அ. கரைகடந்த வங்கிச்சந்தை.
ஆ. வினைத்திறன் கொடுப்பனவு. இ. தகுதிகாண் காலம்.

06. 1) அ. சிறுவணிகங்களில் பொதுவாகப் புலப்படக்கூடிய பண்புகள் எவை?
ஆ. சிறுவணிகங்கள் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பணரீதியான ஊக்குவிப்புக்கள் எவை?
2) அ. வணிக வளங்களில் மிக முக்கியமானதும் கிரயம் கூடியதுமான வளம் எது?
ஆ. வணிக அமைப்பு ஒன்றின் சிறந்த தலைவரிடம் காணப்படவேண்டிய பண்புகள் எவை?
3) அ. உற்பத்தி நிறுவனம் ஒன்றின் இயலுமை 400,000 அலகுகள். இவ் இயலுமையில் உற்பத்தி செய்யும்போது மொத்த நிலையான கிரயம் ரூபா 100,000 ஆகவும், மொத்த மாறும் கிரயம் ரூபா 200,000 ஆகவும் உள்ளது. இவற்றின் அலகொன்றை ரூபா ஒன்றிற்கு விற்க முடியும். எனின், சமப்பாட்டுப் புள்ளியில் விற்பனைத் தொகை யாது?
ஆ. சமப்பாட்டுப் புள்ளியைக் கணிப்பிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் எவை?
4) சுருக்கமாக விளக்குக.
அ. நுண்பாகச் சந்தைப்படுத்தல்.
ஆ. வாக்குரிமையற்ற பங்கு.
இ. கட்டளையிடுதலில் ஓரினத்தன்மை.

வணிகக் கல்வி 02 (பகுதி I) இற்கான விடைகள் நாளை இப்பகுதியில்

## விடைக் குறிப்புகள்

### கணக்கீடு 02, பகுதி - I (26.07.2010)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01-5 | 02-2 | 03-5 | 04-2 | 05-3 | 06-2 | 07-4 | 08-5 | 09-5 | 10-2,4 |
| 11-5 | 12-5 | 13-4 | 14-3 | 15-3 | 16-4 | 17-3 | 18-1 | 19-4 | 20-4 |

21 - ஐந்தொகையில் காட்டப்படாத ஒதுக்கம். இது திட்டமிட்டுச் செய்யப்படும்.
22 - 1 - ஒப்பிடக்கூடிய தன்மை மேம்படும்.
2 - எளிதாகப் புரிந்துகொள்ளக்கூடிய தன்மை அதிகரிக்கும்.
3 - பண்புசார் நலன் கொண்டதாக மேம்படுத்தல்.
23 - 1 - பொதுக்கூட்டத்தில் பங்குபெறும் உரிமை.
2 - பொதுக்கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமை.
24 - சாதாரண தொழிற்பாடுச் சக்கரத்தில் தீர்க்கப்படுமென எதிர்பார்த்தல்.
அடிப்படையில் வியாபாரத் தேவைக்காக வைத்திருத்தல்.
ஐந்தொகைத் திகதியிலிருந்து 12 மாதத்தினுள் தீர்க்கப்படுமென எதிர்பார்ப்பது.
25 - கையிலுள்ள காசும் கேள்வி வைப்பும்.
26 - 1 - மதிப்பீடு மேற்கொள்ள அடிப்படையாகக் கொண்ட சூழ்நிலைகளில் மாற்றங்கள் ஏற்படுல்.
2 - புதிய தகவல்களின் விளைவு.
27 - திரண்ட தேய்மானமும் திரண்ட சேத இழப்புக்களும் கழித்தபின் ஒரு சொத்துத் தொடர்பாக ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகை, முன்கொண்டு செல்லப்படும் தொகை.
28 - கடந்தகாலச் செயற்பாடு ஒன்றினால் உருவான நிறுவனத்திற்குச் சொந்தமான பெறுமதியுடைய எதுவும் சொத்தாகும்.
கடந்தகாலச் செயற்பாடு ஒன்றினால் உருவான நிகழ்கால, எதிர்கால கடப்பாடு பொறுப்பாகும்.
29 - 1 - நிதிக் கணக்கீடு - வரலாற்றுத் தகவல்களைக் கொண்டது.
கிரயக் கணக்கீடு - நியமத் தகவல்களைக் கொண்டது.
2 - நிதிக் கணக்கீடு - உள்ளக, வெளியகப் பயன்பாட்டாளர்.
கிரயக் கணக்கீடு - வெளியகப் பயன்பாட்டாளர்.
3 - நிதிக் கணக்கீடு - சட்டம் கட்டுப்படுத்தும்.
கிரயக் கணக்கீடு - எச்சட்டமும் கட்டுப்படுத்தாது.
30 - 1 - மருந்து வகை.
2 - உதவியாளர் சம்பளம்.
31 - பொய்யானது. 32 - பொய்யானது. 33 - உண்மையானது.
34 - பொய்யானது. 35 - உண்மையானது.
36 - பங்களிப்பு, விற்பனை. 37 - அதிகரிக்கும். 38 - அதிகரிக்கும்.
39 - சுமத்தப்பட்ட. 40 - இற்றைப் பெறுமதி.

தொகுப்பு: D.Sam, DMI, யாழ்ப்பாணம்.

### வணிகக் கல்வி 01, பகுதி I (02.08.2010)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01-3 | 02-1 | 03-5 | 04-1 | 05-4 | 06-2 | 07-4 | 08-3 | 09-4 | 10-5 |
| 11-1 | 12-1 | 13-2 | 14-4 | 15-2 | 16-2 | 17-4 | 18-1 | 19-3 | 20-5 |

21 - உற்பத்தி. 22 - சனத்தொகை (மக்கள் சூழல்)
23 - கியோட்டோ உடன்படிக்கை. 24 - நுகர்வோர் அலுவலர்கள் பேரவை.
25 - அந்நியோன்னிய முகவராண்மை. 26 - கலப்புச் சேர்க்கை.
27 - ஒதுக்குப் பணம். 28 - 11%
29 - வெளிநாட்டுக் கம்பனி. 30 - பொதுமக்கள் பொறுப்புக் காப்புதி.
31 - அ - சிறிலங்கா இன்சூரன்ஸ், ஆ - கோல்டன் கீ கிரடிற்காட் கம்பனி.
32 - அ - ஒப்படைப்புக் கட்டளை / ஒப்படைப்புச் சீட்டு, ஆ - புகையிரத வார்நாமம்.
33 - அ - உணவுப் பாதுகாப்பு, ஆ - பாதுகாப்பு வழங்கல் சங்கிலி.
34 - மத்திய வங்கியின் ஆளுநர், நிதி அமைச்சின் செயலாளர், நியமன உறுப்பினர்.
35 - CESS வரி. 36 - (6600) 37 - அரைகுறைநட்டமற்ற பாதுகாப்பு.
38 - இலங்கை உலக வர்த்தக மத்திய நிலையம்.
39 - விவசாயம் 12.1%, கைத்தொழில் 28.6%, சேவை 59.3%
40 - 1 - முகாமைத் தகவல்முறைமை Mis, 2 -தீர்மானம் உதவி முறைமை DSS

தொகுப்பு: B.S.பசில், DMI, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



நினைத்த காரியங்கள் நினைத்தபடி நடக்கும். எதிர்பாராத செலவு ஒன்றைச் சந்திக்கலாம். உங்களின் மனக் குமுறல் ஒன்றை மற்றவர்களிடம் சொல்வீர்கள். பணிபுரியும் இடத்தில் சிலர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். உங்களின் தவறு ஒன்றை மறைக்க, சிலரிடம் பொய் சொல்வீர்கள். புதிய அனுபவம் பெறலாம்.

### இடபம்



பண விவகாரங்களில் சிலர் கொடுத்த வாக்கை காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். வெளியூர்களில் இருந்து முக்கியமான அல்லது சங்கடம் தரும் செய்தியை கேட்கலாம். விரும்பிய ஒரு பொருளை அதிக விலை கொடுத்து வாங்குவீர்கள். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். சோர்வு, சோம்பல் கூடும்.

### மிதுனம்



தெம்பு, உற்சாகமாகச் செயற்படும் நாள். சொத்து விவகாரங்களில் நினைத்தது நடப்பது கடினம். உறவினர்களிடம் அன்பாகப் பேசி உங்களுக்கு வேண்டியதை சாதிப்பீர்கள். பிரியமான சிலருடன் பயணங்கள் செல்ல நேரிடலாம். தொழிலுக்கு நண்பர்கள் வழியில் உதவி கிடைக்கலாம். நண்பர்களுக்காக மற்றவர்களிடம் பரிந்து பேசுவீர்கள்.

### கடகம்



பெண்கள் வழியில் எதிர்பாராத சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். உறவினர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். குடும்ப விவகாரங்களில் பொறுமை, நிதானத்துடன் செயல்பட வேண்டும். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வரலாம். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள்.

### சிங்கம்



சக ஊழியர்கள் கேட்ட உதவிகளைச் செய்து, அவர்களின் பாராட்டைப் பெறுவீர்கள். சகோதரர்கள் வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் தீரும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரிடலாம். விருந்து அல்லது பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளலாம். விரும்பாத ஒருவரை முக்கியமான இடத்தில் சந்திக்கலாம். கனவுத் தொல்லையுண்டு.

### கன்னி



தொழில் ரீதியான அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மனைவி தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்து செல்ல வேண்டும். மாற்று மத நண்பர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகளை எதிர்கொள்ளலாம். இழப்புகளை தவிர்க்க எதிலும் முன்னெச்சரிக்கை அவசியம்.

### துலாம்



மதிப்பு, கௌரவம் மேம்படும். உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட சிலரைச் சந்திப்பீர்கள். நண்பர்கள் வழியில் கேட்கும் செய்திகளால் சந்தோஷம் அடைவீர்கள். திட்டமிட்ட அளவில் நின்றிருந்த காரியம் ஒன்று, திடீரென செயற்பாட்டுக்கு வரும். ஆசைப்பட்ட பொருள்களை வாங்கும் வாய்ப்பு உருவாகும்.

### விருச்சிகம்



பணவரவுகளைப் பெறும் நாள். பொது வாழ்வில் உள்ளோர் பொறுமை, நிதானத்துடன் செயற்பட வேண்டும். பெரிய மனிதர்களின் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். எதையும் ஒன்றுக்கு பல முறை யோசித்து செய்வீர்கள். உறவினர் ஒருவருக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். மனதில் உற்சாகம் குடி கொள்ளும்.

### தனுசு



குடும்பத்தில் கலகலப்பு அதிகரிக்கும். நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று திடீரென நடக்கலாம். மற்றவர்கள் கேட்காமலேயே நீங்களாக முந்திக் கொண்டு சில உதவிகளைச் செய்வீர்கள். வீட்டில் வசதி, வாய்ப்புகள் அதிகரிக்கும். மனதில் நல்ல எண்ணங்கள், சிந்தனைகள் குடி கொள்ளும். வழிபாடுகளுக்காக செலவிடலாம்.

### மகரம்



திட்டமிட்ட பயணங்களை மாற்றி அமைக்கலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்வீர்கள். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். மாமன், மைத்துனர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். பெரிய மனிதர்கள் சிலர் உங்களின் மனம் புண்படும் வகையில் பேசலாம்.

### கும்பம்



எதிலும் விழிப்புடன் செயற்பட்டு ஏமாற்றங்களை தவிர்ப்பீர்கள். புதிய பணவரவுகளால் வீட்டுச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். நண்பர்கள் உங்களிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவர். உறவினர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் தீரும். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். அனுகூலமான நாள்.

### மீனம்



அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். விலை உயர்ந்த பொருள்கள் வாங்க முற்படுவீர்கள். வியாபாரிகளுக்கு கடன் பாக்கிகள் வசூலாகும். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். குழந்தைகள் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்களைப் பார்த்து ஆதங்கமடைவீர்கள்.


31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவில்லும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி அன்னலட்சுமி வல்லிபுரம்

(B.A, ஓய்வுபெற்ற ஆசிரியர், தரம் I)

மலர்வு :06.02.1939

உதிர்வு :04.07.2010

அன்பும் பண்பும் நிறைந்து
கண்டிப்புடன் சிறப்பாய் எம்மை
வளர்த்தெடுத்த அன்னையே
எம்மைத் துயரில் ஆழ்த்திவிட்டு
எங்குசென்று விட்டீர்கள்
அப்பாவுடன் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதி நிகழ்வின்போது நேரில் வருகைதந்து ஆறுதல் கூறியோருக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் ஆறுதல் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (03.08.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் வீட்டுக்கிரியைகளும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.30 மணியளவில் நல்லூர் திவ்விய ஜீவனசங்க மண்டபத்தில் நடைபெறும் மதிய உணவிலும் பங்கேற்று கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

108, கலைமகள் வீதி,
கலவியங்காடு, நல்லூர்.
தொலைபேசி இல:- 0212226465


## பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண சமூகக் கட்டமைப்பு அவசியம்

### லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 3

சமூகத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணும் வகையில், சமூகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன் பொருட்டு கீழ்மட்ட எண்ணங்களில் இருந்து விடுபட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

சமூகத்தில் சம்பிரதாயங்களைக் கட்டிக்காப்பதை விடவும், எதிர்காலத்தில் பிரச்சினை இல்லாமல் செய்வதே மிக முக்கியமான விடயம் என அவர் தெரிவித்துள்ளார்.

இதன்பொருட்டு சிறுவர்களுக்கு அவர்களின் திறன்களின் அடிப்படையில்செயற்பட அனுமதிக்க வேண்டும் எனவும், அவர்களின்தொழில் நுட்ப அறிவை மேம்படுத்தி சர்வதேச மட்டத்துக்கு உயர்த்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(சி)




சிவகாளியம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவின் பிரபல ஜோதிடர்

கங்காதர ஆச்சாரி சுவாமிகள்

திருப்பதியில் இருந்து வந்துள்ள சுவாமிகள்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சுவாமிகள் அவர்கள் வம்சாவழியாக காளியம்மனின் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில் வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகள் குடும்ப ஒற்றுமையாகப் பெற்றோர்களுடன் நிலைத்திருத்தல் போன்ற விடயங்களையும் கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோட்டு வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்குப் பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடல், வெளியூர் பயணங்கள், நாம நட்சத்திரம், கல்வி, உத்தியோகம், இலட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், வதிவிடப் பிரச்சினைகள், எதிரிகள் கண் திருஷ்டி இவற்றுடன் எதிர்காலப் பலாபலன்களைத் தெரிவிப்பார். ஒருமுறை சந்தியுங்கள்.

தொ.பே.: 077 6337702 / 077 6335621

கைரேகை, ஜோதிடம் பார்க்கும் நேரம்:

காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை.

பீப்பில்ஸ் இன்

இல.112/1, மானிப்பாய் வீதி,
(பிள்ளையார் சோடாக் கம்பனி முன்பாக)
யாழ்ப்பாணம்.

(100666)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**01.06.1993**

* நொச்சிமோட்டைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் சிக்குண்டு மூன்று பெண்கள் உட்பட 11 பொது மக்கள் உயிரிழந்தனர் என இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவிப்பு.
* விடுதலைப்புலிகள் ஜெயந்திபுரவில் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து பொலநறுவ- மட்டக்களப்பு எல்லைப்புறக் கிராமங்களில் இராணுவப் பாதுகாப்பு மீண்டும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

**02.06.1993**

* கடந்த ஆண்டு செம்ரெம்பர் முதலாம் திகதிக்குப் பின்னர் சுவிட்ஸர் லாந்தில் தஞ்சம் கோரிய சுமார் 2 ஆயிரத்து 70 ஈழ அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது தொடர்பாக அந்நாடு இலங்கை அரசுடன் உடன்படிக்கை ஒன்றை மேற் கொள்ளவுள்ளதாகத் தெரிவிப்பு.
* ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றி அமைக்கும் படி கோரும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்து எதிர்க்கட்சிகள் கொண்டுவரவுள்ளதாகத் தெரிவிப்பு.

**03.06.1993**

* இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவின் மாநாடு எதிர்வரும் 8ம் திகதி பாரிஸில் கூடும்போது இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாடு குறித்து வினாவப்படும் என கொழும்பில் உள்ள ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பு.
* முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் படுகொலையில் சம்பந்தப்பட்ட நபர் அல்லது நபர்களைக் கைது செய்ய உதவும் தகவல்களை வழங்குபவர் களுக்கு 50 லட்சம் ரூபா சன்மானமாக வழங்கப்படும் என குற்றவியல் விசாரணைத் திணைக்களம் அறிவிப்பு.

**04.06.1993**

* இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு வடக்கும் கிழக்கும் இணைந்த சமஷ்டி ஆட்சி முறையொன்றை ஏற்படுத்துவது குறித்து வெளிநாடுகளின் ஆதரவைப் பெறும் முயற்சிகளில் தற்போது தமிழ்க் கட்சிகள் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிப்பு.
* முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் படுகொலை தொடர்பாக காவலில் வைக்கப் பட்டுள்ள 23 பேரில் இருவர் ஜனாதிபதி மாளிகையின் பணியாளர்கள் ஆவர் எனத் தெரிவிப்பு.

**05.06.1993**

* சுதந்திரக் கட்சியில் பிரச்சினைக் குரியவராக இருந்து வரும் 'ஹெல உறுமய' அமைப்பின் நிறுவுனரும் களுத்துறை மாவட்ட எம்.பியுமான திலக் கருணா ரத்ன சுதந்திரக் கட்சியில்இருந்து நீக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* அவசர காலத்தைச் சட்டத்தைத் தென்னிலங்கையில் நீக்கிவிட்டு, வடக்கு கிழக்கு மாகாணத்தில் மட்டுமே தொடர்ந்து அமுல் செய்வது குறித்து அரசு ஆலோசித்து வருவதாக ஜனாதிபதி ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் வெளிநாடுகளின் தூதுவர்களுக்கு எடுத்துவிளக்கி வருவதாகத் தெரிவிப்பு.

**06.06.1993**

* விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட இந்திய இராணுவத்தின் உதவியைக் கோருவது என்று அரசு முடிவு செய்திருப்பதாகக் கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுவதாகத் தெரிவிப்பு.
* சிங்களப் பிரதேசங்களைக் கொண்ட மாகாண சபைகளிலேயே அரசாங்கம் முறைகேடாக நடந்துகொள்ளும் போது, தமிழ் மக்கள் இந்த மாகாண சபை முறையில் திருப்திப்படாமல் இருப்பது நியாயமானதே என நாடாளுமன்றத்தின் பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவிப்பு.

**07.06.1993**

* சுதந்திரக் கட்சியின் தலைவியாக சந்திரிகா தெரிவாகும் வாய்ப்பு அதிகரித்து வருவதாகத் தெரிவிப்பு.
* தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உதவும் முயற்சியில் தென்கிழக்காசிய, தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் மற்றும் மதகுருமார் அடங்கிய சமாதானக் குழு இன்று யாழ்ப்பாணம் வருவதாகத் தெரிவிப்பு.

**08.06.1993**

* இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமானால் வடக்கு- கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைத்தே ஆக வேண்டும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான் தொண்டமான் தெரிவிப்பு.
* பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவை படுகொலை செய்ய முயன்ற நான்கு இளைஞர்கள் தமது முயற்சியில் தோல்வி கண்டதுடன் பாதுகாப்புத் தரப்பினரால் சுட்டும் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிப்பு.

**09.06.1993**

* நாளை நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டத்தில் தொடர்ந்து பங்குபற்றுவதில்லை என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட கொழும்பில் உள்ள பெரும்பாலான கட்சிகள் மற்றும் குழுக்கள் முடிவு செய்திருப்பதாகத் தெரிவிப்பு.
* யாழ்ப்பாணம் வந்துள்ள வெளிநாட்டு சமாதானத் தூதுக்குழு ஜனாதிபதி, மற்றும் பிரதமர் ஆகியோரின் ஆசியுடனேயே இங்கு வந்திருப்பதாகவும் எவ்வித விசாரணையுமின்றி பாதுகாப்பு அமைச்சு அதற்கு அனுமதி வழங்கியிருப் பதாகவும் தெரி விப்பு.

**10.06.1993**

* அரசாங்கம் யுத்த நிறுத்தம் செய்தாலே சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வழி பிறக்கும். நாம் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண தயாராகவுள்ளோம் என வெளிநாட்டு சமாதானக் குழுவிடம் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் தெரிவிப்பு.
* வடபகுதியில் விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள 38 பொலிஸாரையும் இராணுவச் சிப்பாயையும் விடுவிக்க அரசு சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக அமைச்சர் விமல் விக்கிரம சிங்க நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

**11.06.1993**

* சர்வதேச சமாதானக் குழு கொழும்பு திரும்பியதும் அரசிடம் சமர்ப்பிக்கும் தனது சிபார்சுகளில் பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக யுத்த நிறுத்தம் செய்யுமாறு கோரும் சிபார்சும் இடம்பெறலாம் எனத் தெரிவிப்பு.
* பூநகரிப் பாதையை போக்குவரத்துக்குத் திறப்பது குறித்து விரைவில் உடன்பாடு ஒன்று எட்டப்படும் எனத் தான் நம்புவதாக அகதிகளுக்கான ஐ.நா.தூதரக இலங்கை வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு.

**12.06.1993**

* தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வுத்திட்டம் ஒன்றை வகுப்பதற்கு முன்னர் வடக்குடன் கிழக்கு இணைந்திருப்பதை கிழக்கு மக்கள் விரும்புகிறார்களா? என்பதைக் கண்டறிய கிழக்கிலங்கையில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என நாடாமன்றத் தெரிவுக் குழு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிப்பு.
* தமிழ மக்களுக்குரிய ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்கவும் அது தொடர்பாக மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்தவும் அரசு முன் வரவேண்டும் எனசுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளரான அனுரா பண்டாரநாயக்க அரசை வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிப்பு.

**13.06.1993**

* கிழக்கின் வடக்குடன் இணைக்க வேண்டுமா என்பதனை முடிவு செய்வதற்காக கிழக்கில் மட்டும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற ஆலோசனை இந்த விவகாரத்தை மேலும் சிக்கலாக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.
* தாம் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவை விட வித்தியாசமானவர் என்பதை ஜனாதிபதி டி.பி.விஜேயதுங்க தமது நடவடிக்கை மூலம் காண்பித்து வருகிறார் என பிரபல பத்திரிகையாளர் விக்டர் ஐவன் பி.பி.ஸி வானொலிக்குத் தெரிவிப்பு.

**14.06.1993**

* விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் உள்ள 39 சிங்கள யுத்தக் கைதிகளும் தமது சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்திருப்பதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு.
* முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் படுகொலை தொடர்பான சந்தேக நபர் குலவீரசிங்கம் வீரக்குமார் தான் என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்வதற்காக வடக்கு -கிழக்கு மாகாண பொதுமக்களின் ஒத்துழைப்பை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நாடியுள்ளதாக இலங்கை வானொலி தெரிவிப்பு.

**15.06.1993**

* விடுதலைப்புலிகளின் தாக்குதல் பிரிவுகள் தென்பகுதிக்குள் ஊடுருவியுள்ளதாக கிடைத்த புலனாய்வுத் தகவல்களைத் தொடர்ந்து ஜனாதிபதி விஜேதுங்க மற்றும் முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களின் நடமாட்டங்களை பாதுகாப்பு படையினர் கட்டுப்படுத்தியுள்ளதாகத் தெரிவிப்பு.
* இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெற்று முடிந்த பின்னர் நிதி அமைச்சின் செயலாளர் பாஸ்கரலிங்கம் அப்பதவியில் [illegible] வெளியேற்றப்படுவார் என கொழும்புச் [illegible]

# மக்கள் பிரச்சினைகளை முன்வைத்து போராட்டங்கள் தீவிரப்படுத்தப்படும்

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 03

மக்கள் பிரச்சினைகளை முன்வைத்து தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஆர்ப்பாட்டங்களுக்கு அரசு தலையசைக் காதுவிட்டால் நாடு தழுவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் - என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியால் நேற்று முன்தினம் ஹோமாகமப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் ஒன்றின்போது, அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்படி தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக அரசு அறிவித்தபோதும் இதுவரையில் அவ்வாறான நிவாரணங்கள் எவையும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

அரசு பொது மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் இயலுமையைக் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தொழில் சங்கங்களும் விசனமடைந்துள்ள வேளையில், அதற்குச் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கவே ஐக்கிய தேசியக்கட்சி முன் வந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் பிரச்சினைகளை அரசுக்கு உணர்த்தும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுவருகின்ற ஆர்ப்பாட்டங்களுக்கு உரிய அவதானம் செலுத்தப்படாத பட்சத்தில், நாடுதழுவிய போராட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதை ஏற்க முடியாது என்கிறார் மேர்வின்

கொழும்பு, ஓக. 03

புத்த பிக்குகள் நாடாளுமன்ற அரசியலில் ஈடுகின்றமையை ஏற்றுக் கொள்ளவே முடியாது - என்று பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

புத்த பிக்குகள் நாடாளுமன்ற அரசியலில் ஈடுபடுகின்றமை குறித்து ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாடாளுமன்ற அரசியலில் பிக்குகள் ஈடுபடவேகூடாது என்பது எனது அபிப்பிராயம். ஏனெனில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக அவர்கள் செயற்படுகின்றபோது அவர்களுக்கு உரிய கௌரவமும், மரியாதையும் இழக்கப்படுகின்றன.

ஏனெனில் நாடாளுமன்றத்தில் சாதாரண எம்.பிக்களைப் போலவே புத்த பிக்கு எம்.பிக்களும் நடத்தப்படுகின்றனர்.

எனினும், விளையாட்டு வீரர்களும், நடிகர்களும் நாடாளுமன்ற அரசியலில் ஈடுபடலாம்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக. 3

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 15 ஆம் திக்தி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 3

நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுத் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 3

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய ஆடிப்பூர சங்காபிஷேகம் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 7 மணிக்கு சங்காபிஷேகப் பூசை, விசேட ஹோமம் என்பன நடைபெற்று முற்பகல் 11.30 மணிக்கு பூரகர்ம நிகழ்வும் இடம்பெறும்.

இரவு 7 மணிக்கு வசந்த மண்டப் பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல் உற்சவம் நடைபெற்று சுவாமி வீதியுலா வருவார். (204)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 3

சங்கானை புவனேஸ்வரி அம்மன் ஆலய அலங்காரத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா 'தேவி மான்மியம்' என்னும் தலைப்பில் தெய்வீகச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (204)

* * *

கொழும்புத்துறை, ஓக. 3

நெடுந்தீவு புனித லவுறேஞ்சியார் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த முதலாந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

நற்கருணை விழா எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும். திருவிழாத் திருப்பலி மறுநாள் காலை 6.45 மணிக்கு நடைபெற்று திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம் பெறும். (த-135)

* * *

கோப்பாய், ஓக. 3

அச்செழு கொக்கிருந்தபதி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்றுத் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக் கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (எ-72)




இந்துபோட் இராச ரத்தினத்தின் 126 ஆவது பிறந்ததினம் சைவ வித்தியா விருத் திச் சங்கத்தில் அண்மையில் கொண்டாடப் பட்டது. இந் நிகழ்வில் சைவச் சிறுவர் இல்லப் பிள்ளைகள் வழங்கிய கலை நிகழ்வின் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரசாலை சரஸ்வதி வித்தியாலய ஆரம்ப, இடைநிலை ஆகிய பிரிவுகளுக்கான கணிதபாட செயற்பாட்டுப் பட்டறைகள் அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.கதிர்காமநாதன் இடைநிலைப் பிரிவையும், ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா ஆரம்பப் பிரிவையும் நாடாவெட்டித் திறந்து வைப்பதை முதலிரு படங்களிலும், விருந்தினர்கள் கணிதபாட செயற்பாடு தொடர்பான வினாக்களை மாணவர்களிடம் கேட்பதை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்-தென்னவன்)

## ஆசிரியர்களுக்கான கணனிப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஓக 3

ஐ.சீ.டீ.எல். கணனிப் பயிற்சி நெறியைப் பயில விரும்பும் யாழ்.கல்வி வலய அதிபர்கள், ஆசிரியர்கள் தத்தமது பெயர் விவரங்களை நாளை புதன்கிழமைக்கு முன்னர் யாழ்.கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில் பதிவுசெய்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ஐ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 18.07.1936

அரன் அடியில்: 13.08.2009

அமரர்

**சுப்பையா வைத்திலிங்கம்**

(101483)

ஆதார குல விளக்கே ஆருயிர் அப்பாவே!
அப்பா அப்பா என்றழைத்த குரல் - ஓராண்டு
சென்றாலும் அப்பா என்றழைக்குது அப்பா
பாரினிலே போற்ற பண்பாய் வளர்த்து
வாழ்க்கைக்கு வழிகாட்டிய அன்புத் தெய்வமே!
எம்மையெல்லாம் மறந்து எங்கு சென்றீர் அப்பா
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் உருண்டாலும்
அடங்கிடாது உம் நினைவு
ஏங்கித் தவிக்கின்றோம் எழுந்தோடி வாரீரோ அப்பா!

கணேசன் சென்ரர்
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

பாசமிகு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

**சாந்தி சுரேஸ்கரன்**

அன்னை மடியில்
29.12.1980

ஆண்டவன் அடியில்
04.07.2010

அன்பிற்கு இலக்கணமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
நேற்றுவரை இருந்த
உங்களை
தினமும் நினைத்து
வாடுகின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் பல வழிகளில் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் தொலைபேசி மூலமும் தபால் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (03.08.2010) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துசிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

17/23, பண்டாரிக்குளம்
மேற்கு ஒழுங்கை,
நல்லூர் வடக்கு, நல்லூர்.

குடும்பத்தினர்.
தொ.இல: 0214901987


## ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் உத்தியோகபூர்வ முறைசார் உடை வழங்குநராக 'எமரல்ட்' நிறுவனம் நியமனம்

உலகத்தரமான உடைகளை குறிப்பாக ஆடவர் உடைகளைத் தயாரித்து வழங்குவதில் புகழ்பெற்ற எமரல்ட் இன்டர்நஷனல் நிறுவனம். ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் ''உத்தியோகபூர்வ முறைசார் உடை'' வழங்குநராக நியமிக்கப்பட்டுள்ளது. இந்த நியமனம் தொடர்பான வைபவம் 2010 ஜூலை 31ஆம் திகதி தாஜ்சமுத்திரா ஹொட்டேலில் நடைபெற்றது. இலங்கை கிரிக்கெட் அணியினர் ஸ்ரீலங்கா கிரிக்கெட் அமைப்பின் அதிகாரிகள், பிரபல தொழிற்பிரமுகர்கள்,செய்தி ஊடகத் துறையினர் பலர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

விமரிசையான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த வைபவத்தின் முக்கிய நிகழ்ச்சியாக எமரல்ட் நிறுவனம், ஸ்ரீலங்கா கிரிக்கெட் (SLC) ஆகிவற்றின் கூட்டு நடவடிக்கையைக் குறிக்கும் விசேட இலச்சினை அறிமுகம் செய்யப்பட்டது.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி டி.எஸ். டி சில்வா அங்கு பேசு கையில் இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கான முறைசார் உடைகளை வழங்கும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக்கொண்டமைக்காக எமரல்ட் இன்டநர்ஷனல் நிறுவனத்துக்கு நன்றி தெரிவித்தார். ''புகழ்பெற்ற பல உள்நாட்டு நிறுவனங்களிலிருந்து ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுக்கான முறைசார் உடை வழங்கு நரைத் தெரிவு செய்வது இலகுவான பணியாக இருக்கவில்லை. உயர்ந்த தரச்சிறப்பு நியமங்கள், வர்த்தகப் பெயரின் நன்மதிப்புப் போன்ற காரணங்களின் அடிப்படையிலும் உலகத் தரமான உடைகளைத் தயாரித்து வழங்கும் இலங்கைக் கம்பனி என்ற முறையிலும் எமரல்ட் தெரிவு செய்யப்பட்டது '' என்று அவர் கூறினார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் குமார் சங்கக்கார பேசுகையில் ''உலகின் எந்தப் பகுதியிலும் எந்த நிகழ்சியிலும் நம்பிக்கையுடன் அணியக்கூடிய தரமான உடைகளை எமரல்ட் வழங்குகின்றது. பல்வேறு புகழ்பெற்ற சர்வதேச வர்த்தகப் பெயர்களில் வழங்கப்படும் உடைகளுக்கு அவை நிகரானவை. எமரல்ட் நிறுவனத்துடனான இந்த உறவு எமக்குப் பெருமை அளிக்கின்றது. எமரல்டின் வருங்கால முயற்சிகள் அனைத்தும் வெற்றியடைய நான் வாழ்த்துகின்றேன்'' என்று குறிப்பிட்டார்.

எமரல்ட் இன்டர்நஷனல் பணியாளர்கள் சபையின் சார்பில் அதன் பொதுமுகாமையாளர் ஜனாப் முராட் ரஹீம்தீன் பேசுகையில் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் உத்தியோகபூர்வ துறைசார் உடை வழங்குநராக எமரல்டை தெரிவு செய்தமைக்காக கிரிக்கெட் அதிகார பீடத்தினருக்கு நன்றி தெரிவித்தார். நிறுவனத்தின் பிரபல வரலாற்றில் இந்த இணைப்பு ஒரு மைல் கல்லாகும். எதிர்காலத்தில் எமரல்டை ஒரு வலுவான சர்வதேச வர்த்தகப் பெயராகப் பிரபல்யப்படுத்தும் முயற்சிக்கு இது ஒரு படிக்கல்லாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

எமரல்ட் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஆடை தயாரிப்புத் தொழிலில் சிறந்த பாரம் பரியத்தைக் கொண்டுள்ளது.Emerald Corporate, Leonardo, Flax, Farmer, Leger, Focuss, Mansak, Runn போன்ற பெயர்களில் அதனால் விற்கப்படும் உடைகள் உள்நாட்டுச் சந்தையில் முன்னணி வகிக்கின்றன.

சேட்களின் ஏற்றுமதியிலும் ஈடுபட்டுள்ள எமரல்ட் நிறுவனம் உலகெங்குமுள்ள முன்னணி சர்வதேச நிறுவனங்களுக்காக தரமுயர்ந்த ஆடைகளைத் தயாரித்துக் கொடுக்கின்றது. நிறுவனம் 3 நவீன ஆடைத் தயாரிப்புத் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது. உற்பத்தி செய்யப்படும் ஆடை வகைகளின் தரச்சிறப்பை மேலும் முன்னேற்றுவதற்காக உலகப் புகழ்பெற்ற இத்தாலிய ஆடை வடிவமைப்பாளரான ரொபேர்தோ இங்கெல்சி என்பவரின் சேவையையும் எமரல்ட் நிறுவனம் அண்மையில் பெற்றுக்கொண்டது. திரு.இங்கெல்சி 4 தசாப்பதங்களுக்கும் மேலாக உலகின் 3 கண்டங்களில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டவர். Roberto Cavalli, Dior, Pierre Cardin, Armani, Faconable, Stanza போன்ற புகழ்பெற்ற வர்த்தகப் பெயர்களின் சார்பிலும் ITC group of India wills and John Player, Madura garments Louis Philippe, Van Heusen, Aen Solly, Peter England என்பவற்றின் சார்பிலும் அவர் பணிபுரிந்துள்ளார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் 3 ஆண்டுகளுக்கு அதன் உத்தியோகபூர்வ முறைசார் உடை வழங்குநராக எமரல்டை நியமித்துள்ளது. இக் கூட்டிணைப்பின் மூலம் உலகரீதியாக மேலும் புகழடையவிருக்கும் எமரல்ட் நிறுவனம் அதன் செழுமையான பாரம்பரியம், புதிய அபிவிருத்திகள், நிபுணத்துவ முன்னேற்றங்கள் என்பனவற்றின் பயனாக முன்னொருபோதும் காணப்படாத தரமுயர்ந்த ''எமரல்ட் சேட்'' வகைகளை இலங்கைக்கு அறிமுகப்படுத்துமென நம்பலாம்.

விளம்பரம்

## Abans நிறுவனத்தின் முதல்தர முகவராக Jaffna Electricals நிறுவனம்



Abans (LG) நிறுவனத்தின் அகில இலங்கை ரீதியிலான முதற்தர விற்பனை முகவராக யாழ்.முகவரான Jaffna Electricals தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் LG உற்பத்திகளை அறிமுகப்படுத்திய முன்னணி நிறுவனமான Abans நிறுவனத்தின் (LG) உற்பத்திகள் சந்தைப்படுத்துவதன் முதற்தர விற்பனை முகவர் நிறுவனமாக அகில இலங்கை ரீதியில் Jaffna Electricals தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 30 ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற 2009-2010 ஆம் நிதி வருடத்துக்கான வருடாந்த ஒன்றுகூடல் வைபவத்திலேயே இத்தெரிவு இடம்பெற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

கடந்த பல வருடங்களாக LG பொருள்களின் சந்தைப்படுத்தலில் வட மாகாணத்தில் முதற்தர நிறுவனமாக விளங்கிவந்த Jaffna Electricals ஆனது அகில இலங்கைரீதியில் 2009-2010 ஆம் நிதியாண்டில் முதல்தர நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமையானது யாழ்ப்பாணதின் பொருளாதார நிலைமைக்கு மேலும் பெருமை சேர்க்கும் ஓர் விடயமாகும்.

Jaffna Electricals 1969 ஆம் ஆண்டு இல.94 (6), ஸ்ரான்லி வீதியில் ஆரம்பிக்கப்பட்டு Electricals, Electronic பொருள்களின் விற்பனையில் முன்னணியில் திகழ்ந்து வந்தது. அதன்பின் 2002 ஆம் ஆண்டு 141, மின்சார நிலைய வீதியில் Abans பொருள்களின் (LG) காட்சியறை ஆரம்பிக்கப்பட்டு Abans நிறுவ னத்தின் யாழ்ப்பாணத்தின் கிளை முகவராக தொழிற்படத் தொடங்கியது. அத்தோடு யாழ்.மாவட்டத்தின் Abans (LG) பொருள்களின் விற்பனையின் பின்னரான சேவையினையும் தனியொரு பிரிவாக உள்ளடக்கி செயற்பட்டு வருகின்றது.

Jaffna Electricals ஆனது சாவகச்சேரி நவீன சந்தை கட்டடத் தொகுதியில் ஒரு கிளை நிறுவனத்தையும் [illegible] Medin Elertro Mart என்னும் பெயரில் சகோதர நிறுவனம் ஒன்றையும் ஆரம்பித்து தனது சேவையினை விரிவுபடுத்திச் செயற்படுத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'வடக்கின் வசந்தம்' திட்டங்கள் உதவுமா?

# மீள்குடியமர்ந்து ஏழு மாதங்கள் கடந்தபோதும் வன்னி வீதிகளில் பயணிக்க முடியாத நிலையில் மக்கள்

## வெள்ளைச்சட்டையுடன் செல்லும் மாணவிகள் கிறவல் புளுதியுடன் திரும்புகின்றனர்

கிளிநொச்சி, ஓக. 3

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் வன்னிப்பகுதி வீதிகள் புனரமைக்கப்படாதா? என அப்பகுதி மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மீள்குடியேற்றம் இடம்பெற்ற பகுதிகள் புனரமைக்கப்படும் என கூறப்படுகின்ற போதிலும் மீள்குடியேற்றம் ஆரம்பித்து ஏழு மாதங்களுக்கு மேல் கடந்த நிலையிலும் வன்னிப் பகுதி வீதிகள் இன்னும் புனரமைக்கப்படவில்லை.

ஏ-9 வீதி கூட முறையாகச் செப்பனிடப்படவில்லை. அத்துடன் வன்னியின் பிரதான இடங்களை இணைக்கும் வீதிகளும் திருத்தப்படாதுள்ளன.

இவ்வீதிகள் குண்டும் குழியுமாக வாகனங்கள் பயணிக்க முடியாத நிலையில் உள்ளதுடன் இவ்வீதியில் செல்லும் வாகனங்களால் எழும் கிறவல் தூசியால் பாதசாரிகளும், சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் செல்வோரும் பலத்த அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

காலை வேளையில் வெள்ளைச் சீருடையுடன் வீட்டிலிருந்து புறப்படும் மாணவர்கள் பாடசாலை செல்லும்போது கிறவல் நிறச் சீருடைகளுடனேயே செல்கின்றனர்.

அதேபோன்று ஆசிரியர்களும் அலுவலர்களும் நிறம் மாறியே பாடசாலைகளுக்கும் அலுவலகங்களுக்கும் செல்ல வேண்டியுள்ளது.

குளிரூட்டப்பட்ட வாகனங்களில் உலா வரும் உயர் அதிகாரிகள் இவ்வீதிகளின் திருத்தம் தொடர்பாக இவ்வளவு காலம் கடந்தும் அக்கறை செலுத்தாது இருப்பது குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ-405)

# மன்னாரில் அரச காணிகளை தம் வசப்படுத்துகின்றனர் மக்கள்

மன்னார்,ஓக. 3

மன்னாரில் அரச காணிகள் பொது மக்களால் கையகப்படுத்தப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் துறைமுகக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இக்காணியை அதன் அருகே வசித்துவரும் ஊர் மக்கள் பலாத்காரமாகத் தம்வசப்படுத்தி வருகின்றனர்.

மன்னாரில் சரித்திரப் புகழ்பெற்ற போத்துக்கேயரின் கோட்டை அருகே உள்ள இக் காணி, முன்னர் இலங்கைத் துறைமுகக் கூட்டுத்தாபனத்திற்குக் கையளிக்கப்பட்டது. நடைபெற்று வந்த உள்நாட்டு யுத்த சூழ்நிலையினால் இக்காணி கைவிடப்பட்டது. தற்போது நாடு சுமூக நிலைக்குத் திரும்பியுள்ளதால் காணியற்ற ஊர் மக்களின் கண்பார்வையில் இக்காணி வீழ்ந்துள்ளது.

பல ஏக்கர் விஸ்தீரணமுள்ள இக்காணியை ஊர் மக்கள் சுமார் எட்டுப் பேர்ச்சாகப் பிரித்துக் கம்புகள் நாட்டி அடைத்து வருகின்றனர். கேட்டால் அமைச்சர் ஒருவரின் அனுமதியுடனே அடைக்கப்படுவதாகப் பொதுமக்கள் தெரிவித்து வருகின்றனர்.

ஆயினும் ஏற்கனவே காணி, வீடு , வளவுகள் உள்ளவர்களும் இக்காணியை அடைத்து வருவதால் சிறு காணித்துண்டுகள் கூட அற்றவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். (ஐ-80)

# மன்னார் இலங்கை வங்கியில் மக்களுக்கு அசௌகரியம்

மன்னார்,ஓக. 3

மன்னார் இலங்கை வங்கியில் பெரும் சன நெரிசல் ஏற்பட்டுள்ளதால் வாடிக்கையாளர்கள் பெரிதும் சிரமங்களை அனுபவித்துவருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னாரில் இரண்டாவதாக அமைக்கப்பட்ட இலங்கை வங்கி, 40 ஆண்டுகள் பழமையானது.மன்னார் மக்களின் விவசாய, வர்த்தக மற்றும் பல்வேறு தேவைகளையும் வெகுசிறப்பாக நிறைவேற்றி, மன்னார் மக்களாலும் மற்றைய வங்கிகளாலும் பெரிதும் நன்மதிப்பைப் பெற்ற வங்கி இதுவாகும்.

ஆயினும் சமீப காலமாக இதன் செயற்பாடுகளில் பெரிதும் அதிருப்தியை மன்னார் மக்கள் வெளிப்படுத்துகின்றனர். நீண்ட கியூவரிசை, பல மணி நேரத் தாமதம் ,கணனி செயற்படாமை, தன்னியக்க இயந்திரம் அடிக்கடி பழுதடைதல், ஊழியர் பற்றாக்குறை, முகாமை மக்களுடன் தொடர்பின்மை எனப் பல்வேறு காரணங்களும் கூறப்படுகின்றன.

மன்னாரில் தற்போது ஏழுவங்கிகள் இயங்கிவந்த போதும் இலங்கை வங்கியில்தான் நீண்ட 'கியூ' வரிசையைக் காண முடிகின்றது. (ஐ-80)

# அடிப்படை வசதிகள் ஏதும் இன்றி அல்லாடுகிறது ஐயனார்புரம் பாடசாலை

## அதிபரும் இல்லை, போதியளவு ஆசிரியர்களும் இல்லை




கிளிநொச்சி, ஓக. 3

கிளிநொச்சி ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை சொந்த இடத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டு 4 மாதங்கள் கடந்த நிலையிலும் அதிபர் இல்லாது இயங்கி வருகின்றது.

தரம் 1 தொடக்கம் சாதாரண தரம் வரையுள்ள இந்தப் பாடசாலையில் 250 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு போதிய ஆசிரியர் வசதியும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. மேல் வகுப்புக்கு 3 ஆசிரியர்களும் ஆரம்பப் பிரிவுக்கு 4 ஆசிரியர்களுமாக 7 ஆசிரியர்களே கற்பித்து வருகின்றனர். கணிதம், ஆங்கிலம் உள்ளிட்ட முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று இடப்பெயர்வு காரணமாகப் பாடசாலைத் தளபாடங்கள் அனைத்தும் அழிவுற்றதால் மாணவர்களும் ஆசிரியர்களும் நிலத்தில் இருந்தே கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டியுள்ளது.

பாடசாலைக்கான ஆவணங்களைப் பேணுவதற்கான அறை, அலுமாரி போன்ற வசதிகள் எவையும் இல்லையெனக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதைவிட வகுப்பறை வசதிகள், மதிய உணவு சமைப்பதற்கான இடவசதி, மலசல கூட வசதிகள் எவையும் இல்லாமையால் மாணவர்களும் ஆசிரியர்களும் அசௌகரியங்களை எதிர்கொள்ளவதாகவும் தெரிவிக்கின்றனர்.

தொண்டர் ஆசிரியர்களின் உதவியுடன் மாணவர்களுக்குக் கற்பித்தாலும் அவர்களுக்கான கொடுப்பனவுகள் எவையும் கடந்த 9 வருடங்களாக வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதிபர், ஆசிரியர் நியமனங்கள் தொடர்பாக கல்வித் திணைக்களத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோதும் இதுவரை எந்தவித பயனும் கிட்டவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகின்து. (ஐ-10)

# ஏ-9 பாதையில் செல்லும் போக்குவரத்துச் சபை பஸ்கள் கிளிநொச்சி பஸ் நிலையத்தை தவிர்ப்பது ஏன்?

## பொதுமக்களின் சிரமங்களை நீக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 3

கிளிநொச்சியூடாக ஏ-9 வீதியில் பயணம் செய்யும் பயணிகள் பஸ்கள் கிளிநொச்சி பஸ் நிலையத்திற்குச் செல்லாமல் செல்வதால் பயணிகள் பலத்த சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவிற்கும் மற்றும் தென்பகுதிகளுக்கும் செல்லும் பஸ்களும் அதே போல் வவுனியாவில் இருந்தும் தென்பகுதிகளில் இருந்தும் யாழ்ப்பாணத்திற்கு வரும் பஸ்களும் கிளிநொச்சி பஸ் நிலையத்திற்குச் செல்லாமல் ஏ-9 வீதியியால் செல் வதால்அந்த பஸ்களில் கிளிநொச்சிக்கு வரும் பயணிகளும் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம், வவுனியா உட்பட மற்றைய இடங்களுக்குச் செல்லும் பயணிகளும் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கிளிநொச்சி பஸ் தரிப்பிடம் டிப்போச் சந்தியில் இருந்து கனகபுரம் வீதியில் சற்றுத் தொலைவில் உள்ளது. பயணிகள் பஸ்கள் பஸ் நிலையம் செல்லாது செல்வதில் உள்ளபயணிகளின் சிரமங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏன் கண்டுகொள்கின்றனர் இல்லை என பொதுமக்கள் கேள்வி எழும்புகின்றனர்.

அத்துடன் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கோ அல்லது வவுனியாவிற்கோ இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் எதுவும் செல்வதில்லை. அதேபோன்று வவுனியாவில் இருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்தும் கிளிநொச்சிக்கும் இ.போ.ச பஸ்கள் எதுவும் செல்வதில்லை.

தனியான நிர்வாக மாவட்டமான கிளிநொச்சியை இலங்கை போக்குவரத்து சபையினர் இப்படி கண்டுகொள்ளாது இருப்பது குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இ.போ.ச பஸ்கள் செல்லாமையால் தனியார் பேருந்துகள் கிளிநொச்சிக்கான போக்குவரத்தில் தனியுரிமை வகிக்கின்றன. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் தனியார் பஸ்களிலும் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா செல்லும் தனியார் பஸ்களிலும் கிளிநொச்சி செல்லும் பயணிகளுக்கு ஆசனம் வழங்கப்படுவதில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ-405)



கிளிநொச்சி மத்திய கல்லூரியில் உயர்தர மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் வன்னிப்பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ரஞ்சித் கொடித்துவக்கு மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும்,விருந்தினர்களாகக் கலந்து கொண்ட கரைச்சிக் கோட்டக் கல்வி அதிகாரி அ. அமிர்தலிங்கம், கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் க.இரத்தினகுமார் ,மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ரஞ்சித் கொடித்துவக்கு மற்றும் மக்கள் வங்கியின் பொறியியலாளர், மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய அலுவலக செயலாளர் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் மக்கள் வங்கியின் வன்னிப்பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ரஞ்சித் கொடித்துவக்கு, கரைச்சி கோட்டக் கல்வி அதிகாரி அ.அமிர்தலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதை இறுதி இரண்டு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: சிவநுபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட்' நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை கன்னாதிட்டி வீதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிறுவனத்தின் தலைவர் சியாமள் கூரே நாடாவெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும் நிறுவனத்தின் பணிப்பாளர் இரான் கூரே, யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி றேவின் பத்மதேவா ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும், யாழ்.நகர் கிளை முகாமையாளர் எஸ்.ஹென்றி உரையாற்றுவதை நான்காவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: டிலீப்)


**19** வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
தபால் மூலம்
**July.2010 to Dec..2010**

தமிழ் மொழி மூலம்

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம், மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
**Mobile: 0777 140 844 / 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : *10.08.2010*



## வீடு வாடகைக்கு

நவீன வசதிகளுடன் 3 படுக்கை அறைகள் குளியல் அறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. இல.33, கொய்யாத்தோட்டம், புதுவீதி, 6ஆம் வட்டாரம். தொடர்புகளுக்கு: *021 3212442*

## உடன் விற்பனைக்கு

வவுனியா, கோயில்குளம் மகாவித்தியாலயத்தின் முன்புறமாக அமைந்துள்ள சுற்று மதிலுடன் கூடிய 3½ பரப்பு 9 குளி அளவான காணி உடனடி விற்பனைக்குண்டு. தொ.பே.: *021 4904616, 077 9103637*

## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் பிரபல்யமான தனியார் தொலைபேசி நிறுவனத்தில் விற்பனைப் பிரதிநிதி (ஆண்), வாடிக்கைச் சேவை உத்தியோகத்தர் (பெண்) ஆகியவற்றுக்கு வெற்றிடம் உள்ளது. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். முன் அனுபவம் காணப்படின் முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 0785000580

## நல்லெண்ணெய் விற்பனைக்குண்டு

தரமான T.R.C. நல்லெண்ணெய் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு ஒரு போத்தல் 300/=
தொடர்புகளுக்கு: **ஆஷா பான்சி**
*.பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.: 0214922408, 0776537645*


## முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம்

நவாலி,ஓக.3

நவாலி வடக்கு ஜே/134 கிராமசேவையாளர் பிரிவில் முதியோர் சங்கமொன்று கடந்த மாதம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக கனகசிங்கம் இரத்தினேஸ்வரியும் செயலாளராக டாக்டர் எஸ்.சுந்தரராசனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(த-100)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### அமரர் கலாநிதி அ.சோமசுந்தரம்பிள்ளை நினைவுப் பேருரை

"Private Universities in Higher Education - Main Issues and Their Relevance to Sri Lanka"

*பேருரை வழங்குநர்* : பேராசிரியர் N.பாலகிருஷ்ணன்
முன்னாள் பீடாதிபதி, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

*இடம்* : கைலாசபதி கலையரங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

*திகதி* : **04.08.2010 புதன்கிழமை**

*நேரம்* : **மு.ப. 10 மணி**

ஆர்வலர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

*(சி/569629)* பதிவாளர்.


## மீளமைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.3

நெடுந்தீவில் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம் மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்துக்கு மதுவரித் திணைக்களத் திடமிருந்து கள்ளு உற்பத்தி செய்வதற்கும் விற்பதற்குமான அனுமதியைப் பெறுவதற்கான விஷேட பொதுக்கூட்டம் ஒன்று நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை கேட்போர் கூடத்தில் கடந்த 28ஆம் திகதி நடைபெற்றது. இதன் போது புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

குறித்த சங்கத்தின் உறுப்பினர்களுக்குக் கள்ளுத் தவறணை அனுமதிப் பத்திரத்தையும் மதுவரித் திணைக்களத்திடம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இதனால் நெடுந்தீவில் நிறைந்துள்ள பனை வளத்தின் உச்சப் பயனை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் இதற்கு நெடுந்தீவுப் பகுதி பனை, தென்னை சார் உற்பத்தியாளர்கள் சட்ட வரைவுக்கு உட்பட்டு தொழிற்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-317-316)


## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்

(02.08.2010)



**திருமதி**
**தனேஸ்வரி திருக்குமாரன்**
*(B.A,Dip.in.Ed, SLTS -1 )*
*(பிரதி அதிபர் - யா/கோப்பாய் மகா வித்தியாலயம்)*

அன்பிலும் பண்பிலும் ஆளுமையிலும்
எம் எண்ணங்களில் நிறைந்த
எமது ஆசான் - சகல செல்வங்களுடன்
நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.
*யா/கோப்பாய் மகா வித்தியாலயம்.*



## அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு **05.03.1938** உதிர்வு **12.07.2010**

## அமரர் அப்புத்துரை பரிமளம்

*கடந்த (12.07.2010) திங்கட்கிழமை அமரத்துவமடைந்த எங்கள் குலவிளக்கின் மறைவுச் செய்தி கேட்டு எங்கள் துயரில் பலவகைகளிலும் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*
*அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் (05.08.2010) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 11.08.2010 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்.*
*அத்தருணம் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பெரியாட்டி,
கோப்பாய் வடக்கு.

அப்புத்துரை மதியழகன்(மகன்) லண்டன்
00441908227788

*(101489)*



சீட்டிழுப்பு இல. **2273** திகதி **01.08.2010**

## மஹஜன சம்பத

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து வெற்றி எண்கள்

**V 8 2 0 3 0 0**

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | V | 8 | 2 | 0 | 3 | 0 | 0 | ரூபா. | 15,109,377/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 8 | 2 | 0 | 3 | 0 | 0 | ரூபா. | 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 2 | 0 | 3 | 0 | 0 | ரூபா. | 100,000/= | பரிசுகள் | 06 |
| 3ம் பரிசுகள் | | | | 0 | 3 | 0 | 0 | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 72 |
| 4ம் பரிசுகள் | | | | | 3 | 0 | 0 | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 716 |
| 5ம் பரிசுகள் | | | | | | 0 | 0 | ரூபா. | 100/= | பரிசுகள் | 7153 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 0 | ரூபா. | 20/= | பரிசுகள் | 70503 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 8 | 2 | 0 | 3 | 0 | | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 08 |
| 8ம் பரிசுகள் | | 8 | 2 | 0 | 3 | | | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 68 |
| 9ம் பரிசுகள் | | 8 | 2 | 0 | | | | ரூபா. | 100/= | பரிசுகள் | 702 |
| 10ம் பரிசுகள் | | 8 | 2 | | | | | ரூபா. | 50/= | பரிசுகள் | 7010 |
| 11ம் பரிசுகள் | V | | | | | | | ரூபா. | 20/= | பரிசுகள் | 28118 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா.
**15,341,860.00**

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **7,292,420.00**
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
**தேசிய லொத்தர் சபை**
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline 243363

முடிவுகளை அறிய
www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மத்திய கல்லூரி நிறுவுனர் தினத்தினை முன்னிட்டு கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மத்திய கல்லூரியின் அதிபர் எல்.ஓங்காரமூர்த்திக்கு வீரர்கள் அறிமுகம் செய்யப்படுவதை முதல் படத்திலும் ஆட்ட தொடர் நாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி வீரர் செல்ரனுக்கும் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்ட யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி வீரர் மணிவண்ணனுக்கும் பிரதம விருந்தினர் விருதினை வழங்குவதை இரண்டாம் மூன்றாம் படங்களிலும் வெற்றி பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணித் தலைவர் மணிவண்ணனிடம் பிரதம விருந்தினர் வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்:தமிழினியன்)

# பழைய மாணவர் அணிகளின் மென்பந்தாட்டம்; மணிவண்ணனின் அதிரடியால் யாழ்.இந்து சம்பியன்

யாழ்ப்பாணம்,ஓக.3

மணிவண்ணனின் அதிரடி ஆட்டம் கை கொடுக்க யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி 47 ஓட்டங்களால் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் அணியை வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணம் கைப்பற்றியது.

யாழ்.மத்திய கல்லூரியின் நிறுவுநர் தினத்தை முன்னிட்டு யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்திய 6 பேர் பங்கு கொள்ளும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் அணியினர் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி எதுவித விக்கெட் இழப்பின்றி 128 ஓட்டங்களைப் பெற்றது.

மணிவண்ணன் 80 ஓட்டங்களையும், உமாதரன் 36 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

129 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய யாழ்.மத்திய கல்லூரி பழையமாணவர் அணி 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 81 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

செல்ரன் 22 ஓட்டங்களையும், சுதர்சன் 26 ஓட்டங்களையும்,சாள்ஸ் 19 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

லஸ்சுமிகாந் 6 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், பிரியதர்சன் 6 ஓட்டங்கள் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆட்டத்தின் தொடர் நாயனாக யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி வீரர் செல்ரனும் ஆட்ட நாயனாக யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவ அணி வீரர் மணிவண்ணனும் சிறந்த பந்து வீச்சாளராக ஸ்ரான்லிக் கல்லூரி பழைய மாணவர் அணி வீரர் வினோஷனும் தெரிவு செய்யப்பட்டனர்.

(ஐ-23)



அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவர்கள் தேசிய மட்டத்தில் விளையாட்டுத்துறையில் பெற்ற வெற்றிகளுக்காக மாணவர்கள் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியரும் மாணவர்களின் பயிற்றுவிப்பாளருமான பாகீஸ்வரனுக்கு தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பதக்கம் அணிவித்து கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

கடந்தாண்டு கல்வி அமைச்சினால் தேசிய மட்டத்தில் ஆசிரியர்களுக்கு இடையே நடத்திய விளையாட்டுப் போட்டியில் தட்டெறிதல், குண்டு போடுதல், ஈட்டி எறிதல் போட்டிகளில் இவர் முதலாம் இடத்தைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

*(படம்: நேசன்)*

# தேசியப் போட்டியில் மத்தியஸ்தராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுரேஸ்குமார்

சங்கானை,ஓக.3

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் டி.எஸ்.சுப்பர் விளையாட்டு நிறுவனத்தின் ஆதரவில் பாடசாலை அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை அண்மையில் நடத்தியது. அதன் இறுதிப் போட்டிகள் கடந்த 23, 24 ஆம் திகதிகளில் கொழும்பு சுகதாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்த இறுதிப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகிப்பதற்காக யாழ். மாவட்டத்திலிருந்து சங்கானையைச் சேர்ந்த நல்லையா சுரேஸ்குமார் அழைக்கப்பட்டிருந்தார். அவர் போட்டிகளுக்கு மத்தியஸ்தராகக் கடமை யாற்றியுள்ளார்.



இலங்கையின் கரப்பந்தாட்ட வரலாற்றில் முதன் முறையாக யாழ்ப் பாணத்திலிருந்து தமிழர் ஒருவர் தேசிய ரீதியான இறுதிப் போட்டிக்கு மத்தி யஸ்தராகக் கடமையாற்றுவதற்கு அழைக் கப்பட்டமை இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவர் தேசிய மத்தியஸ்தர் என்பதுடன் கடந்த மார்ச் மாதம் சர்வதேச சம்மேளனத்தால் நடத்தப்பட்ட மத்தியஸ்தர் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட ஒரே ஒரு தமிழர் என்பதுடன் மேற்படி பரீட்சையில் தேசியரீதியில் முதலிடம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் இலங்கை கிரிக்கெட்சபையின் மத்தியஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 27 பேரில் இவரும் உள்ளடங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(த-201-29)

# தடகளப் போட்டிகளில் 17 வயதுப் பிரிவில் ஆண்களுக்கான முடிவுகளின் விவரம்

வலி.வடக்கு,ஓக.3

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட தடகள விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் தொடர்ந்து வெளிவருகின்றன.

17 வயது ஆண்கள் பிரிவில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**17 வயதுப் பிரிவு**

**100 மீற்றர்**

சா.மாட்டின் எல்வீஸ் -யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, மை.ஜனகன் - மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை, க.யூட்லஸ்- வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்,எம்.ராப்யல் - மன்னார் பாத்திமா மத்திய மகாவித்தியாலயம்.

**110 மீற்றர் தடை தாண்டல்**

சா.மாட்டின் எல்வீஸ் - யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, இ.சமபேசேக்- யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, அ.ஸ்ராலின் றொக்சன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ஜோ.அன்றுடிலக்சன் -மன்னார் நானாட்டான் மகாவித்தியாலயம்.

**400 மீற்றர் தடை தாண்டல்**

எஸ்.டினோசன் - மன்னார் பரிசளை கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, பி.பிரசாத் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, கு.குணசீலன் -வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், இ.விவேக் - மன்னார் அரிப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை.

**உயரம் பாய்தல்**

ஜெ.ஜெனந்தன் - 6.13 மீற்றர் -தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, ஏ.மயூரன் - பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம், அ.அருள்ராஜ் - மன்னார் நானாட்டான் மகாவித்தியாலயம், சு.தனுசன்- எழுவைதீவு முருகவேல் வித்தியாலயம்.

**நீளம் பாய்தல்**

வ.ஜஸ்மினன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - 12.22 மீற்றர், த.நிரோசன் - மிருசுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, ஆர்.அஜந்தன் - முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயம், ம.டக்சன் - மல்லாகம் மகாவித்தியாலயம்.

**கோலூன்றிப் பாய்தல்**

அ.அன்ரனி கோகே ஹாக்சன் - 2.80 மீற்றர் - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, றோ.பரிஸ்ரர் டெஸ்மன்ராஜ் - மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, வி.சயிந்தன் - வடமராட்சி [illegible] வித்தியாலயம், [illegible] - மன்னார் பாத்திமா மத்திய மகா வித்தியாலயம்.

**குண்டு போடுதல்**

ப.ஜெயந்தன் - மன்னார் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, இ. காந்தீபன் - வடமராட்சி புற்றளை மகாவித்தியாலயம், க.சிலோஜன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, அ.ஜனந்தன் - யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி.




**4×100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, மன்னார் பாத்திமா மத்திய மகா வித்தியாலயம்.

**4×400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயம், மன்னார் பாத்திமா மத்திய மகா வித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

(ஐ-86)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.3

அச்சுவேலி தோப்பு அருள்நந்தி முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் தோப்பு அருள் நந்தி வித்தியாலய அதிபர் மு.ராஜவரோதயம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விமலநாதனும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற வைத்தியப் பொறுப்பதிகாரி எஸ்.இராஜலிங்கம், அச்சுவேலி பிரதேசசபை உத்தியோகத்தர் வி.கனகராசா ஆகியோர் கலந்து கொள்வர். (த-204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றி எரிகிறது காஷ்மீர்!

## துப்பாக்கிச்சூட்டில் மேலும் 3 பேர் பலி
## 9 மாவட்டங்களில் ஊரடங்கு அமுல்!!

ஸ்ரீநகர், ஓகஸ்ட் 03

**காஷ்மீரில் தலைவிரித்தாடும் பயங்கர வன்முறைகளால் நாளுக்கு நாள் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன. நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் பலியாகினர். இதனால் பலியானோரின் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 9 மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.**

காஷ்மீர் மாநிலத்தில் பிரிவினைவாதிகள், போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் வன்முறை தலை தூக்குகிறது. வன்முறையை அடக்க பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்திய வருகின்றனர்.

கடந்த சனியன்று நடந்த துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் பலியானார்கள். அதற்கு முன்னர் 4 பேர் இறந்தனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் பலியாகினர். இதனால் சாவு எண்ணிக்கை 9 ஆக உயர்ந்தது.

நேற்றுமுன்தினம் ஸ்ரீநகரில், ஒரு கூட்டத்தினர் வீதியில் கூடி போக்குவரத்துக்குத் தடையை ஏற்படுத்தினார்கள். இதைப் படையினர் கண்டித்தனர். அப்போது பொலிஸார் மீது கற்கள் வீசப்பட்டன. இதில் 13 பொலிஸார் காயமடைந்தனர்.

இந்த நிலையில் பொலிஸார் தடியடி, கண்ணீர்ப்புகைக் குண்டுவீச்சு போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆனால் இந்த முயற்சிகள் பயனளிக்காததால் பொலிஸார் துப்பாக்கியால் சுட்டனர்.

இதில் 3 பேர் காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக ஸ்ரீநகர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதில் ஒருவர் சிகிச்சை பலனின்றி இறந்தார். மற்ற 2 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீநகரில் உள்ள நவ்காம் பகுதியில், போராட்டக்காரர்கள் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் இறந்தார். மேலும் ஒருவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



பம்போரே என்ற இடத்திலுள்ள துணை பொலிஸ் நிலையத்துக்குள் போராட்டக்காரர்கள் அத்துமீறிப் புகுந்தனர். அப்போது அங்கு காவல் பணியில் இருந்த பொலிஸாரிடம் இருந்த ஆயுதங்களைப் பறித்துக் கொண்டனர். அப்போது படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதில் அப்ரோசா என்ற பெண் உயிரிழந்தார்.

போராட்டக்காரர்கள், அரச கார் மற்றும் வாகனங்களைத் தீ வைத்து எரித்தனர். தாசில்தார் அலுவலகத்துக்கும் தீ வைத்தனர். போராட்டக்காரர்கள் ஒருபுறம் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய போது, காட்டுப் பகுதியில் மறைந்திருந்த தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். உடனே படையினர் தீவிரவாதிகளை நோக்கிச் சுட்டு, அவர்களை விரட்டி அடித்தனர். அப்போது பொலிஸ் வாகனங்களுக்குப் போராட்டக்காரர்கள் தீ வைத்தனர்.

இதையடுத்து, காஷ்மீர் மாநிலத்திலுள்ள 9 மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டுள்ளது.

ரஜோரி மாவட்டத்தில் சிங்குஸ் என்ற மலைப்பகுதியில் தீவிரவாதிகள் பதுக்கி வைத்திருந்த 40 கிலோ ஆர்.டி.எக்ஸ். வெடிபொருளை படையினர் கைப்பற்றினார்கள். அங்கிருந்து துப்பாக்கிகள், துப்பாக்கிக் குண்டுகள், ஒரு கிலோ போதைப் பொருள் ஆகியவற்றையும் படையினர் கைப்பற்றினார்கள்.

## சிறுமியைக் கௌவியது சிறுத்தை திருப்பதியில் மீண்டும் பயங்கரம்!

நகரி,ஓக.3

திருப்பதி மலைப்பாதையில் மேலும் ஒரு சிறுமியை சிறுத்தைப்புலி கௌவியது படுகாயத்துடன் அதிர்ஷ்டவசமாக அவள் உயிர் தப்பினாள்.

கடந்த 27 ஆம் திகதி இரவு திருப்பதி மலைப்பாதையில் பெற்றோருடன் நடந்து சென்ற காளஹஸ்தியைச் சேர்ந்த கோகிலா என்ற சிறுமியை சிறுத்தைப்புலி ஒன்று வயிற்றில் கௌவிக் கொல்ல முயன்றது. ஆனால் அதிர்ஷ்டவசமாக அவள் உயிர் தப்பினாள்.

இதேபோன்று அங்கு மீண்டும் ஓர் சம்பவம் நடந்துள்ளது.

ஆந்திர மாநிலம் அனந்தபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த லட்சுமிநாராயணா என்பவர் தனது குடும்பத்தினருடன் திருப்பதி கோவிலுக்குச் சென்றார். லட்சுமி நாராயணாவுடன் அவரது அண்ணன் மகள் கல்யாணி (வயது -6) என்ற சிறுமியும் சென்றாள்.

அவர்கள், நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் திருமலை நடைபாதை வழியாக கோவிலுக்கு நடந்து சென்று கொண்டிருந்தனர். அவர்களுடன் மேலும் பல பக்தர்களும் நடந்து சென்றனர். அப்போது, அடர்ந்த புதருக்குள் இருந்து திடீரென்று வந்த ஒரு சிறுத்தைப்புலி சிறுமி கல்யாணியின் மீது பாய்ந்து அவளது கழுத்தைத் கௌவியது.

இதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்த மற்ற பக்தர்கள் கூச்சல் போட்டனர். அந்தத் சத்தத்தைக் கேட்டதும் சிறுத்தைப்புலி பயந்து போய் சிறுமியை விட்டு விட்டு காட்டுக்குள் தப்பி ஓடிவிட்டது. இதனால் அவள் மயிரிழையில் உயிர் தப்பினாள்.

சிறுத்தை கௌவியதில், சிறுமியின் கழுத்திலும் வயிற்றிலும் காயம் ஏற்பட்டது. அதிர்ச்சியில் சிறுமி கல்யாணி மயக்கமடைந்து விட்டாள்.

இதைத்தொடர்ந்து உடனடியாக அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு, சிறுமியை திருப்பதி ருயோ வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு அவளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## காஷ்மீர் கலவரம் பற்றி மன்மோகன் தலைமையில் அவசர ஆலோசனை



புதுடில்லி,ஓக.3

காஷ்மீர் நிலைவரம் குறித்து பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் மத்திய அமைச்சரவை நேற்று முன்தினம் இரவு அவசரமாகக் கூடி ஆலோசனை நடத்தியது.

காஷ்மீர் மாநிலத்தில் பிரிவினை வாத இயக்க ஆதரவாளர்கள், படையினருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டு வருகிறார்கள். கடந்த மூன்று நாட்களில், துப்பாக்கிச்சூட்டில் பெண் உட்பட 9 பேர் பலியானார்கள்.

அங்கு கலவரம் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில், பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் பாதுகாப்பு தொடர்பான மத்திய அமைச்சரவைக் குழு, நேற்றுமுன்தினம் இரவு அவசரமாகக் கூடி காஷ்மீர் நிலைமை குறித்து ஆலோசனை நடத்தியது. மத்திய அமைச்சர்கள் பிரணாப் முகர்ஜி, ப.சிதம்பரம், ஏ.கே.அந்தோனி ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு உளவு அமைப்புகள், அரசியல் கட்சிகளின் கருத்துகள், காஷ்மீர் மாநில அரசு மற்றும் ஆளுநர் என்.என்.வோரா தரப்பில் அனுப்பி வைக்கப்பட்ட தகவல்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அனைத்துத் தரப்பினருடனும் பேச்சை தொடங்க வேண்டும் என்று காஷ்மீர் முதல்வர் உமர்அப்துல்லா தெரிவித்த யோசனை குறித்தும் பரிசீலிக்கப்பட்டது.

காஷ்மீர் பிரச்சினையில் கடந்த ஒரு மாதத்திற்குள் மத்திய அமைச்சர்கள் குழு கூடி விவாதிப்பது இது இரண்டாவது முறை என்பது குறிப்பிடத்தக்கது.

உளவு அமைப்புகள் அனுப்பிய அறிக்கையில், கலவரத்தில் ஈடுபடுகிறவர்களில் பெரும்பான்மையானோர், தண்டனை பெற்ற முன்னாள் தீவிரவாதிகள் என்றும், தற்போது அவர்கள் வேலையில்லாமல் இருந்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் பிரச்சினையில், மத்திய அமைச்சரவைக் குழு கூடி விவாதித்திருப்பதை மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றுள்ளது.

இந்தியச் செய்திகள்

## உத்தரகாண்ட் மாநிலத்தில் விபத்து லொறி கவிழ்ந்து 23 பக்தர்கள் பலி!

டேராடூன்,ஓக.3

உத்தரகாண்ட் மாநிலத்தில் 500 அடி பள்ளத்தில் லொறி ஒன்று கவிழ்ந்த விபத்தில் 23 பக்தர்கள் பரிதாபப் பலியானார்கள்.

அரியானா மாநிலத்தைச் சேர்ந்த சிவ பக்தர்கள் சிலர் உத்தரகாண்ட் மாநிலம் கங்கோத்ரி நோக்கி லொறி ஒன்றில் சென்று கொண்டிருந்தனர்.

உத்தரகாண்ட் மாநிலம் உத்தர்காசி மாவட்டத்திலுள்ள தாப்ரனி என்ற இடத்தில் ரிஷிகேஷ் - கங்கோத்ரி வீதியில் அந்த லொறி சென்றுகொண்டிருந்த போது, திடீரென்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, சுமார் 500 அடி ஆழ பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்தக் கோர விபத்தில், லொறியில் பயணம் செய்த பக்தர்கள் 23 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

விபத்து குறித்து தகவல் கிடைத்ததும் மாநிலப் பொலிஸாரும், இந்தோ - திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படையினரும் அங்கு சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். பல மணிநேரம் போராடி, அந்தப் பகுதியில் இருந்து பலியானவர்களின் சடலங்களை அவர்கள் மீட்டனர்.

இந்தக் கோர விபத்திற்கு உத்தரகாண்ட் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் பலத்த மழைதான் காரணம் என்று கூறப்படுகிறது. அந்த மாநிலத்தில் கடந்த 44 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் பெரும்பாலான இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

## போரை நிறுத்துமாறு முதல்வர் கூறியதுண்டா? நிரூபித்தால் அரசியலில் இருந்து விலகத் தயார்!

### நான் பிரதமரிடம் 16 முறை மன்றாடினேன் - வைகோ குமுறல்

சென்னை,ஓக.3

இலங்கையில் நடந்த போரை நிறுத்தச் சொல்லி, நான் 16 தடவைகள் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து மன்றாடியிருக்கிறேன். ஆனால் தமிழக முதல்வர் கருணாநிதி ஒரு முறையாவது போரை நிறுத்தச் சொன்னதுண்டா? அப்படி அவர் சொன்னார் என நிரூபணம் செய்தால் நான் அரசியலை விட்டு விலகிக் கொள்கிறேன்.

- இவ்வாறு ஈழத் தமிழா ஆதரவுப் பீரங்கியும், தமிழகத்தின் மூத்த அரசியல் வாதியும், ம.தி.மு.க. பொதுச்செயலாளருமான வைகோ சவால் விடுத்துள்ளார்.

திருச்சியில் ம.தி.மு.க. சார்பில்நடந்த பொதுக்கூட்டத்தில் பேசியபோதே வைகோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் நடந்த இறுதிப் போரில் லட்சக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். நான் 16 தடவைகள் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து, இலங்கையில் நடக் கும் போரை நிறுத்தச் சொல்லி மன்றாடியிருக்கிறேன். தமிழக முதல்வர் கருணாநிதி ஒரு முறையாவது போரை நிறுத்தச் சொன்னது உண்டா? அவர் அப்படிச் சொன்னார் என நிரூபணம் செய்தால், நான் அரசியலை விட்டு விலகிக் கொள்ளத் தயார்.



அண்ணாதுரை உருவாக்கிய இயக்கத்தை கருணாநிதி பாழாக்கி விட்டார். அ.தி.மு.க., ஆட்சியில் இருந்ததை விட ஆறு மடங்கு விலைவாசி உயர்ந்துள்ளது.

இதைக் கூறினால், மக்களிடம் பணம் உள் ளது; வாங்கும் சக்தி உள்ளது என ஏளனம் செய்கிறார் கருணாநிதி. எனவேதான், நாங்கள் தமிழ் மக்களைப் பாதுகாக்கக் குரல் கொடுக்கிறோம். ம.தி.மு.கவை யாரும் அழித்துவிட முடியாது. - என்றார் வைகோ.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாக். வெள்ளத்தில் பலியானோர் எண்ணிக்கை 1,500 ஆக உயர்வு!

## 10 இலட்சம் பேர் நிர்க்கதி; 15 ஆயிரம் வீடுகள் நிர்மூலம்!

பெஷாவர், ஓக. 03

பாகிஸ்தானில் பெய்துவரும் பலத்த மழை, வெள்ளத்துக்குப் பலியானோரின் எண்ணிக்கை 1,500 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 80 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப் பாகிஸ்தானில் இந்த ஆண்டு பருவ மழை பெய்து வருகிறது.



இதனால் பாகிஸ்தானிலுள்ள பெரும்பாலான கிராமங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. குறிப்பாக வடமேற்கு கைபர் - பக்துன்வா மாகாணத்தில் பலத்த மழை பெய்து வருகிறது.

கடந்த 5 நாள்களில் மழைக்கு இதுவரை 1,500 பேர் பலியாகியுள்ளனர். 10 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்துள்ளனர். நிவாரணப் பணிகளை மாவட்ட நிர்வாகங்கள் முடுக்கி விட்டுள்ளன.

வெள்ளத்தில் சிக்கியோரை மீட்க 30 துணை இராணுவப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வெள்ளத்தில் சிக்கித் தவிப்பவர்களை இராணுவச் சிப்பாய்கள் ஹெலிக்கொப்டரில் சென்று மீட்டு வருகின்றனர்.

பாகிஸ்தானில் மழை வெள்ளத்தில் 1,500 பேர் பலியாயினர். ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் இடிந்தன. 45 பாலங்கள் உடைந்தன. 10 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர்.

பாகிஸ்தானில் கடந்த ஒரு வாரமாக பருவ மழை பலமாக பெய்துவருகிறது. வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் மட்டும் 36 மணி நேரத்தில் 12 அங்குலம் மழை பெய்துள்ளது. இதன் காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதில் 1,500 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 150 பேரைக் காணவில்லை.

பாகிஸ்தான் முழுவதும் பரவலாக மழை பெய்த போதிலும், மோசமாக வடமேற்கு எல்லைப்புற மாநிலமே பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மாநிலமும், மாலக்கண்டு பகுதியும் தான் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு மட்டும் 102 பேர் பலியாகியுள்ளனர். 16 ஆயிரம் பேர் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர்.

இந்த மாநிலத்தில் 1929ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப்போதுதான் மிகப்பெரிய வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்த மாநிலத்தில் ஓடும் ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக 45 பாலங்கள் உடைந்துள்ளன. 15 ஆயிரம் வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. விவசாய நிலங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

பாகிஸ்தான் நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீரிலும் வெள்ளச்சேதம் பெருமளவில் ஏற்பட்டுள்ளது. சீனாவுடன் காஷ்மீரை இணைக்கும் காரகோரம் நெடுஞ்சாலையில் ஒரு பாலம் உடைந்து விழுந்ததால் அந் நெடுஞ்சாலை துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் அது மூடப்பட்டுள்ளது. வெள்ளம் காரணமாக பல கிராமங்கள் துண்டிக்கப்பட்டு தீவுகளாகக் காட்சி அளிக்கின்றன.

பல கிராமங்களில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் மக்கள் வீடுகளின் கூரைகளில் நின்றபடி இருந்தனர். பலர் தங்கள் உடைமைகளைத் தலையில் சுமந்தபடியும், குழந்தைகளைத் தோளில் ஏற்றிக்கொண்டும் வெள்ளத்தில் நடந்து பாதுகாப்பான இடங்களைத் தேடிச் சென்றனர்.

மழை வெள்ளத்தில் 10 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என வட மேற்கு மாநில அமைச்சர் மியான் இப்திகார் உசேன் தெரிவித்துள்ளார்.

# ஈரான் மீதான இராணுவ நடவடிக்கைக்கு அமெ. தயார் என்கிறார் தளபதி முல்லன்!

வாஷிங்டன், ஓக. 03

அணுகுண்டு தயாரிப்பு விவகாரம் தொடர்பாக ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா அனைத்து நிலையிலும் தயாராக இருக்கிறது என அமெரிக்க இராணுவத் தலைமை அதிகாரி மைக்முல்லன் கூறியிருக்கிறார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. அந்தப் பிராந்தியத்தில் ஈரானால் ஏற்படும் ஆபத்தை தடுக்க வேண்டிய கடமை அமெரிக்காவுக்கு உள்ளது.

எனவே, இதற்காக அனைத்துத் திட்டங்களையும் வகுத்துள்ளோம். தேவைப்பட்டால் ஈரான் மீது தாக்குதல் நடத்தவும் அமெரிக்கா தயங்காது. இதற்கு அமெரிக்க இராணுவம் தயார் நிலையில் உள்ளது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கக் கூடாது என்பதற்காக சர்வதேச அளவில் இராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொருளாதாரத் தடை உள்ளிட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இது நல்ல பயனைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அது நடைபெறவில்லை என்றால் இராணுவ ரீதியான நடவடிக்கை எடுக்கவும் பரிசீலனையில் இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# நவீனமயமாகிறது சீன இராணுவம்

## 83ஆவது ஆண்டு விழாவில் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

பீஜிங், ஓக. 03

சீன இராணுவம் நவீன மயமாக்கப்பட்டு வருகிறது என பாதுகாப்புத்துறை அமைச்சர் லியான் குவாங்லீ தெரிவித்துள்ளார்.

உலகின் மிகப்பெரிய இராணுவமான சீன இராணுவத்தின் 83ஆவது ஆண்டு விழா ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது.

இராணுவத்தை நவீனப்படுத்துவதோடு, சைபர் போர், பிராந்திய அளவிலான சண்டைகள் ஆகியவற்றை திறம்பட எதிர்கொள்வது எனவும் விழாவில் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

சீனாவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் லியான் குவாங்லீ விழாவில் பங்கேற்று பேசினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''சீன இராணுவம் விரைவாக வளர்ச்சியடைந்துள்ளது. உலகிலேயே அமெரிக்காவுக்கு அடுத்த படியாக சீனாவில்தான் இராணுவத்துக்கு அதிகமாக நிதி செலவிடப்படுகிறது. நாட்டின் வளர்ச்சிக்கும், பொது மக்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்கும் இராணுவம் தயாராக உள்ளது'' என்றார்.

''நாட்டின் பாதுகாப்பை முக்கியமாகக் கருதி இராணுவம் மேம்படுத்தப்பட்டு வருகிறது. தாய்வான், திபெத் ஆகியவை சீனாவுடன் இணைந்த பகுதிகள். இவற்றில் சீனா அதிக ஆர்வம் காட்டி வருகிறது. பாகிஸ்தான், வடகொரியா ஆகிய நாடுகளுடன் முக்கிய விடயங்களை சீன இராணுவம் பகிர்ந்துவருகிறது'' என்றும் அவர்தெரிவித்தார்.

''இராணுவம் நவீனமயப்படுத்தப்பட்டு வருவதோடு, இராணுவத்துக்காக ஏராளமான கட்டடங்களும் கட்டப்பட்டு வருகின்றன. பிராந்திய அளவிலான சண்டைகளை எதிர்கொள்ளும் வகையில் இராணுவத்தின்பலம் மேம்படுத்தப்பட்டு வருகிறது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''பயங்கரவாத மிரட்டல்களிலிருந்து நாட்டை பாதுகாப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 20ஆம் நூற்றாண்டின் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள சைபர் போருக்கு சீன இராணுவம் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. சைபர் மிரட்டல்களிலிருந்து நாட்டை பாதுகாப்பதற்காக புதிதாக சைபர் படை ஒன்றையும் சீனா உருவாக்கியுள்ளது'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

சீன அரசு பாதுகாப்புத்துறைக்கு இந்தாண்டு 7.5 சதவீதம் நிதியை ஒதுக்கியுள்ளது. கடந்த ஆண்டு 14.9 சதவீதம் நிதியை ஒதுக்கியது. இது இந்தியாவைப் போல் இரண்டு மடங்கு அதிகமாகும் என சீன இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் சீன இராணுவம் பெரும் வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இராணுவத்தில் 2.3 மில்லியன் வீரர்களும், கப்பல் படையில் 2 இலட்சத்து 55 ஆயிரம் பேரும், விமானப் படையில் 4 இலட்சம் வீரர்கள், அதிகாரிகள் ஆகியோரும் உள்ளனர்.

# நெதர்லாந்து நாட்டுப் படைகள் ஆப்கானிலிருந்து வெளியேறும்

காபூல், ஓக. 03

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள நேட்டோ படையணியில் அங்கம் வகிக்கும் நெதர்லாந்து சிப்பாய்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற வுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் ஒரு இலட்சத்து 45 ஆயிரம் அந்நிய துருப்புகள் உள்ளன. இவற்றில் 1950 பேர் நெதர்லாந்து இராணுவச் சிப்பாய்கள் ஆவார்கள். இந்த 1950 பேரும் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறுகிறார்கள்.

ஆப்கானிஸ்தானிலுள்ள உருஸ்கான் என்ற பகுதியில் இந்த நெதர்லாந்து இராணுவம் நிறுத்தப்பட்டிருந்தது. அந்தப் பகுதியை அமெரிக்கா, ஆஸ்திரேலிய இராணுவத்திடம் ஒப்படைக்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

அப்போது முறைப்படி தங்கள் பொறுப்பை நெதர்லாந்து இராணுவத் தலைவர் ஜெனரல் பீட்டர் வேன் உக்கம் வழங்கினார். அதன் பின்னர் அவர் பேசுகையில், ''பாதுகாப்பு நிலையில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால், இன்னும் நிறைய செய்யவேண்டி உள்ளது'' என்று குறிப்பிட்டார்.

நெதர்லாந்து அரசியல் நிலைமை காரணமாக அந்நாட்டு இராணுவம் வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்நாட்டில் போருக்கு எதிரான மனநிலை வளர்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக அந்த கூட்டணி ஆட்சி கடந்த பெப்ரவரி மாதம் கவிழ்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

# நியூயோர்க் இரட்டைக் கோபுரத்தின் கீழ் புதையுண்ட பண்டைய கப்பல்!

நியூயோர்க், ஓக. 03

அமெரிக்காவில் உலக வர்த்தக மையமிருந்த இடத்தில் பண்டைய கப்பல் ஒன்று புதைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதை அகழ்ந்தெடுக்கும் பணியில் தொல்பொருள் துறை வல்லுநர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

நியூயோர்க் நகரிலிருந்த உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரக் கட்டடங்கள் மீது கடந்த 2001ஆம் ஆண்டு அல்-குவைதா தீவிரவாதிகள் விமானங்களை மோதி தாக்குதல் நடத்தினர்.

இதில் இரட்டைக் கோபுரக் கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாயின. அந்த இடத்திலிருந்த கொன்கிரீட் குவியல்கள் இராட்சத இயந்திரங்கள் உதவியுடன் அகற்றப் பட்டன.

அப்போது உலக வர்த்தக மைய கட்டடங்கள் இருந்த இடத்தின் தரைப் பகுதிக்குக் கீழே பண்டைய கப்ப லொன் றின் பாகங்கள் தென்பட்டன. இதை யடுத்து அந்தக் கப்பலை அகழ்ந்தெடுக் கும் பணி ஆரம்பமாகியது.

அமெரிக்காவைச் சேர்ந்த தொல்பொருள் ஆய்வுத்துறை வல்லுநர்கள் மெக்டொனால்ட், மைக்கேல் பாப்பலர் ஆகியோர் அந்தக் கப்பலை வெளிக்கொணரும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

18ஆம் நூற்றாண்டில், மன்ஹாட்டன் நகரை விரிவுபடுத்துவதற்காக, ஹட்சன் நதியின் சிறு பகுதியில், கழிவுகள் கொட்டப்பட்டு நிலமாக்கப்பட்டது. அந்த கழிவுகளில், இந்த கப்பலும் ஒன்று.

இது குறித்து மெக்டொனால்ட் குறிப்பிடுகையில், ''கப்பலின் பக்கவாட்டில் கட்டப்பட்டிருக்கும் மரக்கட்டைகளின் உடைந்த பாகங்களை சமீபத்தில் கைப்பற்றினோம். அந்த மரக்கட்டைகளை வைத்து, அதன் வயதை கண்டுபிடிக்கவுள்ளோம். இதை வைத்து கப்பல் எந்த ஆண்டில் கட்டப்பட்டதென்பதை கண்டுபிடித்துவிடலாம். தவிர, கப்பலின் புதைபடிவத்தைப் படகு வல்லுநர்களின் துணையுடன் கவனமாக ஆய்வுசெய்து வருகிறோம். கப்பல் குறித்து கிடைக்கும் தகவல்களை பதிவு செய்து வருகிறோம்'' என்றார்.

உலக அரங்கில்

# ரஷ்யாவில் மழை வேண்டிப் பிரார்த்தனை நடத்த மக்களிடம் பேராயர் கோரிக்கை

மாஸ்கோ, ஓக. 03

ரஷ்யாவில் கொளுத்தும் வெயில், நிலவும் கடும் வறட்சி ஆகியவற்றால் மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளார்கள். இந்நிலையில், மழை கோரி பிரார்த்தனை நடத்துமாறு ரஷ்ய ஆர்த்தடக்ஸ் பேராயர் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ரஷ்யாவில் 130 ஆண்டுகளிலில்லாத அளவில் கடும் வெயில் எரித்து வருகிறது. இதனால் இங்குள்ள காடுகள் தீப்பிடித்து எரிகின்றன. கடந்த 2 நாட்களில் மட்டும் 774 தீ விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 28 பேர் பலியாகி இருக்கின்றனர்.

மத்திய, வோல்கா மாவட்டங்களில் வெயில் அளவு மேலும் அதிகரிக்கும் என்று வானிலை அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள். எனவே, அங்குள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு நகருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கடுமையான வெயில், வறட்சி, தீ விபத்துக்கள் ஆகியவற்றால் 2 இலட்சத்து 40 ஆயிரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கோதுமை ஏற்றுமதியில் சிறப்பான இடத்திலிருக்கும் ரஷ்யாவில், தற்போது கோதுமை உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் அனைத்து மக்களும் ஒன்றுகூடி மழைக்காகவும், வெயில் குறைய வேண்டும் என்றும் கோரி, பிரார்த்தனை நடத்துமாறு ரஷ்ய ஆர்த்தடக்ஸ் பேராயர் கிரில் கேட்டுக்கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.குடாநாட்டில் உள்ள பாடசாலைகள், அரச திணைக்களங்களில் டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் ஆரம்பித்து வைப்பதை அடுத்த இரு படங்களிலும், பாடசாலைகளுக்கான குப்பைத் தொட்டிகளை வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகத்திடம் ஜி.ஏ.சந்திரசிறி கையளிப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: ரட்ணம்)

# உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்த தவறான பிரசாரங்களை தவிடுபொடியாக்கும் நிகழ்வு இது

## குருநகர் கடற்கரைவீதி திறக்கப்பட்ட போது அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஓக 2

உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவை எல்லாவற்றையும் தவிடுபொடியாக்கி - தகர்க்கும் நிகழ்வாகவே இந்தப் புதிய கடற்கரை வீதி திறக்கப்பட்டிருக் கிறது - இவ்வாறு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

குருநகர் ''சீநோர்'' சந்தைப் பகுதியிலிருந்து ஆரம்பமாகும் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் நீளமான புதிய கடற்கரை வீதியை மக்கள் பாவனைக்காக நேற்று திறந் துவைத்து உரையாற்றும்போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்: 10 வருடங்களுக்கு மேலாக எமது மக்கள் தொடர்ச்சியாக அகோரக் குண்டுவீச்சினாலும், ஷெல் வீச்சினாலும் பாதிக்கப்பட்டிருந்த காலம், தற்போது மேன்மை தங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் நம்பிக்கையான ஒளிமயமான வாழ்க்கையை நாம் வாழ்ந்து வருகின்றோம். இதற்காக உங்கள் சார்பில் அவருக்கு நான் இந்த நாளில் நன்றி கூறுகின்றேன்.

நாங்கள் இன்று பெற்றுள்ள சந்தோஷம் பல கஷ்டங்கள், துன்பங்கள், பலவற்றை இழந்தே பெற்றிருக்கின்றோம். இன்று இங்கு மீள்குடியேறிய மக்கள் மிகவும் சந்தோசப்படுகின்றார்கள்.

இங்கு மீளக்குடியேறிய மக்களுக்கு அரசினால் வழங்கப்படும் அனைத்து உதவிகளும் பெற்றுத்தரப்படும். முதல் கட்டமாக அனைத்து குடும்பங்களுக்கும் 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும். மேலும் அவர்களுக்குரிய 45 ஆயிரம் ரூபா பின்னர் வழங்கப்படும்.' உலர் உணவும் உங்களுக்குக் கிடைக்க வழி செய்வேன். மேலும் கட்டம் கட்டமாக வீட்டுத்திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அவை எல்லாவற்றையும் இந்த வீதி திறப்பு உடைத்தெறிந்திருக்கிறது. நாட்டில் அதி உயர் பாதுகாப்பு வலயம் என்று எதுவும் இருக்கக் கூடாது. தென்னிலங்கையில் மக்கள் எவ்வாறு சுதந்திரமாக வாழ்கின்றார்களோ அவ்வாறே வடபகுதி மக்களும் சுதந்திரமாக வாழ வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே யாழ்ப்பாணத்தில் இறுதியாக நடந்த கூட்டத்தில் கூறியிருந்தார். அதனடிப்படையிலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டு இணக்க அரசியல் மேற்கொள்ளவேண்டும். எதிர்ப்பு அரசியல் மூலம் எமது மக்களுக்கு எந்தவித அபிவிருத்தியும் கிடைக்கப் போவதில்லை - என்றார்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோரும் உரையாற்றினர். (ஒ-23-319)

## அலங்காரத் திருவிழா

சாவகச்சேரி, ஒக. 03

சாவகச்சேரி வாரிவளநாத சிவன் ஆலய அமிர்தபாஷினி அம்பிகைக்கு ஆடிப்பூர அலங்காரத் திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக் கிழமை ஆடிப்பூரத்தினத்தன்று அம்பிகைக்கு ருது சாந்தி விழாவுடன் திருவிழா நிறைவு பெறும். (ஒ-207)

# மரண அறிவித்தல்

## நல்லரசு முருகானந்தம் (தவில் வித்துவான்)



நல்லூரைப் பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லரசு முருகானந்தம் (தவில் வித்துவான்) நேற்று (02.08.2010) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லரசு - இராசம்பாள் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வீரலட்சுமி தம்பதிகளின் மருமகனும், பஞ்சநாயகியின் அன்புக் கணவரும், பிறேமானந், ஜெயானந்தன் (கனடா), கிருபானந்தன் (கனடா), மைதிலி, சுதானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுவர்ணாம்பிகை, மைதிலி, பாமதி (கனடா), தேவதாஸ், கேமலதா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதாயினி, தாட்சாயினி, கஜபரன், தர்மிளா, அஜந்தன், பார்த்தீபன், நிர்மலன், மிதுஷன் (கனடா), திருஷன் (கனடா), அபிநயா (கனடா), ஜெனுஷா, கனகாங்கி, ஜன ரஞ்சனி, பவித்திரன், டிலக்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.08.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த

# திருமலை நகரசபைத் தலைவர் உட்பட மூவர் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக அறிவிப்பு

### அதனை ஆட்சேபித்து யாழ். நீதிமன்றில் வழக்கு

திருகோணமலை, ஒக. 3

திருகோணமலை நகர சபைத் தலைவர் கௌரி முகுந்தன் மற்றும் நகரசபை உறுப்பினர் இரத்திவடிவேல் கண்மணியம்மா, பட்டணமும் சூழலும் பிரதேச சபைத் தலைவர் தங்கவேலாயுதம் காந்தரூபன் ஆகியோரை அவர்கள் வகிக்கும் பதவிகளில் இருந்தும் கட்சியில் இருந்தும் நீக்கி உள்ளதாகத் தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது.

கட்சிக்கு முரண்பாடான வகையில் செயற்பட்டனர் எனத் தெரிவித்து மூவரையும் பதவி விலக்கும் கடிதங்களைக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா அவர்களுக்கு அனுப்பியுள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கும் மாவை சேனாதிராசா கடிதம் அனுப்பியுள்ளார்.

இதேவேளை-

சம்பந்தப்பட்ட மூவரும் தம்மைக் கட்சியில் இருந்தும் பதவியில் இருந்தும் விலக்கியதற்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராசா ஆகியோர் இந்த வழக்கில் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ஒ-ஐ)

## இந்திய விசேட தூதர் தனியே பயணித்தாலேயே உண்மை நிலை புரியும்

கொழும்பு, ஒக. 3

மீளக்குடியமர்த்தல், இந்திய நிதி பயன்பாடு ஆகியன குறித்து ஆய்வுசெய்ய வரும் இந்திய விசேட தூதர் அரச வழிகாட்டலுடன் சென்றால் உண்மையை அறிந்து கொள்ள முடியாது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் செல்ல வேண்டும் எனக் கூட்டமைப்பு ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

''இந்தியப் பிரதிநிதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்துப்பேச முயற்சி மேற்கொள்ளும். இந்தியா 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துக்கொடுக்க இணங்கியுள்ளது. இது தொடர்பாகவும் இந்தியப் பிரதிநிதி ஆராய்வார். இந்தியப் பிரதிநிதி மீள்குடியமர்வு குறித்து உண்மையான நிலையை அறிந்துகொள்ளவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்'' - இப்படி அவர் மேலும் கூறினார். (சி)

# அரசியல் கைதிகளின் பெற்றோர் வாசுதேவவைச் சந்தித்து மனு

கொழும்பு, ஒக. 03

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் நேற்றுக் காலை ஜனாதிபதியிடம் கையளிக்கும்படி தம்மிடம் வழங்கிய மகஜரை உடனடியாக ஜனாதிபதிக்குத் தாம் அனுப்பி வைத்தார் என்று வாசுதேவ நாணயக்கார நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

வருடக்கணக்காக எதுவித விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் நேற்றுக் காலை ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்காரவை சந் தித்தனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பான விவரங்களையும் அவர்கள் அனுபவிக்கும் துயரங்களையும் விளக்கினர். அவர்களது விடுதலை தொடர்பாக ஜனாதிபதியிடம் கையளிக்கும்படி மகஜரொன்றையும் அவர்கள் வாசுதேவ நாணயக்கார எம்.பியிடம் கையளித்தனர்.

அந்த மகஜரை உடனடியாக ஜனாதிபதியிடம் சேர்ப்பிக்கத் தான் நடவடிக்கை மேற்கொண்டார் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். (சி)

### சாவகச்சேரி நீதிபதியாக அப்துல்லா பதவியேற்பு

தென்மராட்சி, ஒக.3

சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாக நூர் முகமட் முகமட் அப்துல்லா நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ஒ-207)

### ரூபா 25 ஆயிரம் கொடுப்பனவு பெறாதோருக்கு சிபார்சு செய்க!

நாவற்குழி, ஒக.3

நிக்கொட் அமைப்பால் யாழ். மாவட்டத்தில் ரூபா 25 ஆயிரம் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படாத குடும்பங்களின் எண்ணிக்கையை பதிவேடுகளுடன் ஒப்பிட்டு கொடுப்பனவுக்கு சிபார்சு செய்யுமாறு பிரதேச செயலர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-121)

# ஒலிம்பியாட் நெறிக்கு வடக்கிலிருந்து தேசிய மட்டத்துக்கு 6 மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக 3

யாழ்ப்பாணக் கல்வி வலய பயிற்சி நிலையத்திலும் வவுனியா வலய பயற்சி நிலையத்திலும் நடைபெற்ற தரம் 6 இற்கான கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் பயிற்சி நெறியின் தெரிவுப் பரீட்சையில் 6 பேர் வடமாகாணத்தில் இருந்து தேசிய மட்ட பயிற்சிக்குத் தெரிவாகியுள்ளனர்.

இந்த மாணவர்களுக்கான பயிற்சி நெறி இந்த மாதம் 9 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை மாதம்பே சேனநாயக்க ம.வி.யில் நடைபெறவுள்ளதுடன் பின்னர் நடைபெறவுள்ள தேசிய மட்டப் பரீட்சையில் பங்கு கொள்ளவுள்ளனர்.

இவர்களுக்கான அறிவுறுத்தல் கடிதங்களை யாழ். வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பகுதியில் இன்று காலை 9 மணிக்கு பெற்றுக்கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

பயிற்சி நெறிக்குத் தெரிவானோர் விவரம் வருமாறு:-

**கணிதம்** - முதலாம் இடம்- அலெக்சாண்டர் கஸ்ரோ டிறோன் (புனித பத்திரிசியார் கல்லூரி), 2 ஆம் இடம் புஸ்பாகரன் பிருந்தாபன் (கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, 3 ஆம் இடம் - இரவிச்சந்திரன் தவதஞ்சா( வவுனியா இறம்பைக்குளம் மகளிர் ம.வி.), **விஞ்ஞானம்** - முதலாமிடம் - பரமானந்தம் கஸ்தூரி (வேம்படி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம் பாலச் சந்திரன் அபியுக்தன் (வவுனியா - தமிழ் ம.வி.), 3 ஆம் இடம் - இராஜ சேகரன் தாக்சாயினி (வேம்படி மகளிர் கல்லூரி). (ஒ-10)

### ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைகள்:

# முல்லைத்தீவு மாவட்ட பரீட்சார்த்திகளின் அனைத்து விவரங்களும் பார்வைக்கு

முல்லைத்தீவு, ஒக 3

எதிர்வரும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றில் தோற்றவிருக்கும் முல்லைத்தீவு மாவட்ட பரீட்சார்த்திகளின் நலன் கருதி -

பரீட்சை நிலைய விவரங்கள் வடமாகாணத்துக்கு உட்பட்ட 12 வலயக் கல்வி அலுவலகங்களிலும் யாழ்ப்பாணம், வவுனியா மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைகளிலும் விளம்பரப் பலகைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் தங்களுக்குரிய சரியான பரீட்சை நிலையத்தை அறிந்து பரீட்சைக்குத் தோற்றுமாறும் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலதிக விவரம் தேவைப்படின் 0770523105 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## இராமநாதபுரத்தில் இன்று இடம்பெயர் சேவை

கண்டாவளை, ஒக. 3

கிளிநொச்சி, வட்டக்கச்சி, இராமநாதபுரம் மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக (இடம் பெயர் சேவை) இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதபுரம் மேற்கு. அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

காணி தொடர்பான பிரச்சினைகள் உள்ளவர்கள் இங்கு தொடர்பு கொண்டு தமது காணி தொடர்பான பிணக்குகளை தீர்த்துக்கொள்ளலாமென கேட்கப்பட்டுள்ளது. (1-432)

### கோப்பாய், கல்வியங்காடுபகுதிகளில்

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 13பேர் சுற்றிவளைப்பில் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஒக 3

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 13 பேருக்குத் தண்டப் பணமாக தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து யாழ்.நீதிவான் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

யாழ்.புறநகர் மின் பாவனையாளர் சேவை நிலைய மின் அத்தியட்சகர் தலைமையிலான குழுவினர், கோப்பாய் தெற்கு இராமநாதன் கலட்டி, இராஜ வீதி பகுதி மற்றும் கல்வியங்காடு ஆகிய இடங்களில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 13 பேர் தேடுதலில் கைதுசெய்தனர்.

இவர்கள் நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிபதி அ.பிறேம்சங்கர் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். சம்பந்தப்பட்ட 13 பேரையும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறும் தவறின் 15மாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. அத்துடன் சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெற்றவர்களது மின்சாரப் பாவனைக்கு ஏற்ப 4 ஆயிரம், 5 ஆயிரம், 6 ஆயிரம் ரூபா நஷ்டஈடாக மின்சார சபைக்கு செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது. (ஒ-14)

## மரண அறிவித்தல்

### திருமதி சுந்தராம்பிகை இராமசாமி



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் புது வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுந்தராம்பிகை இராமசாமி அவர்கள் நேற்று (02.08.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி (ஆயுள் வேத வைத்தியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (செல்லப்பா வைத்தியர்) - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (அனலைதீவு தெற்கு முருகமூர்த்தி கோயில்) மற்றும் செல்லம்மா காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் விசாலாட்சி, கனகம்மா காலஞ்சென்ற இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜநாயகி, இலங்கை நாயகி (ஆயுள்வேத மருந்தாளர், யாழ்.மாநகர சபை), இராஜேஸ்வரி (ஆசிரியை, இந்து மகளிர் கல்லூரி), இரத்தினேஸ்வரி (மருந்தாளர், யாழ்.மாநகரசபை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற விக்னராஜா மற்றும் சுந்தரலிங்கம் (வலி.வடக்கு பிரதேச சபை) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற கௌரிபாலன் (யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம்) மற்றும் கௌசலா, செந்தூரன், திருக்குமரன், திருவரங்கன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புது வீதி,
ஆறுகால்மடம்.

(சி/56942)

தகவல்:
குடும்பத்தினர்.

# வடக்கில் சிங்கள......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயமா எனத் தெரியவில்லை.

அரசு இந்த மாதிரியாக செயற்பட்டால் இனங்களுக்கிடையே எவ்வாறு நல்லிணக்கம், ஒற்றுமை ஏற்பட முடியும்?

இது குறித்து தென்பகுதி மக்களுக்கு ஊடகங்கள் அறியத்தர வேண்டும்.

கிளிநொச்சி சாந்தபுரம், இந்துபுரம், திரு முருகண்டி, கோம்பாபுலவு, சன்னார் ஆகிய பகுதி மக்கள் மீளக்குடியேற முடியாமல் இருக்கின்றனர். இவர்களது மீள்குடியமர்வை இராணுவம் தடுக்கின்றது. இது தொடர்பாக அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் தெரிவித்தபோது, கூரைத் தகரங்கள் வந்து சேராமையே இதற்குக் காரணமெனத் தெரிவித்தார்.

இதன் பின்னர் அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மீள்குடியமர்வு குறித்து வெளியிட்ட கருத்து எம்மையும் இடம்பெயர்ந்த மக்களையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இது தொடர்பாக நாங்கள் ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்தோம். இருந்தும் இதுவரை எதுவித பதிலும் இல்லை.

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த 288 குடும்பங்கள் சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதேபோல் அப்பகுதியிலுள்ள 8 கிராமங்களைச் சேர்ந்த 400 குடும்பங்களும் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

திருமுருகண்டியைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர அனுமதி மறுக்கப்படுகின்றது. இவர்கள் அனைவரும் 1977, 1983 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இன்க்கலவரம் காரணமாக மலையகப் பகுதிகளில் இருந்து திருமுருகண்டியில் குடியேறிய இந்திய வம்சாவளியினராவர்.

சாந்தபுரம் பாடசாலையில் 281 குடும்பங்களைச் சேர்ந்த 980பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் செட்டிக்குளம் முகாமிலிருந்து கடந்த மே 7ஆம் திகதி கிளிநொச்சிக்கு அழைத்துவரப்பட்டு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்கவைக்கப்பட்டனர்.

பின்னர் அவர்கள் சாந்தபுரம் வித்தியாலயத்துக்கு அழைத்து வரப்பட்டனர். ஜூலை 12ஆம் திகதி இவர்கள் தமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கப்பட்டனர். பின்னர் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். இதேபோல் இரண்டு தடவைகள் இவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

கிளிநொச்சியில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றபோது ஜனாதிபதியைச் சந்தித்து தமது நிலை குறித்து எடுத்துரைத்து மகஜரொன்றையும் அவர்கள் கையளித்தனர். அவர்கள் மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் என ஜனாதிபதியும் உறுதியளித்தார். ஆனால் இது தொடர்பாக எதுவும் ஆக்கபூர்வமாக நடைபெறவில்லை.

கிளிநொச்சி பொன்னகரைச் சேர்ந்த 35 குடும்பங்களைத் தமது சொந்த வீடுகளில் குடியமர விடாமல் இராணுவத்தினர் விரட்டியடித்துள்ளனர். இவர்கள் இப்போது மரங்களின் அடியில் அவல வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்கள் குடியிருந்த வீடுகள் புலிகள் நிர்மாணித்தவை எனக் கூறியே இவர்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் பலர் விதவைகள். ஏனையோர் ஊனமுற்றவர்களாவர்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் அறியும் உரிமையைப் பாதுகாக்க நாடாளுமன்றில் வருகிறது தனிநபர் பிரேரணை

## ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பிப்பார்

கொழும்பு, ஒக. 03

தகவல் அறியும் உரிமையைப் பாதுகாக்கும் சட்டமூலம் ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இச்சட்டமூலம் நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது என்றும், இது தனிநபர் பிரேரணையாக ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்படும் என்றும் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான க்ஜந்த கருணாதிலக நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஊடகவியலாளர்களின் நலன்களுக்காக ஊடக அபிவிருத்தி அதிகாரசபை ஒன்றை அமைக்கவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. இந்த அதிகாரசபை தொடர்பில் எமக்கு நம்பிக்கையில்லை.

நாம் ஒன்றிணைந்தே அரசியல் யாப்பின் 17ஆவது திருத்தச்சட்டத்தை அங்கீகரித்தோம். ஆனால் அந்த 17 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாது அரசு காலத்தை இழுத்தடிப்பதைப் போலவே தான் இந்த அதிகார சபையும் அமையும்.

இந்த அதிகார சபையை அமைப்பதற்கு முன் ஊடகங்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை அரசு தீர்த்து வைக்க வேண்டும். மஹிந்த சிந்தனையில் வழங்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கான வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.



இதுபோக, மஹிந்த சிந்தனை பகுதி இரண்டிலும் ஊடகவியலாளர்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஓய்வூதியம் மற்றும் வீடுகள் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் என்றும் அந்தச் சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் எதுவும் இன்னும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் ஊடக அபிவிருத்தி அதிகாரசபை அமைக்கப்படுவது ஒரு கேலிக் கூத்தாகும். எமது ஆட்சியின்போது தகவல் அறியும் உரிமையைப் பாதுகாக்கும் சட்ட மூலம் ஒன்றைக் கொண்டுவர நாம் ஏற்பாடுகளைச் செய்தோம். அப்போது எமது ஆட்சி கவிழ்க்கப்பட்டதால் எம்மால் அதைக் கொண்டுவர முடியவில்லை.

இருப்பினும், அந்தச் சட்டமூலத்தைத் தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்க எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார். இது நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது - என்றார். (அ-சி)



*கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உரையாற்றுவதைக் காணலாம். அருகில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் காணப்படுகிறனர்.*

# ஜே.வி.விக்கு பொது மன்னிப்பு வழங்கியது போன்று 11,000 தமிழ் இளைஞர்களுக்கும் அதனை வழங்க வலியுறுத்து

கொழும்பு, ஒக. 03

ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கியது போல் தடுத்து வைக்கப்பட்டுள்ள பதினோராயிரம் தமிழ் இளைஞர்களுக்கும் மன்னிப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை கொழும்பு றேனுகா ஹோட்டலில் நடைபெற்றது. அதில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வெலிகந்த, மருதமடு உட்படப் பல முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் 11 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கும்படி நாடாளுமன்றம் உட்படப் பல்வேறு இடங்களில் பேசி வருகின்றோம்.

ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்க அப்போதைய அரசு நடவடிக்கை மேற்கொண்டது. அதே நடைமுறையைப் பின்பற்றி தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (சி)

## பெருந் திருவிழா

தென்மராட்சி,ஒக.3

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய பெருந் திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

ஒகஸ்ட் 23ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

# குடும்பநல மருத்துவ மாது தர்சிகா மரணம்

# மீட்கப்பட்ட உடல் உறுப்புக்கள் நேற்று கொழும்புக்கு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், ஒக 3

வேலணை அரசினர் வைத்தியசாலையின் குடும்பநல மருத்துவமாது தர்சிகாவின் சடலத்தில் இருந்து மாயமாகிப் பின்னர் கொட்டடிப் பகுதியில் இருந்து புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட சில உறுப்புக்களின் பாகங்கள் நேற்று கொழும்புக்கு அனுப்பப்பட்டன.

ஊர்காவற்றுறை நீதிவான் இ.வசந்தசேனன் முன்பாக இந்த மரணம் குறித்த விவகாரம் எடுக்கப்பட்டபோது, தர்சிகாவின் குறிப்பிட்ட உடல் உறுப்புக்களை பரிசோதனைக்கு உட்படுத்த கொழும்புக்கு அனுப்ப அனுமதி வழங்கப்பட்டது.

மீட்கப்பட்ட உடல் உறுப்புக்கள் தர்சிகாவின் உடையனவா? என்பதைக் கண்டறிய மரபணுச் சோதனை நடத்த உத்தரவு வழங்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.சயந்தன் மனுச்செய்தார். இதற்கு நீதிபதி அனுமதி வழங்கினார்.

தர்சிகாவின் சடலத்தை 'எம்பாம்' செய்தமைக்காக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட யாழ்.ஆஸ்பத்திரி சிற்றூழியர்கள் இருவரிடமும் நேற்று வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன. அதையடுத்து இருவரும் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

அதேவேளை -

தர்சிகாவின் சில உறுப்புக்களின் பாகங்கள் நேற்று மாலை 6.30 மணிக்கு பொலிஸ் பாதுகாப்புடன் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன. தர்சிகாவின் தந்தையும் நீதிமன்ற உத்தரவின்பேரில் 'எம்பாம்' செய்த ஊழியர்களில் ஒருவரும் உடன் செல்கிறார்கள். (ஒ-ஐ)

## புலி உறுப்பினர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் உள்ள தடுப்பு முகாம்களிலும் 700 பேர் காலி, பூசா போன்ற சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் -

இவர்கள் மீது சிங்களக் கிராமங்களைத் தாக்கியமை, அப்பாவிப் பொதுமக்களைப் படுகொலை செய்தமை, மூத்த பாதுகாப்பு அதிகாரிகளைக் கொலை செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட உள்ளன என்றும் -

இணையத் தளங்களில் செய்தி வெளியாகி இருந்தது.

தாக்குதல்களுக்காகத் தகவல்களைத் திரட்டியவர்கள், வெடிபொருள்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குக் கடத்தி வந்தவர்கள் போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது.

நீண்ட விசாரணையின் பின்னர் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலீஸாரை ஆதாரம் காட்டி அந்தச் செய்தி வெளியாகி இருந்தது.

இந்தத் தகவல்கள் அனைத்தையும் மறுத்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜெயக்கொடி, ஒரு சில உறுப்பினர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கே தாம் தயாராக இருக்கின்றனர் என்று கூறினார்.

இதற்கிடையே தீவிர புலி உறுப்பினர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஏனையவர்கள் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்படுவர் என்றும் அரசு தொடர்ந்து கூறிவருகின்றது. (அ-சி)


NEW EDUCATION WORLD Anaipanthi

INORGANIC

By G.Beno. Rajothayan(B.S.c)

ஆரம்பம்: 04.08.2010 Thu 6.00Pm



THE SCIENCE CORNER

CLOCK TOWER LANE, JAFFNA

| 2012 A/L BIOLOGY<br>அங்கிகளின் பல்வகைமை | 2011 A/L BIOLOGY<br>PAPER CLASS<br>அங்கிகளின் பல்வகைமை |
|---|---|
| ஆரம்பம்:<br>04.08.2010 (புதன்)<br>Mon.- 4.30 - 5.45 p.m.<br>WED, THU.- 5 - 6 p.m. | BATCH - I<br>TUE.- 5 - 6 p.m.<br>BATCH - II<br>WED - 3 - 4 p.m. |

BY: [illegible]



வெளிவந்து விட்டது

இந்த வாரம் 06.08.2010 அன்று நடைபெறவுள்ள வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் கல்வி சாராத ஊழியர் வெற்றிடங்களுக்கான பரீட்சை வழிகாட்டி

பி. உமாசங்கர்

பூபாலசிங்கம் புத்தகசாலை

பஸ் நிலையம், யாழ்ப்பாணம். வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம்.


## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தார்.

அந்த நிகழ்வில் பேசிய தளபதி, யாழ். குடாநாட்டில் எந்தவொரு இடத்திலும் உயர் பாதுகாப்பு வலயம் என்று ஒன்று இருக்கக் கூடாது என்பதற்காக நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதன் தொடக்கமாகவே உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த இந்த வீதி மக்கள் பாவனைக்கு இன்று திறக்கப்பட்டிருக்கிறது - என்றார்.

இதுவரை காலமும் நீங்கள் பட்ட துன்பங்களை நாங்கள் நன்கு அறிவோம். எங்களால் முடிந்தவரை உங்களது துன்பங்களைப் போக்க வழி செய்வோம். அதனடிப்படையில் 15 வருடங்களின் பின்னர் நீங்கள் உங்கள் சொந்த இடங்களில் குடியமர அனுமதித்திருக்கிறோம் -

**வடமராட்சி கிழக்கு உயர்பாதுகாப்பு வலயம் அடுத்த மாதம் நீக்கப்படும்**

30 வருட காலமாக நீங்கள் பட்ட துன்பங்கள், தொழில் ரீதியாக எதிர்நோக்கிய பிரச்சினைகள் என்பவற்றைக் கடந்து இன்று எம்முடன் இணைந்திருக்கிறீர்கள் -

உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கும் எமது நடவடிக்கையின் அடுத்த கட்டமாக அடுத்த மாதம் வடமராட்சி கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்படும் -

உங்களுக்கு மிகச் சிறந்த அரச நிர்வாகிகள் கிடைத்துள்ளார்கள். உங்களது அரச அதிபராகப் பதவியேற்றுள்ள இமெல்டா சுகுமார் என்னுடன் இணைந்து முல்லைத்தீவில் பணியாற்றியவர். அங்கு மக்களை மீளக்குடியமர்த்துவதில் முழுமூச்சாகச் செயற்பட்டவர் - என்று மேலும் தெரிவித்தார் மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க.

இதேவேளை இரண்டு வாரங்களுக்கு முன்னர் பத்திரிகையாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த அரசின் ஊடகப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வடக்கு கிழக்குப் பகுதியில் இருந்து உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்க முடியாது என அடித்துக் கூறியிருந்தார். நாட்டின் பாதுகாப்பே எல்லாவற்றையும்விட முதன்மையானது என்றும் அவர் தெரிவித்திருந்தார். (அ-23-319)

## சீனா வழங்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு அமைக்கப்பட்ட விகாரைகளில் ஒன்று முழங்காவிலுக்குக் கிழக்கே ''பழைய வன்னி'' காட்டுக்குள் படையினரால் பராமரிக்கப்பட்டு வருவதும் தெரிய வந்துள்ளது.

படையினரால் காடுகளுக்குள் வேலைக்காக அழைத்துச்செல்லப்பட்ட பொதுமக்கள் ஊடாக இத்தகவல் கசிந்துள்ளது.

குடியிருப்புக்களைத் துரிதமாக அமைக்கும் பணிகளுடன் புத்த கோயில்களை அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருவதாக நம்பிக்கையாக அறியப்படுகிறது.

ஒரு லட்சம் வரையான சிங்களக் குடும்பங்கள் வன்னிப்பகுதியில் குடியமர்த்தப்படுவர் என்று தேர்தல் காலத்தில் ஜனாதிபதி கூறிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-10)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலையில் காலை 10.30 மணியளவிலும் குண்டுகள் வெடித்தன.

இந்தப் பகுதிகள் அனைத்தும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு குடியிருப்பதற்கு உகந்தவை என உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே மக்கள் இங்கு மீளக்குடியமர அனு மதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-க-405)

## அநுராதபுரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டிருந்தனர்.

இளைஞர்கள் மீதான வழக்குகள் தொடர்பாக யாழ். சட்டத்தரணிகள் சங்கத் தலைவி சாந்தா அபிமன்னசிங்கம் நேற்று முன்தினம் சட்டமா அதிபருடன் கலந்துரையாடினார்.

பிரஸ்தாப இளைஞர்களின் வழக்குகளை அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றுவதால் ஏற்படும் பாதிப்புக் குறித்து சட்டமா அதிபருக்கு அவர் விளக்கிக்கூறினார்.

அதன் பயனாக பத்துப் பேருக்கும் எதிரான வழக்குகளை யாழ்ப்பாண நீதிமன்றத்தில் விசாரணை செய்ய சட்டமா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார். (ஒ-ஐ)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org